தாசிப் பெண்

முதலிய கதைகள்

ஏ. எஸ். பி. ஐயர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.

அல்லயன்ஸ் கம்பெனி
யிலாப்பூர் : சென்னை

[ரூ. 1-12

பங்கிம் சந்திரர் அரிய நூல்கள்	சரத்சந்திரர் அரிய நூல்கள்
விஷ விருக்ஷம்	விஜயா
ஆனந்த மடம்	அமூல்யன்
துர்க்கேசநந்தினி	ஸௌதாமினி
மாதங்கினி	லலிதா
தேவி சௌதுராணி	வைகுந்தன் உயில்
கிருஷ்ணகாந்தன் உயில்	இந்துமதி
கபாலகுண்டலா	ஹேமநளினி
இந்திரா	அனுபமா
ரஜனி	இருளில் ஒளி
ஹிரண்மயி	காசிநாதன்
ராதாராணி	மாதவி
மிருணாளினி	சந்திரநாத்
ராஜஸிம்ஹன்	தேவதாஸ்
சந்திரசேகரன்	ஹேமாங்கினி
வாழ்க்கை வரலாறு	சரத்சந்திரர் கதைகள்

★

பொருளடக்கம்

		பக்கம்
1. தாசிப் பெண்	...	1
2. ஒற்றை மரம்	...	35
3. எல்லாம் வீணே	...	61

கபீர் அச்சுக்கூடம், சென்னை
(19441229·5·1)

தாசிப் பெண்

சம்பகவதி கனகவல்லியின் பெண். வெகு அழகாக இருப்பாள். நடுத்தர உயரம்; அதற்கேற்ற பருமன். தாமரை இதழ் விழிகள்; முத்துப்போன்ற பற்கள்; பவளவண்ணங் கொண்ட இதழ்கள். மாரனது வில்லொத்த புருவம். மேனியோ பத்தரைமாற்றுத் தங்கந்தான். கருத்து அடர்ந்த பட்டுப்போன்ற கூந்தல். ஸம்ஸ்கிருத கவிகள் வர்ணிக்கும் ரீதியில் சௌந்தரியமே உருவாய் விளங்கினுள். உயர்ந்த தினுசுக் காசிப்பட்டாடை உடுத்து விண்ணீல ரவிக்கை அணிந்திருப்பாள். கழுத்தில் நல்முத்துமாலை; வைரத்தோடுகள் காதில்; மூக்கில் நீலக்கல் பேசரி; இடது கைவிரலில் பச்சைக் கல் மோதிரம்; நெற்றியில் சிவந்தொளிரும் குங்குமப் பொட்டு; மை தீட்டிய விழிகள். வெற்றிலைக்காவி சற்றே படிந்து விளங்கும் இதழ்கள்; எல்லாம் சேர்ந்து அழகுக்கு அணிகலமாய்த் திகழ்ந்தாள்.

ஒரே ஒரு குறைதான். அவ்வளவு ஆரோக்கியமும் ஐசுவரியமும் அழகும் இருந்தும் அவள் வதனத்தில் ஏனே துயர் குடிகொண்டிருந்தது? அது ஸமீபத்தில் ஏற்பட்டதென்றே, தன்னைக் குறித்ததுதான் என்றே சொல்வதற்கில்லை. வழக்கமாக, நம்நாட்டுக் குழந்தைகளின் முகத்தில் காணும் சோகமே — இவ்வுலகிலேயே, பல நூற்றுண்டுகளாகத் தாழ்வுற்று அடங்கி, 'கோடிக்கணக்கான உயிர்களை ஈன்றேம்; பின்னும் ஈன்றெடுப்போம்' என்னும் அறிவு படைத்த ஒரு ஜாதியாரின் துன்பமே — திருவாங்கூரின் தென்பாகத்திலும் ராயல சீமையிலும் மத்திய இந்தியாவிலுமுள்ள கரம்புகளில் ஊளையிடும் பேய்க்காற்றின் துயரமே — அவள் முகத்தில் தீவிரமாகப் பிரதிபலித்தது.

சம்பகவதிக்கு, 'நாம் ஏன் இந்த ஜாதியில் பிறந்தோம்?' என்று மிகவும் வருத்தம். பெயருக்கு, கோயிலில் நாட்டியமாடும் தேவதாஸி என்றாலும் அவர்கள் எல்லாரும் அறிய நடத்துவது விபசாரந்தானே? கனகவல்லி எந்தக் கோயிலிலும் நாட்டியமாடினதில்லை. அவள் ஆறு வயசுக் குழந்தையாய் இருக்கும் போதே அவள் தாயார் அவளை அநாதரவாக விட்டுச் சென்றாள். அவள் பாட்டி அவளைச் சென்னைக்கு அழைத்துக்கொண்டு போனாள். அங்கே அவளைச் சரியான தேவடியாள் ஆகும்படி

பழக்கினுள். அந்த வியாபாரத்திலும் அவளை அமர்த்தி வைத்துவிட்டுத்தான் இறந்தாள். அப்புறம் கனகத்தின் பாடு அதிர்ஷ்டந்தான்; ஏராளமாகப் பணம் குவித்துவிட்டாள். சென்னையிலுள்ள பெரிய மனுஷ்யர்கள் எல்லாம் — பெரிய மனுஷ்யர்களாய் இருந்தால் நல்லவர்களாய் இருக்கவேண்டு மென்று அர்த்தமா என்ன? — அவளுக்கு வேண்டியவர்கள். அவள் தன் குழந்தை சம்பகத்தை ராஜபோகத்திலேயே வளர்த்தாள்.

தன்னுல் இயன்றவரை நல்ல சிக்ஷையும் சொல்லி வைத்தாள் — பொது அறிவு, ஸங்கீதம் எல்லாவற்றிலும். குழந்தை சம்பகம் வீணை வாசிக்கும்போதும் 'கோபிகா கீதம்' பாடும்போதும் பார்க்கவேண்டுமே! கனகவல்லியைத் தேடிக் கொண்டுவந்து அவளுக்காகக் காத்திருக்கும் மோசமான லோலாயிகள்கூடப் பொழுது போவதே தெரியாமல் அக் குழந்தை பாடும் திவ்யகானத்தைக் கேட்டுக்கொண்டிருப் பார்கள்.

சம்பகவதிக்கு இப்போது வயசு பதினுறு. அவளுக்கு ஆறு வயசு இருக்கும்போது அவளுக்கும் பள்ளிக்கூடத்தில் அவளோடு படிக்கும் ஒரு பெண்ணுக்கும் சண்டை. அந்தப் பெண் சம்பகத்தை, "அடி போடி தேவடியா மகளே!" என்று திட்டினுள். சம்பகம், பாவம், நேராகத் தன் தாயாரிடம் போய், "எங்கள் அப்பா யார், அம்மா?" என்று கேட்டாள். கனகம், "அவர் ரொம்பப் பெரிய மனுஷ்யர், அம்மா! வேளை வரும்போது அவர் யாரென்று சொல்கிறேன்" என்று பதில் அளித்தாள். இப்படி அடிக்கடி சம்பகம் கேட்டுக்கொண்டே இருந்தாள். அவள் தாயாரும், "இன்னும் அதற்கு வேளை வரவில்லை, வரவில்லை" என்று தட்டிக் கழித்துக்கொண்டே வந்தாள். அவளுக்குப் பன்னிரண்டு வயசு ஆன பிற்பாடுதான் தன் தாயார் என்ன தொழில் செய்கிறுள், சிரித்துக்கொண்டே குதூகலமாகவும் ஆடம்பரத்துடனும் உடுத்திக்கொண்டுவரும் பெரிய மனுஷ்யர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் இவை யாவும் புரிய ஆரம்பித்தன. பள்ளிக்கூடத்தில் கௌரவமான குடும்பப் பெண்களோடு பழகி வந்தாள். அவள் தோழிகள் முக்கால் வாசிப்பேருக்குக் கல்யாணம் ஆகியும் பார்த்திருக்கிறுள். அவளுக்குப் பதினுறு வயசு நிரம்பிப் பள்ளிக்கூடத்தை விட்ட பிறகு ஒருநாள், "எனக்கு எப்போது, அம்மா, கல்யாணம்? வயசு பதினுருகிறதே! பள்ளிக்கூடப் படிப்பும் முடிந்து விட்டதே! என் சிநேகிதிகளுக்கெல்லாங்கூட ஆகிவிட்டதே!" என்று தன் தாயாரைக் கேட்டாள். கள்ளங்கவடு அறியாமல்

அவள் இப்படி வினவியதும் கனகவல்லி தன் பெண்ணையே வியப்புடன் நோக்கினாள். கடைசியில், "உனக்கேனடியம்மா அந்தக் கவலையெல்லாம்? உனக்கு ஏற்றவனாகக் கொண்டு வருகிறேன், பார். ஆனால் உலகத்தாரைப்போல் கல்யாணம் என்று பண்ணிக்கொள்வது ஸாத்யமில்லை" என்றாள்.

இதைக் கேட்டதுமுதல் சம்பகத்துக்கு ஒரே கலவரந்தான். அன்று மத்தியான்னமே அவள் தனக்கு மிகவும் வேண்டிய உபாத்தியாயினியாகிய கிருஷ்ணாபாயின் வீட்டுக்குச் சென்று, "எங்கள் அம்மா ஏன் அப்படி அதிசயமாகப் பார்த்தாள்? ஏன் அப்படிப் பதில் சொல்லவேண்டும்?" என்று கேட்டாள். கிருஷ்ணாபாய் அவளை உள்ளே அழைத்துப்போய்க் கண்களில் நீர்ததும்ப, "குழந்தாய்! இந்தப் பாழும் சமூகத்தினிடம் அகப்பட்டுக்கொண்டு என்னைப்போலவே நீயும் தவிக்கிறாய்! ஆனால் என்னைவிட மகா மோசமாக இருக்கிறது உன் தலைவிதி! நான் கைம்பெண்ணாகவே காலங் கழிக்கவேண்டி யிருக்கிறது; நீ விபசாரம் பண்ணவேண்டியிருக்கிறது! இதுதான் வித்தியாசம்!" என்றாள். "அப்படியானால், எனக்குக் கல்யாணமே ஆகாதா?" என்று கேட்டாள் சம்பகம்.

"ஊஹூம்; உன் தாயார் தடுக்கிறவரை முடியவே முடியாது!"

"ஏன் அவள் தடுக்கவேண்டும்?"

"ஏனென்றால், உன்னை விபசாரம் பண்ணவைத்தால் அவளுக்கு லாபம். கண்ட பேரும் — கல்யாணம் ஆனவர்கள் ஆகாதவர்கள் எல்லோரும் உன்னண்டை வருவார்கள்; உன்னைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிப் பொன்னும் வெள்ளியுமாய்க் கொண்டு கொட்டுவார்கள் உன் தாயாரிடத்தில். நீ கல்யாணம் பண்ணிக்கொண்டு குடியும் குடித்தனமுமாக அமர்ந்தால் ஒரே ஆசாமியோடுதான் சுகமாக வாழமுடியும்; அவனுக்கு உன்மேல் உரிமையும் உண்டு; மற்றவர்களுக்குத்தான் அது கிடையாதே!"

"எங்கள் அம்மாவுக்கு என் சுகத்தைவிடப் பணமா பெரிது என்கிறீர்கள்? வாஸ்தவமாக என்மேல் ஆசை இல்லையா அவளுக்கு? அப்படி என்னைக் கெடுக்கவா பார்ப்பாள்? சொல்லுங்களேன்."

"குழந்தாய்! உனக்கு நான் என்ன பதில் சொல்வேன்; கல்யாணம் ஆகாதுபோனால் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கலாம் அவள். தமாஷாகக் காலங்கழித்தே அவளுக்குப் பழக்கம். வேறுவிதமாக வாழ்ந்

திருந்தால்தானே தெரியப் போகிறது? கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமே அவளுக்கு இல்லைபோல் இருக்கிறது. அதனால்தான் நீயும் இப்படியே நிம்மதியாக வாழ்வதுதான் சரி என்பது அவள் அபிப்பிராயமாய் இருக்கலாம்."

"நான், 'கல்யாணம் பண்ணிக்கொண்டு குடியும் குடித் தனமுமாக இருப்பேன்' என்று சொன்னால் கட்டாயம் ஒப்புக் கொள்வாளோ இல்லையோ?"

"குழந்தாய்! ஒப்புக்கொள்வாள் என்று தோன்றவில்லை. ஏதோ தமாஷுக்குச் சொல்கிறாய் அல்லது அறியாத பெண் ஏதோ உளறுகிறாள் என்றுதான் எண்ணிக்கொள்வாள். அவள் நீ சொல்வதைக் கேட்கவே மாட்டாள் பார். தன் இஷ்டப்படி நடந்தால்தான் நீ சுகமாய் வாழ்வாய் என்று அவளுக்கு எண்ணம்."

"நீ இப்போது நடத்துகிற வாழ்க்கை சுத்தமாக நன்றாகவே இல்லை! மகா மோசம்; பாவங்கூட. 'நான் கௌரவமாகக் கல்யாணம் பண்ணிக்கொண்டுதான் வாழப் போகிறேன்' என்று சொன்னால்கூட அவள் என்னை வற் புறுத்த முடியும் என்கிறீர்களா?"

"தேவடியாள் வீடுகளிலேயே இப்படித்தான். தாய் மார்கள் பெண்களுக்கு இஷ்டமே இல்லாதிருக்கும்போது அவர்களை வற்புறுத்தித் தங்கள் வழிக்குக் கொண்டுவருகிறார் கள்" என்றாள் கிருஷ்ணபாய்.

"மோசம்! படுமோசம்! இதை ஏன் சமூகம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறதோ தெரியவில்லையே!" என்றாள் சம்பகம்.

"ஏனென்றால், உன் தாயாரைப்போலவே அதற்கும் மூளை திரும்பிப்போய் இருக்கிறது; தான் பிடித்ததே பிடி என்று மட்டத்தனமாக நடந்துகொள்கிறது...ரொம்பப் படித்தவர்கள் என்று பெயரெடுத்த சில பெரிய மனுஷ்யர்கள்கூட இந்த அக்கிரமத்தை ஆதரிக்கிறார்கள் என்றால் பாரேன்! மிருக இச்சைக்கு அடிமைகளாகக் கிடக்கும் தாசிப் பெண்களை இவர்கள் என்ன ஸ்துதி பண்ணுகிறார்கள் தெரியுமா? அவர் களால்தான் கற்பே நிலைத்திருக்கிறதாம்; தாசிப்பெண்கள் இந்த ஆபாசத்தை யெல்லாம் தாங்களே ஏற்று அனுபவிக்கி றார்களல்லவா? இல்லாவிட்டால் குடும்பத்திலேயே இந்த ஊழல் புகுந்துவிடுமே; இதுதான் இவர்கள் வாதம். லோலா யிகள் தேவடியாளோடே நிற்கிறார்கள்; அங்கே நடக்கிற ஆபாசத்தைப் பார்த்துப் பார்த்துப் பழகிப் போய்விடுகிறது

அவர்களுக்கு. கற்புக்குரிய மதிப்பையே மறந்து குடும்பப் பெண்களைக் கெடுக்கப் பார்க்கிறார்கள்! இது இந்த மடையர் களுக்குத் தெரியவில்லையே! அப்படி இவர்கள் வாதம் சரி என்று வைத்துக்கொண்டாலும் மற்றவர்களுக்காகச் சில பெண்களை மட்டும் ஏன் பறி கொடுக்க வேண்டும்? ஒரு ஜாதியையே இப்படிப் பாழ்பண்ணச் சமூகத்துக்கு என்ன உரிமை உண்டு; கேட்கிறேன்?" என்றாள் கிருஷ்ணாபாய்.

"நான் கல்யாணம் பண்ணிக்கொள்வதென்று தீர் மானித்துவிட்டேன். அம்மாவுக்குச் சரிப்படாவிட்டாலும் பண்ணிக்கொண்டுதான் தீருவேன். அம்மாவைப்போல் இப்படி வாழப்போவதில்லை. மானம் போவதைவிடச் சாவதே மேல். கடைசி வரைக்கும் நான் சுத்தமாகத்தான் இருந்து தீருவேன்" என்றாள் சம்பகம்.

கிருஷ்ணாபாய் சம்பகத்தை மார்போடு அணைத்துக் கொண்டு, "இதுதான் சிறந்த லக்ஷியம்! ஆனால் இதைக் கடைப்பிடிப்பதுதான் மிகவும் சிரமம். கொஞ்சம் பேர் தான் உனக்கு ஒத்தாசையாக இருப்பார்கள், இவ் விஷயத்தில். அவர்களிலும் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள யாராவது முன்வருவார்கள் என்று நினைக்கிறாயா? ஊஹூம்! மறைவாக உங்களிடம் வர ஆவல் இருந்தாலும் கௌரவமான மனுஷ்யர்கள் என்று பெயரெடுத்தவர்க ளாயிற்றே! உங்கள் ஜாதியில் பெண் கட்டிக்கொள்வ தென்றால் அருவருப்பாகத்தானே இருக்கும் அவர்களுக்கு? அதோடு, உன் தாயாரை விரோதித்துக் கொண்டாயானால், சட்டென்று இப்போது இருக்கிற ராஜபோகம் போய் நீ ஏழையாய் அவதிப்பட வேண்டியதுதான்; அவள் மகா முரடி; கோபம் வந்தால் கொஞ்சங்கூட மனசிலே ஈரம் இராது; அவளை மீறிப் போனாயோ, உன் கைக்குத் தம்பிடி கூட வராது; இது நிச்சயம்! சுமாராக உன் காலிலேயே நிற்கவும் அப்படி ஓஹோ என்று நீ படித்துவிடவில்லையே! நீ இருந்த இருப்புக்கு அப்படி வாழமுடியும் என்றும் சொல்வதற்கில்லை. கொஞ்சம் பொறுத்துக்கொண்டிரு. கௌரவமான மனுஷ்யன் யாராவது அகப்பட்டால் அவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டதும் அவளை விட்டு வந்துவிடு. பகவானுடைய அருள் இருக் கட்டும், குழந்தாய்" என்று அவள் சம்பகத்தின் இரு கன்னங் களிலும் முத்தமிட்டாள்.

"உங்களை நம்பி இருக்கிறேன். எனக்கு ஒத்தாசை பண்ணுவீர்களோ இல்லையோ?" என்று சம்பகவதி தன் உபாத்தியாயினியை அணைத்துக்கொண்டே கேட்டாள்.

“ தாராளமாக ; என்ஞல் முடிந்தவரை உனக்கு ஒத்தாசை பண்ணுவேனடி, என் கண்ணே !” என்று கிருஷ்ணுபாய் பதில் அளித்தாள்.

சம்பகவதி கிருஷ்ணுபாயுடன் இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், அவள் தாயார் கனகவல்லி காசுக்கடை வியா பாரியும் இளம் மிராசுதாரருமான **பரமசிவஞ் செட்டியாரோடு** ஸம்பாஷித்துக்கொண் டிருந்தாள். “ செட்டியாரே ! சம்பகத் தின்மேலே உங்களுக்கு ரொம்ப நாளாய்க் கண்தான் என்று எனக்கு முன்னமேயே தெரியும்! நீங்களெல்லாம் இளம் பிள்ளைகளோ இல்லையோ ? இளசு மேலேதான் நாட்டம் போகும் ; கிழங்களைக் கண்டால் பிடித்திருக்குமா ?” என்ருள் அவள்.

“ ஹ, ஹ, நீயாவது கிழவி யாகிறதாவது ! ஒருகாலும் இல்லை. குறைந்தது ஐம்பது வருஷத்துக்குக் கிழத்தனம் வரவே வராது பார்” என்று பரமசிவம் ஒரு போடுபோட்டார். லோலாயிகளுக்கு இதெல்லாம் சொல்லிக்கொடுக்க வேண்டிய தில்லை ; தாமாகவே வரும் !

“ நீங்களே எப்போதும் இப்படித்தான் புளுகுவீர்கள் ! பெரிய சோதாவாயிற்றே ! எனக்குத் தெரியாதா ? இத்தனை பேர் சம்பகத்தைத் தேடி வந்தார்களே ! அவர்களை யெல்லாம் கவனித்தேனு? உங்களைத்தானே முதல் முதல் சோபனத் துக்கு இட்டுவந்தேன் !” என்ருள் சிரித்துக்கொண்டே.

“ எப்போது நாள் வைத்திருக்கிருய் ?” என்று ஸந்தோஷம் பொங்கக் கேட்டார் பரமசிவம்.

“ இன்றைக்குத்தான். அஸ்தமிப்பதற்குள் ஆயிரம் ரூபாய் கொண்டுவந்து வைத்துவிடவேண்டும். முதல்முதலாக மூவா யிர ரூபாய் பொறுமான ஒரு முத்துமாலையும் அவளுக்குப் போட்டுவிட வேண்டும்.”

“ ரொம்ப ஜாஸ்தியாய் இருக்கிறதே !” என்று பாதி தமக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டார் பரமசிவம்.

“ பூ ! உங்களுக்கு இதுவா பிரமாதம் ? உங்களைப் பிடித் தேனே ; என் தப்பு அது ! சரி. நான் **புண்டரீகாக்ஷஞ் செட்டி** யாரைக் கண்டு வருகிறேன். அவர்தான் பெரிய காசுக் கடை வியாபாரியாயிற்றே !” என்ருள்.

தன் ஜன்ம விரோதியின் பெயரைக் கேட்டதும் பரம சிவம், “ ஓ ! அப்படி இல்லை ! அப்படி இல்லை ; நான் சும்மாச் சொன்னேன். நீ சொல்வதற்கு ஒப்புக்கொள்கிறேன் ” என்ருர்.

“சரி; அப்படி நீங்கள் சொல்வது வாஸ்தவமானல் ஆயிரத்துக்கு இரண்டாயிரமாகக் கொடுத்துவிடுங்கள். ஐயாயிரத்துக்கு முத்துமாலை வாங்கிப் போட்டுவிடுங்கள்” என்ருள் கனகவல்லி.

“சரி; சரி; ஒப்புக்கொண்டுவிட்டேன்” என்ருர் செட்டியார் அவசரம் அவசரமாக; ‘நமக்குச் சத்துருவாக வாய்த்த அந்தப் புண்டரீகாக்ஷம் நம்மை முந்திக் கொள்வதா? சம்பகம் அவனுக்குக் கிடைத்துவிட்டால் நம்மைப் பார்த்து நகைக்க அல்லவா நகைப்பான்?’ என்று ஆத்திரம். சரியான பேரம் குதிர்ந்துவிட்டதே என்று கனகவல்லிக்கு ஸந்தோஷம்! அவள் மறுபடியும் குதூகலமாக, “இன்னும் ஒரு வருஷத்துக்குச் சம்பகத்தை அவள் இஷ்டப்படி விட்டு வைக்கலாம்; பெரிய மகாராஜா யாராவது வந்து கேட்பார். அதற்குள்ளே ரொம்பக் கெட்டிக்காரி யாகிவிட்டிருப்பாள்; ராஜ சபைக்கே அலங்காரமாக இருப்பாள் என்று எண்ணியிருந்தேன். ஆனல், நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறதே! நான் இப்படி யெல்லாம் கோட்டை கட்டும்போது, என்ன என்னவோ அசட்டு யோசனைகளை யெல்லாம் அவள் சிநேகிதர்களும் வாத்தியார்மாரும் அவள் மூளையில் ஏற்றிவிட்டார்கள். கல்யாணம் பண்ணிக்கொண்டு குடியும் குடித்தனமுமாக அமர வேண்டும். குலத்தொழில் தனக்கு ஏற்றதில்லை என்பது அவள் அபிப்பிராயம்” என்ருள்.

“அப்படியா! சுத்த மடத்தனமாக வல்லவா இருக்கிறது? தேவடியாளுக்கு இருக்கும் சுதந்திரம் கல்யாணம் பண்ணிக் கொண்டு வாழ்பவளுக்கு ஏது? ஏன், திவான் பிரம்மானந்த ஐயரைத் தெரியுமோ இல்லையோ உனக்கு? சட்டசபை, நிர்வாக சபை எல்லாவற்றிலும் மெம்பர்தான். இருந்தும் என்ன? ஒரு நாளிலே பத்துமணி காலம் ராஜாங்க காரியத்தைக் கவனித்துக் கொண்டிருப்பாராம். உழை உழை என்று உழைப்பாராம். மற்ற வேளைகளில் அந்தத் தேவடியாள் வஸந்தஸேனை இருந்தாளே அவளுக்கு அடங்கிக் கிடப்பாராம்; அவ்வளவாக யாருக்கும் இந்த விஷயம் தெரியாது. அவர் பெண்சாதி நாள் கணக்காக அவரைப் பார்க்கமுடியாமல் வீட்டிலே ஏங்குவாளாம். யாருக்கு நிம்மதி? பெண்சாதிக்கா தேவடியாளுக்கா? நீயே சொல்லேன்.”

“நீங்கள்தான் இதையெல்லாம் அவளுக்குச் சொல்லி, இன்னமும் புத்தி சொல்லவேண்டும். நம்மைப்போல் பச்சை பேமானிகளுக்கு இது விந்தையாக இருக்கிறதே ஒழிய இந்த நாளைப் பசங்களுக்கே இது சகஜந்தான்” என்ருள் கனகவல்லி.

"எனக்கு அப்படிப் படவில்லே. என்னேக் கேட்டால் மற்றவர்களேவிட இந்த இங்கிலீஷ் படிப்புப் படித்தவர்களுக்குத்தான் தேவடியாள் மோகம் ஜாஸ்தி என்பேன். ஏன், பிரம்மானந்த ஐயரையே எடுத்துக்கொள்வோமே; இங்கிலீஷ்கார னெல்லாங்கூட அவர் அபாரமாக இங்கிலீஷ் எழுதுகிறதைப் பார்த்து, நம்மால் அப்படி முடியவில்லேயே என்று பொருமைப்படுகிருன்! அப்பேர்ப்பட்ட ஆசாமிதான் தாசிகளே ஆதரித்துக்கொண்டு வந்தார், தெரியுமா? இந்தக் காலத்திலேயே எதற்கெடுத்தாலும் இங்கிலீஷ்தானே! நன்ருகத்தான் இல்லே; என்ன பண்ணுவது? இங்கிலீஷ் வந்து குட்டிச்சுவராகப் போயிற்றென்ருல் சில விஷயத்துக்கு வாஸ்தவந்தான்; ஆனுலும் அதனுல் தாஸிகளுக்குப் பாதகம் ஏற்பட்டதாகத் தெரியவில்லே. 'பெண் கல்வி' 'பெண் கல்வி' என்கிருர்களே, அந்த எழவு வந்துதான் எல்லாவற்றையும் குட்டிச்சுவராக்கி விட்டது; படித்துப் படித்துப் பகுத்தறிவு வந்துவிட்டது. அவர்களுக்கு முக்கியமாக ஸங்கீதம், பரத நாட்டியம் போன்ற வித்தைகள் தெரிந்திருக்க வேண்டியதுதான். அதோடு எழுதப் படிக்கவும் கணக்கு கிணக்குப் போடவும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியந்தான்; அதுவரைக்கும் கெடுதல் இல்லே; உண்மைதான். இப்போது, மடத்தனமாகக் கவர்ன்மெண்டாரும், தலேவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும் பெரிய மடையர்கள் சொல்லேக் கேட்டுக்கொண்டு, பெண்கள்கூடக் கட்டாயம் எல்லாக் கலேகளிலும் தேர்ந்து முன்னேறவேண்டும் என்கிருர்களே! நீதி சாஸ்திரம் முதலியவைகளெல்லாங் கூடப் போதிக்கிருர்களே! நல்ல வேளேயாக இன்னும் நம் தேசத்தில் மெதுவாகத்தான் முன்னேற்றம் ஏற்படுகிறது. ஆனுல் இதுகூட நமக்குக் கெடுதலாகத்தான் இருக்கிறது. எப்படியோ சட்டசபையிலேகூடப் புகுந்துகொண்டு பெண் பிள்ளே ஒருத்தி தேவதாஸிகளுக்கு எதிராக ஒரு மசோதா கொண்டுவந்து அதை நிறைவேற்றிவிட்டாளே, அத்தனே புருஷர்களுக்குத் தலேயிரக்கமாக. இப்படியே நடந்துகொண்டு போனுல் நான் இங்கே வருவதுகூடச் சட்டத்துக்கு விரோதமாகப் போய்விடலாம்!" என்ருர் பரமசிவம்.

"உங்களுக்கு எதிராக யார் கலகம் பண்ணப் போகிருர்கள்? என் வாயை மீறி ஒரு வார்த்தை வராது; அது நிச்சயம்" என்ருள் கனகவல்லி.

"ஆனுல் என் பெண்சாதி இருக்கிருளே; கண்காணிப்புச் சங்கம், மாதர் சங்கம் இந்த மாதிரிச் சங்கங்களேச் சேர்ந்த பெண்பிள்ளே எவளாவது தூண்டிக் கொடுத்தால் வெளியிட்டு

விடுவாளே அவள்! முன்னெல்லாம் இந்த ஊரில் எந்த இடத்திலே அசுத்தம் பண்ணி அமர்க்களம் பண்ணினாலும் கேட்பார் இல்லை. இப்போது முடிகிறதா? ஒருத்தனுக்கு ஒருத்தன் எதிராகச் சாக்ஷியம் சொல்ல ஆரம்பித்துவிட்டானே! நம் சமூகமே கலகலத்துக்கொண்டு வருகிறது. வைதிகர்கூட நம்மை ஆதரிக்கமாட்டேன் என்கிறார்களே! அன்றைக்கு ஒரு நாள் ஸநாதனத் தலைவன் ஒருவனைக் கண்டு, 'இந்தத் தேவதாஸி சட்டத்தை எடுத்துவிட ஏதாவது கிளர்ச்சி செய்யக்கூடாதா, ஐயா?' என்று கேட்டேன். அந்த மடையன் என்ன பதில் சொன்னான் தெரியுமா? 'சாரதா சட்டத்தை எடுத்துவிட வேண்டுமென்றால் நான் கிளர்ச்சி செய்யத் தயார்தான். அதனாலே நன்மையாவது ஏற்படும்! இந்தக் குடிசட்டித் தொழிலை மறுபடியும் தூக்கிவிட நான் தயாராயில்லை' என்றான். அப்படி இருக்கிறது விஷயம்! நமக்கு அந்த நாளில் இருந்த சௌகரியங்களெல்லாம் போயிற்று! ஜன நாயகமாம்! சுயராஜ்யமாம்! இந்த எழவெல்லாம் வந்து, முதலில் குடி, அப்புறம் கூத்தி, தீண்டாமை எல்லாவற்றையும் ஒழித்துப் பாழாக்கிவிடப் போகின்றன! அப்புறம் ஒவ்வொன்றாக என்ன என்ன வரப் போகிறதோ?" என்றார்.

"அதெல்லாம் கிடக்கட்டும். இன்றைக்கு ராத்திரி நடக்க வேண்டியதைப்பற்றிக் கவனிக்கலாம்" என்றாள் கனகவல்லி.

"சரி! நான் போய்வருகிறேன்" என்றார் பரமசிவம்.

அவர் படிக்கட்டு வழியாக இறங்கிச் செல்லும்போது, "பணத்தையும் முத்துமாலையையும் ஜல்தியாக எடுத்துக் கொண்டு வந்துவிடுங்கள்! கவனம் இருக்கட்டும்" என்று கூவினாள் கனகம்.

அன்று மாலை பரமசிவம் இரண்டு புது ஆயிர ரூபாய் நோட்டுகள் எடுத்துவந்து கனகவல்லியிடம் கொடுத்தார்; பேஷான முத்துமாலை ஒன்றும் அவளிடம் காட்டினார். "இதற்கு ஏழாயிரத்தைந்நூறு ரூபாய் பிடித்தது. ஆனாலும் இது ஒரு பிரமாதமில்லை எனக்கு. உன் பெண்மேலே ரொம்ப நாளாகவே எனக்குக் கண்; உள்ளூற ஆசை" என்றார்.

"முன்னே நீங்கள் என்னைப் பார்க்க வரும்போதெல்லாம் இப்படிக் கொடுத்திருக்கிறீர்களா! உம், இருக்கட்டும்" என்று அவரைச் சற்றுக் கடிந்துகொள்வதுபோல் கேட்டாள், கனகவல்லி.

"நான்தானே முதல் ஆசாமி. அது ஒரு விசேஷந்தானே!" என்றார் பரமசிவம்.

"உங்களுக்கு நாலைந்து லக்ஷத்துக்குமேலே இருக்கும் என்றுதான் நினைக்கிறேன்; என்ன, நான் சொல்வது?" என்று இழுத்தாள் கனகவல்லி.

"ஆமாம்; பத்துப் பன்னிரண்டு லக்ஷத்துக்குள் இருக்கும்" என்றார் அவர்.

"சம்பகத்துக்கு அவ்வளவு இருந்தால் போதும்" என்று ஒருவிதமாக அர்த்தம் படும்படி பேசி, "சரி; இதோ பாருங்கள்: நான் இப்படி வாழ்ந்தாலும் என் பெண்ணுக்கு இந்த ஆபாசமெல்லாம் தெரியாதபடிதான் இதுவரைக்கும் வளர்த்து வந்திருக்கிறேன். மற்றக் கௌரவமான குடும்பப் பெண்களைப் போலவே அவளும் கன்னி கழியாமல் பரிசுத்தமாக இருக்கிறாள். அவளைக் கட்டிவளைத்துக் கொண்டுவருவதற்குள்ளே உங்கள் பாடு திண்டாட்டமாய் விடும்; சொல்லி வைத்தேன்" என்றாள்.

"அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்; நீ சும்மா இரு. எனக்கு முகராசியும் உண்டு; பேசவும் நல்ல சாமர்த்தியம் உண்டு. பையையும் இறுக்கிப் பிடிக்காமல் தாராளமாக விடுவேன். எத்தனையோ தலைகிறுக்குக்காரிகளையும் எதற்கும் மசியாத பெண்களையும் இந்த மூன்றாலும் மசிய வைத்திருக்கிறேன், தெரியுமா? ராத்திரி ஒரு பெண்ணைத் தனியாக மட்டும் விட்டுவிடவேண்டும், நம் கையில்! அவளை வழிக்குக் கொண்டுவந்து விடுகிறேனா இல்லையா பார்! உன் பெண்ணைச் சுலபமாக வளையக் கட்டிவிடுகிறேன், பார்" என்றார் பரமசிவம்.

"எனக்கு என்னவோ அவ்வளவு நிச்சயமாகப் படவில்லை. ஆனாலும் உங்கள் இஷ்டம்போலே விட்டுவிட்டேன்; உங்களைத் தடை பண்ணுவானேன்? அவளுக்கே ஒரு முரட்டுப் பிடிவாதம். பிசாசுக்குக்கூடப் பயப்படமாட்டாள் அவள்" என்றாள் கனகம்.

"பலாத்காரம் தந்திரம் இரண்டும் சேர்ந்தால் நடக்காத காரியங் கூடவா உண்டு? எனக்கென்னவோ அப்படி ஒன்றும் சிரமம் நேராது என்றுதான் படுகிறது. 'எப்போதடா இரா வேளை ஆகப்போகிறது' என்று நான் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறேன்; ராத்திரி எட்டு மணிக்கு இங்கே வந்து விடுகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்றார்.

சம்பகம் வீடு திரும்பினாள். இரவு ஏழு மணிக்குத் தன் தாயாரோடு உட்கார்ந்து சாப்பிட்டாள். பிறகு கனகவல்லி அவளை அவள் அறைக்கு இட்டுச் சென்றாள். அவளை

அன்போடு அணைத்துக்கொண்டு, "என் கண்ணே! நான் முன்னே சொன்னாற்போலே உனக்கு ஏற்ற ஆசாமியாகத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன்; பரமசிவஞ் செட்டியார் தான். நல்ல பணக்காரர்; கண்ணுக்கும் நன்றாய் இருப்பார்; மிராசுதாரர்; காசுக்கடை வியாபாரி" என்று நீட்டிக் கொண்டே போனாள் கனகம்.

"அடிக்கடி இங்கே உன்னைப் பார்க்க வருகிறானே - தெருவில் அந்த மூலையில்கூடப் பெரிய வீடு இருக்கிறதே - அதன் சொந்தக்காரன்தானே?" என்று கேட்டாள் சம்பகவதி.

"அவனேதான். கண்ணு! அவனைப் பிடித்திருக்கிறதோ இல்லையோ உனக்கு?" என்றாள் அவள் தாயார்.

"அவனுக்குத்தான் ஏற்கனவே கல்யாணம் ஆகி யிருக்கிறதே, அம்மா! அவன் பெண்சாதியைக்கூடப் பார்த்திருக்கிறேன் நான். நல்ல மாதிரி; அழகாய் இருப்பாள். ஆனால், பாவம், எப்போதும் துக்கமாகவே இருப்பாள். எப்போதாவது அவளும் என்னைப் பார்ப்பாள். ஐயோ பாவம் என்று இருக்கும். இப்படி அவளைத் தவிக்க விட்டுவிட்டு இருக்கிற புருஷன் துன்மார்க்கனாகத்தான் இருப்பான். நான் அவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவே மாட்டேன், நிச்சயமாக. அவன்தான் எப்படிப் பண்ணிக்கொள்ள முடியும், ஒரு பெண்சாதி ஏற்கனவே இருக்கும்போது?" என்றாள் சம்பகம்.

"கண்ணு! கல்யாணம் என்றால் வழக்கமாக நடக்கிற மாதிரி அல்ல. உனக்கு அவன் பிடித்திருக்கிற வரைக்கும் அவனை வைத்துக்கொண்டு இருக்கலாம்; அதற்குமேலே வேண்டாம்" என்றாள் கனகம்.

"அப்படியானால், அவன் இங்கே வரவே வேண்டாம்! எனக்கு வேண்டியதில்லை அவன்!" என்றாள் சம்பகம்.

"நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கக் கூடாதடி, என் கண்ணே!" என்று கொஞ்சிக் கனகவல்லி அவளை அணைத்துக் கொண்டு மெதுவாக வழிக்குக் கொண்டுவரப் பார்த்தாள். இப்படி எத்தனையோ தடவை செய்திருக்கிறாள் கனகம்.

ஆனால் சம்பகம் அவள் பிடியிலிருந்து விலகிக்கொண்டு, "இதெல்லாம் எதற்கு? அம்மா! நான் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். உன்னைப்போல் தேவடியாள் தொழில் பண்ணப் போவதில்லை நான். மற்றக் கௌரவமான குடும்பப் பெண்களைப்போல் கல்யாணம் பண்ணிக்கொண்டு குடியும் குடித்தனமுமாக அமரப்போகிறேன். நீ சொல்லும் ஈன வழியில் பிழைப்பதைவிடச் சாவதே மேல்" என்றாள்.

"அப்படியெல்லாம் உளறுதேடி, அம்மா! கல்யாணம் பண்ணிக்கொண்டவர்கள் என்ன சுகமாக வாழ்ந்துவிட்டார்கள், சொல்லேன்? ஏதாவது தமாஷ்தான் உண்டா, காதல்தான் உண்டா, பணம் பாக்கியந்தான் உண்டா அவர்களுக்கு? ஒன்றுமில்லை! வீட்டு வேலைகளைச் செய்துகொண்டும், பிள்ளை குட்டிகளைப் பெற்றுக்கொண்டும் கிடக்கவேண்டியதுதான்; வேறென்ன? புத்தி ஒரே நிலையில் இராத கல் நெஞ்சக்காரப் பாவி எவனுக்காவது வாழ்க்கைப்பட்டுவிட்டால் அவள்பாட்டைக் கேட்பானேன்; அவன் உறவு மனுஷ்யர்கள் வேறே துன்புறுத்த, சாகிறவரைக்கும் ஸதா பிள்ளைகுட்டி பெற்றுக் கொண்டு எப்படியோ நாளைத் தள்ளவேண்டியதுதான். புருஷனுக்கும் அடங்கி நடக்கவேண்டும்; அவன் தாய் தகப்பன் மார்க்கும் அவள் அடங்கிப் போகவேண்டும். நம் ஜாதிப் பெண்ணைப் பார்: அவள் வாயைத் திறக்கவேண்டியதுதான். எத்தனையோ புருஷர்கள் வரக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவள் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை. அடங்கி நடக்கவும் வேண்டியதில்லை. ரகவாரியாக அநுபவிக்கிறாள். பிரதி தினமும் அவளுக்கு எத்தனையோ சாமான் இனமாகக் கிடைக்கும்; கவலை இல்லாமல் நிம்மதியாக வாழ்கிறாள். இதென்னடியம்மா! இப்போது இருக்கிறாற்போல் ஜோராக வாழ்வதை விட்டுவிட்டு, போயும் போயும் கல்யாணம் பண்ணிக்கொண்டு வாழ்கிறேனென்கிறாயே! இதனால் எவ்வளவு சௌகரியம் இருக்கிறது, யோசித்துப் பார். ஒருநாள் யாராவது மகாராஜா கூட உன்மேல் ஆசைப்பட்டு அழைத்து வைத்துக்கொள்ளலாம்" என்றாள் கனகம்.

"போதும். இதோடு நிறுத்து. எனக்குச் சகிக்கவில்லை. தேவடியாள் தொழில் பண்ணிப் பெயரெடுக்கவேண்டியதில்லை நான். இந்த ஆபாசத்திலே வாழ்ந்தாலே போதுமே, நாசமாய்ப் போகவேண்டியதுதான். இந்தமாதிரி வாழ்வில் ஸத்யத்துக்குத்தான் இடம் உண்டா, வாஸ்தவமான அழகுக்குத்தான் மதிப்பு உண்டா? தேவடியாள் என்றால் வாழ்நாள் முழுதும் ஓயாமல் பொய்யும், புனைசுருட்டும், பித்தலாட்டமும் பண்ணிக் கொண்டிருக்கவேண்டியதுதான்; நிம்மதியாக இருந்த எத்தனையோ குடும்பங்களைப் பாழாக்கி விடுகிறாளே! அவளால் எவ்வளவு கோரமான வியாதிகளெல்லாம் பரவுகின்றன! எத்தனையோ குற்றங்கள் நடப்பதற்கு அவள்தானே காரணமாகிறாள்?... ஊஹூம். மாட்டேன். இந்தமாதிரி ஆபாசமான ஈனவாழ்வு ஒருபோதும் வாழமாட்டேன்!" என்றாள் சம்பகம்.

"தலைமுறை தலைமுறையாக இந்தத் தொழிலை நடத்தி வருகிறோமே! உன் தாயாருக்கும் பெரியவர்களுக்கும் நன்மை

யாகத் தோன்றினது உனக்கும் நன்மையாகத்தானே இருக்க வேண்டும்?" என்றாள் கனகம்.

"எத்தனையோ தலைமுறையாக நம் பெரியவர்கள் தேவடியாள் தொழில் பண்ணித்தான் இருக்கட்டும்; எனக்கு அதைப் பற்றி அக்கறை இல்லை! அது வாஸ்தவமாக இருந்தாலும் ரொம்ப நாளுக்கு முன்னேயே கிளர்ச்சி பண்ண ஆரம்பித்திருக்கவேண்டும். ஆதியில் இருந்த நம் மூதாதைகள் - பிரபஞ்சத்திலேயே ஒரு தாயாரும் தகப்பனுருமாக வாழ்ந்தார்களே அவர்கள் - நிச்சயமாக இதற்கு எதிராகத்தான் இருந்திருப்பார்கள்" என்றாள் சம்பகம்.

"பின்னே, அவர்கள் அதை அப்போதே நிறுத்தியிருப்பது தானே? அவ்வளவு சக்திகூடவா இல்லை, அவர்களுக்கு? அப்படி நிறுத்தாததிலிருந்து அவர்களும் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்றுதானே தெரிகிறது?" என்று கேட்டாள் கனகவல்லி.

"இல்லவே இல்லை. கொலை, களவு, கொள்ளைகளை அவர்களால் தடுக்க முடியவில்லை என்றதால் அவைகளுக்கும் உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்லிவிட முடியுமோ?"

"இந்த விதண்டா வாதமெல்லாம் எதற்கு? பரமசிவஞ் செட்டியாரை இன்று ராத்திரி நீ ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்."

"முடியாது" என்று கத்தினுள் சம்பகம்.

"என்ன! தாயாருக்கா அடங்க மாட்டாய்! உன்னைப் பெற்றெடுத்துச் சுகத்திலேயே வளர்த்த தாயாருக்கா பணிய மாட்டாய்?"

"ஆமாம். அம்மா என்று பெற்று எடுத்துக் காப்பாற்றி விட்டால்மட்டும் குழந்தையைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்க வேண்டும் என்று இல்லையே! யாரும் ஏட்டில் எழுதி வைக்காவிட்டாலும் இதுதான் பிரபஞ்ச விதி!—இதுவே சிரேஷ்டமானது. நீயோ அரைகுறையாக அறிந்தவள்; சரீர ஸம்பந்தமான கடமை ஒன்றைத்தான் கவனிக்கிறாய். நீ நன்றாகப் படித்திருந்தால் அவரவர் மனசையும் நெறியையும் அறிந்து நடப்பாய். இப்போது எத்தனையோ தேசங்களில் பெற்றோர்கள் குழந்தைகளின் மனசைக் கெடுத்துத் தங்கள் இஷ்டப்படி யோசனை பண்ண அவர்களுக்கு இடங் கொடுக்காமல் பலவிதமாக அடக்கி வருகிறார்கள்; வேறு மதம் புகுந்து மாறுன கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களைப் படுமோசமாகத் தண்டிக்கிறார்கள்; அடிமையாகவோ,

தேவடியாளாகவோ, ஆகும்படிக் கட்டாயப்படுத்திப் பாழ் பண்ணுகிருர்கள். இதைச் சமூகமே அநுமதிக்கிறது. இவை யெல்லாம் சீக்கிரத்தில் போய்விடும்; இந்த உலகமே திருந்தி எல்லாம் சரிப்பட்டு விடுகிறது பார், அம்மா!"

"போதும்! நிறுத்து, உன் அதிகப்பிரசங்கித்தனத்தை! எனக்கு நீ உபதேசம் பண்ண வேண்டியதில்லை. இப்படி உளறுகிருயே; இந்தப் பள்ளிக்கூடப் படிப்பு எப்படியடி படித்தாய்? தேவடியாள் தொழில் பண்ணிவந்தபணத்திஞல் தானே? அதிலிருந்தே தெரியவில்லையா உன் படிப்பின் லக்ஷணம்!" என்று கத்திஞள் கனகவல்லி.

"இதனுலே என் படிப்புக் கெட்டுப் போவானேன்? குப்பை மேட்டை எரிக்கும் தீக்கு ஏதாவது தோஷம் உண்டோ? அது மாதிரிதான் படிப்பும்" என்ருள் சம்பகம்.

"இந்த வெட்டிப் பேச்செல்லாம் எதற்கு? நான் ஏற்கனவே இன்றைக்கு ராத்திரி உன்னண்டை வரலாம் என்று பரமசிவத்துக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டேனே" என்று கத்திஞள் அவள் தாயார்.

"அதைப் பற்றி நீ கவலைப்படவேண்டாம். 'இங்கே யாரும் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை; வெளியே போகலாம்' என்று நானே சொல்லி விடுகிறேன்" என்ருள் சம்பகம்.

"சொல்லுவாயடி, சொல்லுவாய்!" என்று கனகவல்லி உறுமி, "இன்னும் இரண்டொரு விஷயமும் சொல்லவேண்டியிருக்கிறது; கேளடி கேள்: 2000 ரூபாய் ரொக்கமாகக் கொடுத்து, உனக்கென்று ஏழாயிரம் போட்டு ஒரு முத்து மாலையும் வாங்கியிருக்கிருனேடி! சும்மா விட்டுவிடுவாஞே?" என்ருள் கனகம்.

"அந்த இரண்டாயிரத்தையும் நீ திருப்பிக் கொடுத்து விடு; அவனும் முத்துமாலையை வியாபாரியிடம் திருப்பி விடட்டும்" என்ருள் சம்பகம் கலங்காமல்.

"என்ன திமிர் பார்! பணம் என்ருல் உனக்கு அவ்வளவு அசட்டையா! என் வயிற்றிலே பிறந்தவளாடி நீ?" என்ருள் கனகவல்லி.

"வேறு யார் வயிற்றிலேயாவது பிறந்திருக்கக்கூடாதா என்றுதான் நானும் பிரார்த்திக்கிறேன்" என்ருள் சம்பகம்.

"சரிதானடி. எவ்வளவு சிக்கனமாகப் பார்த்தாலும் ஐயாயிரமாவது உனக்காகச் செலவழித்திருப்பேன்; அதைக் கீழே வைத்துவிட்டு என் வீட்டைவிட்டு நடடி, வெட்டுண்ணி!" என்றாள் கனகம்.

"என்னிடம் இப்போது பணம் இருந்தால்தானே? ஆனால் என்பேரில் ஆணையாக இதோ சொல்கிறேன்: நான் ஸம்பாதித்து அடைக்கிற சக்தி எனக்கு வந்தால் தம்பிடி கூட விடாமல் வட்டியோடு அதைச் செலுத்திவிடுகிறேன். கவனம் இருக்கட்டும்" என்றாள் அவள் பெண்.

"இந்தத் தொழிலை விட்டால் அது ஒருகாலும் முடியாது. நீ ஸம்பாதிக்கும்வரை நான் காத்திருக்கவும் முடியாது! நான் சொல்கிறபடி செய்துதான் ஆகவேண்டும்" என்றாள் கனகவல்லி.

"முடியாது. நீ பெற்றாய்; அதனால் என்னை வளர்த்துப் படிப்புச் சொல்லித் தரவேண்டியது உன் கடமை. அதுவரைக்கும் உனக்கு நன்றி செலுத்த வேண்டியதுதான். ஆனால் உனக்காக இப்படி என்னைப் பாழாக்கிக் கொள்ள வேண்டுமென்று தலைவிதி இல்லையே! எனக்குச் சுயமாகச் சம்பாதித்து அடைக்கிற சக்தி வந்தால் நீ எனக்காகச் செல வழித்த பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டியது என் கடமைதான். அதற்குமேல் நான் உனக்கு ஒன்றும் செய்யக் கடமைப்படவில்லை. இதற்காக விபசாரம் பண்ணித் தன்னைத் தானே பாழாக்கிக் கொள்வதாம்! அப்படி ஒன்றும் கடமைப்பட்டில்லை நான்; அது பகவானுக்கும் அடுக்காது. இயற்கைக்கும் விரோதம்" என்றாள் சம்பகவதி.

கனகவல்லி கோபமாக ஏதோ பதில் சொல்லப் போனாள். அப்போது வேலைக்காரி பரமசிவஞ் செட்டியார் வந்திருக்கிறார் என்று அறிவித்தாள். "சரி. அவரை உள்ளே வரச்சொல்" என்றாள் கனகவல்லி.

"அம்மா! நான் அவனைப் பார்க்க முடியாது" என்றாள் சம்பகம்.

"பார்த்துத்தான் தீரவேண்டும். நீதானே இதற்கெல்லாம் காரணம்! நீயே கவனித்துக்கொள். உனக்காகத்தானே வருகிறான். என்னை உத்தேசித்தல்லவே?" என்றாள் அவள் தாயார்.

"சரி. நான் அவனுக்குப் பயப்படவில்லை. என் மனசிலே தோன்றினதைச் சொல்லத்தான் போகிறேன், அவனிடம்" என்றாள் சம்பகம்.

“இதோ பார், சம்பகம்! அவன் எதிரே கண்டபடி உளறி வைக்காதே! அப்படி ஏதாவது செய்து, வந்த வியாபாரத்தைக் கெடுத்தாயோ, உன்னைக் கட்டாயமாக இன்று ராத்திரியே வீட்டை விட்டுத் துரத்திவிடுவேன். பத்திரம்!” என்றாள் அவள் தாயார்.

“உம். அப்படியே செய்” என்றாள் சம்பகம் சாந்தமாகவே.

அதே சமயம் பரமசிவஞ் செட்டியார் அறையில் நுழைந்தார். கூடவே ஒரு வேலையாளும் கமகமவென்று மணம் வீசும் விலையுள்ள மாலைகள் சில எடுத்து வந்தான். “கனகவல்லி! என் அருமைச் சம்பகம் எங்கே?” என்று கேட்டுக்கொண்டே வந்தவர் சம்பகத்தைப் பார்த்ததும் தட்டென்று நின்றுவிட்டார். புஷ்பக்கூடையை அறையில் வைத்துவிட்டுப் போய்விடும்படி வேலைக்காரனிடம் சொன்னார். அவன் போனதும் கதவைச் சாத்தினார் செட்டியார். புன்சிரிப்போடு கனகவல்லியின் கழுத்தில் ஜோராக மாலை போட்டார். பளபளவென்று ஜ்வலிக்கும் முத்துமாலையை ஜேபியிலிருந்து எடுத்து, “என் அருமைச் சம்பகம்! உன் அடிமை பரமசிவத்தின் காணிக்கை!” என்று சொல்லிக்கொண்டே அதைச் சம்பகத்தின் கழுத்தில் போடப் போனார்.

சம்பகம் பின்னடைந்து, “உன் பெண்சாதிக்குக் கொடு, ஐயா, அதை! உங்கள் சூழ்ச்சியெல்லாம் என்னிடத்தில் பலிக்காது. ‘என் தாயார் நடத்துகிற ஈனத்தொழில் எனக்கு வேண்டியதில்லை; மற்றக் கௌரவமான பெண்களைப்போல் கல்யாணம் பண்ணிக்கொண்டு குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டும்’ என்று சபதம் செய்துகொண்டிருக்கிறேன் நான். ‘பெரிய மனுஷ்யன், மிராசுதார், காசுக்கடை வியாபாரி’ என்றெல்லாம் பிரமாதமாகச் சொல்லிக்கொண்டு திரிகிறாயே! அவ்வளவு நல்ல பெண்சாதி இருக்கும்போது அவளை விட்டுவிட்டு மானமோ சூடோ சுரணையோ இல்லாமல் இப்படி என்னைப் போல் ஒன்றும் அறியாத, அநாதரவான பெண்களைக் கெடுக்க வருகிறாயே, ஐயா!” என்று சம்பகம் ஆரம்பிக்கும்போதே செட்டியாரின் புன்சிரிப்பெல்லாம் பறந்தோடிவிட்டது!

கனகவல்லி, “அடி சம்பகம்! அவ்வளவு பெரிய மனுஷ்யரை நீ எப்படியடி அவமானப் படுத்துவாய்?” என்று சீறினாள்.

“அம்மா! அவர் வாஸ்தவமாகவே பெரிய மனுஷ்யராக

வேண்டும் என்றுதான் இப்படிச் சொல்கிறேன்" என்று சாந்தமாகப் பதில் சொன்னாள் சம்பகம்.

பரமசிவம் இன்னும் தயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவள், "ஏன் ஐயா, உனக்கு மானம் ஈனம் இல்லே? மரியாதையாகப் போய்விடக்கூடாது?" என்றாள்.

"அவரைப் போகச் சொல்ல உனக்கு என்னடி அதிகாரம்? இது என் வீடு; தெரியுமா? அவர் என் விருந்தாளி" என்றாள் அவள் தாயார்.

"சரி. இந்தக் குடிசட்டி வீட்டிலே எனக்கு என்ன வேலே? நான் போகிறேன்" என்றாள் சம்பகம்.

"எங்கே போகப்போகிறாயாம்?"

"என்பாடு, எங்கேயோ போய்க் கொள்கிறேன்."

"இந்த ராத்திரி வேளேயிலே உன்னேப்போல் சின்னப் பெண்கள் வீட்டைவிட்டு வெளியிலே போவதா? அழகாகத் தான் இருக்கிறது!"

"அம்மா, உன் வீட்டிலே இருப்பதைவிடவா வெளியிலே பிரமாத ஆபத்து வந்துவிடப் போகிறது? இதோ இப்போதே புறப்பட்டு விட்டேன், உன் வீட்டை விட்டு" என்று சொல்லிக்கொண்டே வெளியே போய்விட்டாள் சம்பகம்.

"போயேன்! ஒழிந்து தொலேயேன்! எனக்கு அடங்காத நன்றிகெட்ட பதர்கள் என் வீட்டில் ஒரு க்ஷணங்கூட இருக்க வேண்டியதில்லே! போய்த் தொலேயட்டும்" என்று சொல்லி விட்டுப் பரமசிவஞ் செட்டியாரைப் பார்த்து, "சுத்த மடையன் ஐயா நீ! 'பெண்களே வழிக்குக் கொண்டு வந்துவிடுவேன்! என்று பிரமாதமாக ஜம்பம் அடித்துக் கொண்டீரே, பார்த்தீரா!" என்றாள் கனகம்.

"திடும் என்று அப்படிப் பேசுவாள் என்று நான் எதிர்பார்த்தால்தானே? சரி; நான் வீட்டுக்குப் போகிறேன்; நாய் மாதிரி சவுக்கடிபட்டது போதும்!" என்றார்.

"சரி; போய்வா, ஐயா" என்றாள் கனகம்.

"ஊம், என் இரண்டாயிரத்தையும் கொடுத்துவிடு" என்று முணுமுணுத்தார் செட்டியார்.

"நீ எப்பேர்ப்பட்டவன் என்று எனக்கு முன்னமே தெரியுமே! இதுவரைக்கும் பத்து, பன்னிரண்டு தடவை இங்கே என்னண்டை வந்திருக்கிறாய். இந்த அற்பத் தொகையை எனக்கே இனுமாகக் கொடுத்தால்தான்

என்ன முழுகிப் போயிற்றும்! சரி; சரி! இந்தா உன் பணத்தை எடுத்துக்கொண்டு போ!'' என்று அவர் அன்று மாலை கொடுத்த இரண்டு நோட்டுகளையும் திருப்பிக் கொடுத்தாள். அவரும் அந்த இரண்டையும் முத்துமாலையோடு ஜேபியில் போட்டுக்கொண்டு, "இனிமேல் நானும் என்னைத் திருத்திக் கொள்ளத்தான் வேண்டும். அந்தப் பெண் சொன்னது எனக்கு உறைத்துவிட்டது. நேராக வீட்டுக்குப் போய்ச் சம்பகம் சொன்னதுபோல் முத்துமாலையை என் பெண்சாதிக்குக் கொடுக்கப்போகிறேன்'' என்றார்.

"எத்தனை நாள் இந்த வைராக்கியம் நிலைக்கப்போகிறது பார்க்கலாம்! இன்றைக்கு ராத்திரி ஒருபோது சும்மா தள்ளட்டுமே! உன்னைப்போல் லோலாயிப் பசங்கள் ரொம்ப நேரம் ஒரே நிலையாக இருப்பார்களா என்ன?'' என்று ஏளனம் தொனிக்கக் கூறினாள் கனகவல்லி.

"ஏதோ நிலைக்கிறவரைக்கும் நிலைக்கட்டுமே! பாவம், அதற்கு ரொம்ப நாளாக ஒன்றுமே கொடுத்ததில்லை நான். சரி; போய் வருகிறேன்'' என்று சொல்லி அகன்றார் செட்டியார்.

கனகவல்லி கதவைத் தாழிட்டுக்கொண்டு ஓவென்று கதறி அழ ஆரம்பித்தாள். இயற்கையாகவே பெண்மேல் பற்று உண்டு அவளுக்கு; அந்தப் பெண் இப்படித் தன்னை மீறிக்கொண்டு போனது அவள் மனத்தைப் புண்படுத்திவிட்டது; இப்படியெல்லாம் நேரும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. இதுவரை மிகவும் ஆடம்பரமாக மனம் போனபடி வாழ்க்கை நடத்திவந்தாள். இருக்கிற ரொக்கமெல்லாம் இதிலேயே கரைந்துவிட்டது. அவளது இளமையும் மங்கிவிட்டது. காசில்லாமல் திண்டாடும் லோலாயிகளை வைத்துக்கொண்டு இன்னும் கொஞ்ச நாளைக்குத் தன் தொழிலை நடத்த முடியும்; அவ்வளவுதான். சம்பகத்தை வைத்துக்கொண்டு பின்னால் ஏராளமாகச் சொத்துக் குவித்து ஓயாமல் சாராயத்தைக் குடித்துக்கொண்டு நிம்மதியாகக் காலங் கழிக்கலாம் என்று ஆகாயக்கோட்டை கட்டியிருந்தாள். முன்பின் யோசியாமல் கண்டவர்கள் பேச்சையும் கேட்டுக்கொண்டு தன் பெண் இப்படிச் செய்துவிடவே அதெல்லாம் இப்போது ஒரேயடியாகச் சிதறுண்டுபோயிற்று. அவளுக்கோ அதிக ஆடம்பரமாக இருந்தும், குடி குடித்தும் பழக்கமாகிவிட்டது. எப்படி அவைகளை விடமுடியும்? பிற்கால வாழ்க்கை அவள்முன் பயங்கரமாகத் தோற்றமளித்தது. சம்பகம் தன் வீட்டைவிட்டுப் போய்விட்டால் தானும் போக

வேண்டியதுதான். அவ்வளவு குடிக்கூலி கொடுத்துக் கொண்டு இருக்கத்தான் இனிமேல் கட்டுமா? பெண்ணை நம்பியிருந்த வரையிலாவது பரவாயில்லை; ஊருக்குள்ளேயே தங்கள் ஜாதியில் அவளைப்போலப் பெண் இருந்தால்தானே? அவள் இருந்தவரைக்கும் ஏராளமாகக் கடனுக்கு ஸாமான் வாங்க முடிந்தது — கடைகளில். சாராயக் கடைகளில் கூடத்தான். பணமும் கடனாக வாங்க முடிந்தது. போட்டியாக இருக்கும் தாசிப் பெண்களையும் தன்னைத் தேடி வரும் லோலாயிகளையும் பார்த்துக் கைதட்டி நகைக்கவும் இடம் இருந்தது. ஆனால் சம்பகம் போன பிற்பாடு அம்மாதிரி செய்ய முடியுமா? எல்லாக் கடனையும் தீர்த்துவிட்டால்கூட மொத்தம் ஏறக்குறைய ஆயிரம் ரூபாய்க்குத்தான் ரொக்கம் மிஞ்சும். அதுவும், தன்னுடைய அருமையான நகைகளையும் சம்பகத்தின் ஆபரணங்களையும் விற்றால்தான் முடியும். இந்தச் சொற்பத் தொகையை வைத்துக்கொண்டு எப்படி ஜீவனம் நடத்துவது? திடீரென்று ஏற்பட்ட இந்த விபரீதத்தை எண்ணிக் கனகம் அழுது அழுது மாய்ந்துபோனாள். முதலில் சற்று அழுது ஓய்ந்ததும், தன் மகள் வீட்டை விட்டுப் போவதற்குமுன் கடைசியாக ஒரு தடவை அவளைக் கேட்டுக் கொண்டு பார்க்கலாம் என்று எண்ணினாள். மடமடவென்று படிக்கட்டு வழியாகக் கீழே இறங்கிப் போனாள், தன் மகள் இருக்கும் அறைக்கு. அவளும் அப்போதுதான் அந்த அறையை விட்டு வெளி வந்துகொண்டிருந்தாள்.

"அம்மா! உன்னிடம் விடைபெற்றுக்கொண்டு போகத் தான் வருகிறேன். என் துணிமணிகளையெல்லாம் வைத்தி ருக்குமிடத்தையும் சொல்லிவிட்டுப்போகலாம் என்றிருந்தேன். சாதாரணமான இரண்டு ஜதைப் புடைவை ரவிக்கை மட்டுந் தான் எடுத்துக்கொண்டு போகிறேன். இதோ கட்டிக் கொண்டிருக்கிறது ஒன்றும், கையிலே ஒன்றும்" என்றாள் சம்பகம்.

கனகவல்லி அவளை மார்போடு அணைத்துக்கொண்டு, "என் கண்ணே! என்னை விட்டுப் போகாதேடீ! நீ ஒருத்தி தானேடி எனக்கு! என் ஆசை முழுவதும் உன்பேரில்தானே! வேறு யார் இருக்கிறார்கள் எனக்கு? நீ போய்விட்டால் என் வாழ்வே சூன்யமாகிவிடுமே! நீ இங்கே இருந்துதான் ஆகவேண்டும்; தாயார் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாதாடி, அம்மா? அப்படிப் பரமசிவஞ் செட்டியாரை உனக்குப் பிடிக்காவிட்டால் சொல்லு, வேறு ஒருத்தனைப் பார்க்கிறேன்" என்றாள் கனகவல்லி.

"அம்மா! நான் சொல்வதை நீ புரிந்துகொள்ள வில்லையே! இப்படி மோசமாக வாழ்ந்து வாழ்ந்து உன் புத்தியே கெட்டுவிட்டது! நான், 'இந்தமாதிரி ஈனத் தொழிலும் நடத்தக்கூடாது. அப்படி நடக்கிற இடத்தி லேயும் இருக்கக்கூடாது' என்று தீர்மானித்துவிட்டேன். பரமசிவஞ் செட்டியாரைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தால் அப்படிச் சொல்லவில்லை; தெரிந்ததா? நான் இதற்கெல்லாம் இணங்கி வந்துவிடுவேன் என்று ஏன் வீணாக எண்ணி ஏமாறுகிறாய்?" என்றாள் சம்பகம்.

"நீ என்னைவிட்டுப் போய்விட்டால் நானும் இந்த இடத்தைவிட்டுப் போகவேண்டியதுதான். என் கண்ணே! நான் ஒன்றும் மிகுத்தவில்லையடி. உன்னை நம்பிக்கொண்டுதான் இருந்தேன்; இப்போது என் குடி முழுகிப்போயிற்றே! என் கையில் ஆயிரம் ரூபாய்கூட இல்லையே! இத்தனை நாளாய் ஆடம்பரமாக வாழ்ந்து பழகிப்போயிற்றே; இனிமேல் எப்படியடி அம்மா பிழைப்பேன்? வயசும் ஆகிவிட்டதே எனக்கு. முன்னே வந்த வரும்படியில் பத்தில் ஒரு பங்குகூட இல்லையே இப்போது! இன்னும் இரண்டொரு வருஷம் போனால் அவ்வளவுகூட வராது. இப்படி என்னை விட்டு விட்டுப் போக உனக்கு மனசு வருகிறதாடி?" என்றாள் கனகவல்லி.

"அம்மா! நீ சுகமாக வாழவேண்டும் என்பதற்காக என்னையும் கெடுத்துக்கொள்ளத் தயாராயில்லை நான்."

"உனக்காகத்தானேடி நானும் விபசாரம் பண்ணினேன், இத்தனை நாள்? நீயும் அப்படியே செய்யவேண்டும் என்று கேட்க எனக்கு உரிமை இல்லையா?"

"அம்மா, என்னைப்போல் உனக்கு இந்தத் தொழிலி டத்தில் வெறுப்பு இருந்ததாகத் தெரியவில்லையே. எனக் காகவும் இந்தத் தொழில் நடத்தவில்லை நீ! நான் பிறப்பதற்கு முன்னேயே நீ இதை ஆரம்பித்துவிட்டாய். அந்தமாதிரி வேண்டா வெறுப்பாகப் பெற்ற குழந்தைதானே நான்? எது எப்படியானாலும் ஆகட்டும்; இந்த ஆபாச இடத்தில் இனிமேல் நான் இருக்கமாட்டேன். நீயும் இந்த ஈனத் தொழிலை விட்டு விட்டு ஏதாவது நல்ல வழியில் - கௌரவமான வழியில் - பிழை" என்றாள் சம்பகம்.

"என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று கேட்டாள் கனகவல்லி.

"மருத்துவம் பாரேன்; பாட்டுக் கற்றுக்கொடேன்" என்றாள் சம்பகம்.

"அந்தமாதிரி நாலு பேருக்கு ஓடாய் உழைத்து நாலு காசு ஸம்பாதி என்கிருயா? முடியவே முடியாது. இந்தத் தொழிலே எனக்குப் போதுமடியம்மா! உன் கல்நெஞ்சு கரையும் என்று நினைத்தேனே, என்னைச் சொல் – மடைச் சியை! சரி, உன் இஷ்டம்!" என்ருள் கனகவல்லி.

சம்பகம் வாயிலை நோக்கிச் சென்ருள்.

"எங்கே போகிருய்?" என்று கேட்டாள் கனகம்.

"கிருஷ்ணுபாய் வீட்டுக்கு. எனக்கு ஒத்தாசை பண்ணுவதாகச் சொல்லியிருக்கிருள் அவள்."

"அங்கே போய் என்ன பண்ணுவாயாம்?"

"பாட்டு வாத்தியாரம்மாவாய், சிறு பெண்களுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்துப் பிழைக்கப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே சம்பகம் வெளியே சென்ருள்.

கனகவல்லி தன் அறைக்குப் போய் மறுபடியும் ஓலம் வைக்கத் தொடங்கினுள். "என்னைப்போல் இப்படித் துரதிர்ஷ்டம் பிடித்தவளும் உண்டா? ஊரிலேயே என் பெண்ணைப்போல் வித்தையும் அழகும் சேர்ந்து வாய்த்தவள் இல்லவே இல்லை என்று இருந்தேனே! மற்றத் தாஸிகளெல்லாங்கூடப் பொருமைப் படுவார்களே, என்னைப் பார்த்து! இப்போது அவர்களெல்லாம் பார்த்து நகைக்கும்படி என்னை விட்டுப் போய்விட்டாளே! இந்த மாதிரிக் கல்நெஞ்சுக் காரியைப் பார்த்ததேயில்லை நான்! எனக்குத் தெரிந்து எந்தத் தேவடியாள் வீட்டிலும் இப்படி நடந்து நான் கண்டதில்லையடி, அம்மா! நாசமாய்ப்போன படிப்பு! அதுதான் அந்தப் பெண்ணை இப்படி எதற்கும் அடங்காமல், நன்றி கெட்டுப் போகும்படி பண்ணிவிட்டது! ஆனுலும், எனக்கென்னவோ நிச்சயமாக இன்னும் கொஞ்ச நாளில் அவள் சோற்றுக்கில்லாமல் திண்டாடித் திரும்பிவருவாள் என்றுதான் படுகிறது. அவளும் என்னைப்போல் சுகத்தில் வளர்ந்தவள் தானே? அவ்வளவு சுலபமாக அதையெல்லாம் விட்டுவிட முடியுமா? சிறு பெண்களுக்குப் பாட்டுக் கற்றுக்கொடுக்கப் போகிருளாம்! சீக்கிரமே சலித்துப்போய்விடும் அவளுக்கு. இதற்காக நான் வருத்தப்படுவானேன்? அப்படி ஜாஸ்தியாகப் போனுல்கூட இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே தானே வராது போகிருளா? அதுவரைக்கும் கிருஷ்ணு பாயுடன் தானே இருக்கப் போகிருள்? என்ன பயம்?" என்று கனகவல்லி தன்னைத் தானே தேற்றிக்கொண்டாள். பிறகு, ஆறு கோப்பை சாராயம் பருகிவிட்டுத் தூங்கப் போய்விட்டாள். அன்றிரவு முழுவதும் பலவிதமான துர் ஸ்வப்னங்கள்

கண்டுகொண்டிருந்தாள். காலையில் புத்தி சற்றுத் தெளிந்து இருந்தது அவளுக்கு. அதுமுதல் பிரதி தினமும், 'சம்பகம் சீக்கிரம் வந்துவிடுவாள், வந்துவிடுவாள்' என்ற நம்பிக்கையிலேயே காலந்தள்ளி வந்தாள்.

ஒரு மாதமும் ஆகிவிட்டது. சம்பகம் திரும்பி வந்த பாடில்லை. பணக்கார இடங்களாகப் பிடித்து ஆறு பெண்களுக்குப் பாட்டுக் கற்றுக் கொடுத்து வந்தாள். வாய்ப்பாட்டு வாத்தியம் இரண்டிலும் நல்ல பழக்கமும் ஞானமும் இருந்ததால் அந்தப் பெண்களுக்குத் தன்னைப்போலவே ஸங்கீதத்தில் உற்சாகமூட்டி வழிக்குக் கொண்டுவர அவளால் முடிந்தது. கிருஷ்ணுபாய் இந்த விஷயத்தில் அவளுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்தாள். மடமடவென்று நாலு பணக்காரர் வீட்டுக்குத் தானே நேரில் போய்ப் பெண்களின் தாய்மாரைக் கண்டு ஏற்பாடு பண்ணிவிட்டு வந்தாள் அவள். மாதம் அறுபது ரூபாய்க்குக் குறையாமல் சம்பகத்துக்குக் கிடைத்துவந்தது; அவள் சிக்கனத்துக்கு அது யதேஷ்டமாகவே இருந்தது. முதல் மாதக் கடைசியில் ஓர் ஆள் மூலம் தாயாருக்கு இருபது ரூபாய் கொடுத்து, "நான் தரவேண்டிய பாக்கிக்கு இது வட்டி" என்று சொல்லி யனுப்பினுள். பெண் கொடுத்தனுப்பிய அந்த இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளையும் முதலில் கிழித்தெறியலாமா என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது கனகவல்லிக்கு. ஆனுல் தனக்கு வரும்படி குறைந்து வருவதையும் குடிக்குப் பணம் போதாதிருப்பதையும் கண்டு சற்று ஆய்ந்தோய்ந்து யோசனை பண்ணிப் பார்த்ததும் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு, பணத்தை வாங்கி வைத்துக் கொண்டாள். கிருஷ்ணுபாயின் வீட்டிலேயே ஒரு பாகத்தில் சம்பகம் குடியிருந்தாள். அவளும் கிருஷ்ணுபாயும் வெகு அந்நியோன்யமாக வாழ்ந்துவந்தார்கள். ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. முன்னைப்போல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் பணம் வேண்டுமே என்ற கவலை இல்லை; நிம்மதியாக இருந்தாள். சபைகளிலும் கல்யாண வீடுகளிலும் கச்சேரி செய்து வந்தாள்; நல்ல வரும்படி கிடைத்துக் கொண்டிருந்தது. கனகவல்லிக்கும் பிரதி மாதமும் பெரிய பெரிய தொகையாகப் பணம் வந்து கொண்டிருந்தது. ஆனுலும் கனகவல்லிக்கு ஸந்தோஷமோ திருப்தியோ ஏற்படவில்லை. பணத்தைத் தாராளமாக ஸம்பாதிக்க வேறு உபாயம் இருக்கும்போது இது எந்த மூலை? குலத்தொழிலைச் செய்து ஆயிரக்கணக்காய் ஸம்பாதிப்பதைவிட்டுக் கேவலம் இந்த நூற்றுக்கும் இரு நூற்றுக்கும் பார்த்துத் தன் மகள் நாள்முழுவதும் இப்படி உழைப்பானேன்? இதுதான் அவளுக்குப் புரியவில்லை. ஆனுலும்

மகளிடத்தில் இந்தப் பேச்சை எடுக்கவும் அச்சமாய் இருந்தது அவளுக்கு. அன்று பிரிந்தார்களே, அதற்கப்புறம் தாயாரும் பெண்ணும் ஒருவரையொருவர் பார்க்கக்கூட இல்லை. அவள் பெண்மேல் கண்வைத்து வீட்டில் வழக்கமாக வரும் லோலாயி கள், பெண் போனளோ இல்லையோ அவளைக் கைவிட்டு விட் டனர்! கனகவல்லியின் வரும்படி ஒரே யடியாகக் குறைந்து விட்டது; அதனுல் வழக்கமாகக் குடித்துவந்த அளவுக்குச் சாராயம் குடிக்க முடியவில்லை. இப்போது அவள் எதற்கும் துணிந்துவிட்டாள்.

சம்பகம் வீட்டைவிட்டுப் போய் ஒரு வருஷமாயிற்று. ஒருநாள் மாலை, ஜோராக ஆடை உடுத்த ஆசாமி ஒருவன் கனகவல்லியைப் பார்க்க வந்தான். பேஷான சாராயம் பன்னிரண்டு புட்டி அவளிடம் கொடுத்து, தான் சியாமளகிரி ராஜாவின் ஆள் என்று தெரிவித்தான். கனகவல்லி மயங்கி விட்டாள். தனியாக அவளை அழைத்துச் சென்று அந்த ஆள், "எங்கள் ராஜா நல்ல பணக்காரர். உன் பெண்மேலே அவருக்கு இருக்கிற ஆசை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. ஸமீபத்தில் ஒரு கச்சேரியில் அவளைப் பார்த்தார். அதற்கப்புறம் நடந்த மற்றொரு கச்சேரியில் விலை யுயர்ந்த ஒரு தங்கப் பதக்கம் பரிசாகக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு நன்றி செலுத்தும் பாவனையாகச் சற்றுப் புன்சிரிப்புச் சிரித்தாளே ஒழிய இணங்கினதாகத் தெரியவில்லை. ராஜா அவளைப் பற்றித் தீர விசாரித்ததில் நீதான் அவள் தாயார் என்று தெரிந்தது. உன்னைவிட்டு ஏன் பிரிந்தாள் என்றும் அறிந்துகொண்டார். தன்னைப்போல் ராஜாக் களுக்கென்றே படைத்த இந்த மாதிரிக் கெட்டிக்காரப் பெண் ணுக்குக் கேவலம் சாதாரண வியாபாரிப் பயல் ஒருத்தனைப் பிடித்தாளே என்று உன்னைத் திட்டினுர். உன் பேச்சைக் கேட்காதிருந்தாளே, பெருந்தன்மையான பெண் என்று அவளைச் சிலாகித்துப் பேசுகிறுர். தம் மூன்று ராணிகளின் பேரிலும் அவருக்குச் சலிப்புத் தட்டிவிட்டது. உன் பெண் மேல் மோகித்து விழுந்துவிட்டார். உன் பெண் அந்தக் கிருஷ்ணுபாயோடு இருக்கிறவரைக்கும் தனியாக அவளைச் சந்தித்துப் பேசி வழிக்குக் கொண்டுவர முடியாது என்று கண்டுகொண்டுதான் உன்னிடம் என்னை அனுப்பியிருக்கிறுர். கையிலே ஆயிரம் ரூபாயும் கொடுத்திருக்கிறுர். உன் பெண் ணேடு எப்படியாவது சமாதானமாகப் போய் அவளை இங்கே அழைத்து வந்துவிட வேண்டும்; அப்புறம் இராவேளைகளில் தாம் இங்கே வரத் தகுந்த ஏற்பாடுகளும் பண்ணச்சொன்னுர்"

என்று சொல்லி ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றைக் கனகவல்லி யிடம் நீட்டினுன்.

கனகவல்லியும் அதைப் பெற்றுக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் பொங்க, "ராஜா தங்கமானவர்தான். லக்ஷண மாகத்தான் இருப்பார். எந்தப் பெண்பிள்ளையும் அவரைப் பார்த்தால் மயங்கத்தான் மயங்கிவிடுவாள். ஆனுல் சம்பகம் போக்கே அலாதியாயிற்றே! அதோடு கிருஷ்ணுபாயும் சேர்ந் திருக்கிருள். ஒரே பிடிவாதமாக இருப்பாளே! என்னிடம் திரும்பி வருவாளா என்றுதான் சந்தேகமாய் இருக்கிறது!" என்ருள்.

"ஏன் வராமல்? சரியான வழியில் போகவேணும் நீ. எல்லாம் சுலபமாக முடிகிறதா இல்லையா பார்" என்ருன் அந்த ஆள்.

"அந்த வழிதான் என்ன? சொல்லுங்களேன்?" என்று கேட்டாள் கனகவல்லி.

"அவளிடம் போய், 'உன்னைவிட்டு இருக்க முடியவில்லை யடி, அம்மா! என் பழைய தொழிலை விட்டுவிடுகிறேன்; இனிமேல் கௌரவமாகப் பிழைக்கிறேன். என்னேடு வந்து வீட்டில் இருந்தாயானுல் போதும்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொள். நிச்சயமாக வருவாள் பார். அப்புறம் ஒருநாள் ராத்திரி ராஜாவே உன் வீட்டுக்கு வந்து சம்பகத்தைப் பார்க் கும்படி ஏற்பாடு பண்ணலாம். மற்ற ஸங்கதியெல்லாம் அவர் பாடு என்று விட்டுவிடு" என்ருன் அந்த ஆள்.

"என் மகளைப் பலாத்காரமாக ஒன்றும் செய்ய மாட்டாரே?"

"ஊஹூம். அவளைத் தட்டிக்கொடுத்து அவள் கேட்பதை யெல்லாம் கொடுப்போமே யொழிய அவ்வளவு தூரத்துக்குப் போகமாட்டோம்."

"எனக்கு என்ன தருவீர்கள்?" என்று கேட்டாள் கனகவல்லி.

"ராஜாவும் சம்பகமும் சந்திக்கிருர்களே, அன்றைக்குப் பத்தாயிரம் கொடுத்துவிடுகிருேம்; அப்புறம் மேலே மேலே வந்துகொண்டே இருக்கும்" என்ருன் அந்த ஆள்.

"அவளுக்கு?"

"கனவில்கூட எண்ணமுடியாத அவ்வளவு பொன்னும் மணியும் வந்து குவியும். நவ ரத்தினங்களும் பதித்த மாலை ஒன்று 50,000 ரூபாய் பொறும்படியானது—முதல் நாள் ராத்திரியே அவள் கையில் கொடுத்துவிடுகிருர். அதோடு

நின்றதா ; இன்னும் எத்தனையோ! எங்கள் ராஜா புராதன மான வமிசத்தைச் சேர்ந்தவர், நல்ல பணக்காரர். கலைகளை ஆதரிப்பவர் என்றுதான் உனக்குத் தெரியுமே! சரி ; சம்மதந் தானே ?" என்றான் அந்த ஆள்.

கனகவல்லி, "எனக்குச் சம்மதந்தான். இது முடிந்ததும் இந்தத் தொழிலையே விட்டுவிடுவதாக இருக்கிறோம். எங்கள் ஆயுசு காலத்துக்கு இது போதும்!" என்றாள்.

"இதோடு முடிந்துவிடும் என்று பார்க்கிறாயா? எங்கள் ராஜா உன் பெண்ணை அவர் ஊருக்கேகூட அழைத்துக் கொண்டு போகலாம்; அவள்மேலே அவ்வளவு ஆசையாய் இருக்கிறார்! வேறே ஜாதி அல்லவா? கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாவிட்டாலும் நாலாவது ராணியாகவே பாவித்து நடத்தவும் நடத்துவார்" என்றான் அந்த ஆள்.

"அப்படியானால் என் மனோரதம் ஈடேறின மாதிரி தான்" என்றாள் கனகவல்லி.

உடனே அந்த ஆளும், 'ராஜா ஐயாயிரமானாலும் போ பரவாயில்லை என்று சொல்லியிருந்தார். நாம் ஆயிரம் ரூபாய்க்கே இவளை வளையக் கட்டிவிட்டோமே' என்று வெகு திருப்தியுடன் புறப்பட்டுச் சென்றான். மீதித் தொகையில் இரண்டாயிரத்தை அமுத்திவிட்டு, தான் ரொம்பச் சிரமப் பட்டு மூவாயிரத்துக்கு அவளை ஒப்புக்கொள்ளச் செய்த தாக ராஜாவிடம் தெரிவிக்க வேண்டுமென்று தீர்மானித்தான். 'அந்த மடராஜா இப்பேர்ப்பட்ட அசாத்தியமான காரியத்தை நாம் சாதித்து இரண்டாயிரம் ரூபாயும் மிகுத்திக் கொடுத்த தைக் கண்டு நம்மிடம் பிரீதியாக நடந்துகொள்வான்' என்று எண்ணும்போதே அவனுக்குக் குதூகலமாய் இருந்தது.

'மிஞ்சிமிஞ்சி என்ன? ஏழைகளைப் பணக்காரன் ஏமாற்றி இன்னும் பணக்காரனாகவில்லையா? அதைப்போல் பணக்கார னையும் ஏழை ஏமாற்றிப் பிழைக்கிறான்! எல்லா வேலைக்காரர் களும் சேர்ந்து கட்டுப்பாடாக, 'லாபத்தில் எங்களுக்கும் பங்கு கொடுக்கவேண்டும்' என்று கேட்டால் முதலாளி எப்படிக் கோடீசுவரனாக முடியும்? இந்த ராஜாவைக் கொள்ளை அடித் தால்தான் என்ன முழுகிப்போயிற்று? இவன் தினமும் குடிகளைக் கொள்ளை அடிக்கிறானே! இவன் பாட்டன் முப்பாட் டன்மார் இப்படியெல்லாம் சேர்த்த சொத்துதானே இது? இன்னும் கேட்டால், சண்டை ஸமயத்திலும் சாதாரண ஸமயங்களிலும் வாஸ்தவமாகவே கொள்ளையடித்துச் சம்பா தித்ததுதானே?' என்று எண்ணினான் அந்த ஆள்.

மறுநாள் காலையிலேயே, கனகவல்லி கண்ணீர் பெருகச் சம்பகத்திடம் போய், "கண்ணே! உன்னைவிட்டு இருக்க முடியாதடி! என் செல்வமே! நீ ஒருத்திதானேடி எனக்கு? இந்த ஒரு வருஷமாக நானும் சமாளித்துப் பார்க்கிறேன்; முடிந்தால்தானே! நாளுக்கு நாள் உன்னைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலே அதிகமாயிற்று! இனிமேல் சகிக்கமுடியாது என்றால்! என்னோடு புறப்பட்டு வாடியம்மா; இனிமேல் ஸத்யமாக அந்த வழிக்குப் போகமாட்டேன்; சொன்னேன்" என்றாள்.

"வாஸ்தவமாகவா, அம்மா?" என்று கண்களில் நீர் பெருகக் கேட்டாள் சம்பகம்.

"நிஜமாக; கடவுள்பேரில் ஆணையாக! இனிமேல் யாரையும் வைத்துக்கொள்ளமாட்டேன். என்வரைக்கும் அது கெடுதலாகப் படாவிட்டாலும் உனக்காக என் தொழிலை விடத் தயாராயிருக்கிறேன்; இல்லாவிட்டால் நீ ஒப்புக்கொள்ள மாட்டாய். நீ என் அருகில் இருந்தால் போதும்" என்றாள் கனகவல்லி.

"அம்மா, என்னிடம்மட்டும் உனக்கு ஆசை உண்டு, எவ்வளவு வேண்டுமானாலும் விட்டுக்கொடுப்பாய் என்று முன்னமே எனக்குத் தெரியும். சுகத்திலேயே இருந்து உனக்குப் பழகிப் போய்விட்டது; கொஞ்சநாள் வரைக்கும் அதை விடுவதென்றால் சிரமமாகத்தான் இருக்கும். ஆனாலும் எல்லாம் நன்மைக்குத்தானே! கடைசியிலே 'நாம் அன்று செய்து கொண்ட தீர்மானம் எவ்வளவு சிலாக்கியமானது' என்று உனக்கே படப்போகிறது! சரி, வீட்டுக்குப் போகலாம் வா" என்றாள் சம்பகம்.

கிருஷ்ணபாயிடம் அவள் விடை பெற்றுக்கொள்ளும் போது மிகவும் உருக்கமாய் இருந்தது, அக்காட்சி. பிரதி தினமும் அங்கே வருவதாகச் சொல்லிவிட்டுத் தன் தாயாருடன் பழைய வீட்டுக்குப் போனாள்.

அதுமுதல் கனகவல்லியின் வீட்டுக்குப் பழையமாதிரி எவரும் வருவதில்லை. ஊர் முழுவதும் பலவித வதந்திகள் பரவின.

'யாரோ ஸாது ஒருவர் உபதேசம் பண்ணினதால் கனகவல்லி தன் பழைய ஈனத்தொழிலை விட்டுவிட்டாள்' என்றனர் சிலர்.

வேறு சிலர், 'சம்பகத்தின்மேலுள்ள ஆசையால் தன் வழக்க ஒழுக்கத்தைச் சீர்திருத்திக்கொண்டாள்' என்றனர்.

மற்றும் சிலர், 'சம்பகத்தைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிருனும், யாரோ பணக்காரன்; அதற்கு முன்னுலே, கனகவல்லி பழையபடி இருந்தால் சரிப்படாது; அதையெல்லாம் விட்டுவிடவேண்டும் என்று சொல்லியிருக் கிருனும்' என்றனர்.

தன் தாயார் இப்படி மாறினது சம்பகத்துக்கு ஸந்தோஷமாக இருந்தது. ஆனுலும், 'அம்மா எவ்வளவு சிரமப்படு வாளோ? பாவம்' என்றும் சற்று வருத்தம் அவளுக்கு.

அடிக்கடி அவள், "அம்மா, இப்படித் தனியாக இருக்கிற தென்ருல் உனக்குக் கஷ்டமாயில்லையா?" என்பாள்.

அவள் தாயாரும், "நீ கவலைப்படாதே, அம்மா, என் கண்ணே! நீ அங்கே போயிருந்தாயே அப்போது இருந்ததை விடவா தனியாக இருந்து அவதிப்படப் போகிறேன்!" என்ருள்.

சம்பகவதி இன்பமாகக் காலங்கழித்து வந்தாள். ஏறக் குறையப் பகல்வேளை முழுதும் பாட்டுக் கற்றுக்கொடுத்து வந்தாள்; சங்கீதக் கச்சேரிகள் நடத்திவந்தாள். கிருஷ்ணு பாயிடமும் மற்றச் சினேகிதர் வீட்டுக்கும் போய் வருவாள். இப்படியே ஒரு மாதம் கழிந்தது. சியாமளகிரி ராஜாவின் ஆளுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி நடக்கவேண்டுமே! கனகவல்லியும் இதற்குள் அதற்கு வேண்டிய யோசனை யெல்லாம் பண்ணிக்கொண்டுதான் இருந்தாள். அந்த ஆளையும் அடிக்கடி ரகசியமாகக் கண்டு பேசிவந்தாள்.

ஒருநாள் பட்டணத்திலுள்ள தமது மாளிகையிலேயே தம்மை வந்து பார்க்கலாம் என்று கேட்டுக்கொண்டார் ராஜா.

அவர் ரொம்ப மரியாதையாகவும் பெருந்தன்மையாகவும் அவளிடம் நடந்துகொண்டார். தம் கையாலேயே ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை அவளிடம் கொடுத்து விரைவில் சம்ப கத்தைப் பார்க்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

"அவளில்லாமல் என் வாழ்வே சூன்யமாய் இருக்கிறது. அவள்மேல் எனக்கு இருக்கிற ஆசை சொல்லி முடியாது. சீக்கிரமாகக் கிட்டும்படி பார்" என்ருர்.

"மகாராஜா! நான் ஒரு யோசனை பண்ணிவைத்திருக் கிறேன். முன்னுலே உங்கள் சம்மதத்தைக் கேட்டுக்கொண்டு செய்யலாம் என்று பார்க்கிறேன்" என்ருள் கனகவல்லி.

"என்ன? சொல்லேன்" என்ருர் ராஜா.

"சின்ன வயசிலிருந்து என் மகள் தன் தகப்பனுர் யார் என்று கேட்டுக்கொண்டே யிருக்கிறுள். நானும் 'ஸமயம் வரும்போது தெரிவிக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு வருகிறேன். நீங்கள் மட்டும் நான் சொல்கிறமாதிரி தனுக்காக ஒரு கடுதாசி எழுதி, தனியாக ஓர் ஆள்மூலம் அனுப்பிவிட வேண்டும்: கடிதம் இப்படி இருக்கவேண்டும்.

'உனக்கும் காலஞ்சென்ற என் தகப்பனுருக்கும் இருந்த ஸம்பந்தம் எங்களுக்கு ஆதியிலிருந்தே பிடிக்கவில்லை; அதனுல் தான் உன்னேடோ,உங்கள் இருவருக்கும் பிறந்த சம்பகத்தோடோ கடிதப் போக்குவரத்து ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை, இது வரை. ஆனுல் சம்பகம் தன் தகப்பனுர் குணத்தைத்தான் கொண்டு வந்திருக்கிறுள், கற்புக் குலேயாமல் சீரிய வாழ்க்கை நடத்தப் போகிறுள், உன்னேயும் பழைய துன்மார்க்கத்திலிருந்து திருப்பி விட்டாள் என்று ஸமீபத்தில் அறிந்தேன். எனக்குத் தங்கை முறையான சம்பகத்தைப் பார்த்து அவளோடு பழகவேண்டு மென்று ஆவலாய் இருக்கிறேன். என்னுல் முடிந்தவரை இனி மேல் அவளுக்கு ஒத்தாசை புரிவதென்றும் தீர்மானித்திருக் கிறேன். இன்று இரவு பத்துமணிக்கு உன் வீட்டுக்கு வருவதாக இருக்கிறேன். இப்போது இருக்கும் நிலேயில் உன்னேப் பகிரங்க மாகப் பார்க்க வருவதென்ருல் நன்ருய் இராது. வேலேக்காரர்களே ஏதாவது காரணம் சொல்லி அனுப்பிவிடு. நான் என் தங்கையைத் தனியே ஸந்திக்கும்படி ஏற்பாடு செய்.'

"இந்தக் கடிதம் ராத்திரி எட்டு மணிக்கு எனக்கு வந்து சேரவேண்டும். அதற்குள் சாப்பாட்டை முடித்துவிட் டிருப்போம். சம்பகமும் அதற்குமேல் வெளியே போகமாட் டாள். ஒரே ஒரு வேலேக்காரிதான் இருக்கிறுள் எனக்கு. இன்று ராத்திரி சாப்பாடானதும் அவள் தன் தங்கச்சி வீட் டுக்குப் போய்வரலாம் என்று உத்தரவு கொடுத்திருக்கிறேன். அவள் தங்கச்சி வீடு தூரத்திலே இருக்கிறது. நீங்கள் வரு வதற்குள் உங்களுக்கும் அவளுக்கும் அண்ணன் தங்கைச்சி முறை என்று கதையளந்து உங்கள்மேல் ஆசைவரும்படி பண்ணுகிறேன். நீங்களும் வந்ததுமே ரொம்ப வாஞ்சை யோடு அவளிடம் நடந்துகொள்ள வேண்டும். 'நாமெல்லாந் தான் ஒற்றுமையாகப் போய்விட்டோமே; எல்லாரும் சேர்ந்து காப்பி சாப்பிடலாமோ இல்லேயோ?' என்கிறேன். அவளுடைய காப்பியில் வெளிக்குத் தெரியாதபடி மயக்க மருந்து கலந்து கொடுத்துவிடுகிறேன். அவள் தூங்கும் வரை பேசிக்கொண்டே இருக்கலாம். அப்புறம் உங்கள் இருவரை யும் அவள் அறையிலேயே விட்டுவிட்டுப் போய்விடுகிறேன். அங்கே எல்லாம் தயாராய் இருக்கின்றன. உங்கள் மனசுக்குத்

திருப்தியாக இருந்துவிட்டுப் போகலாம். அவள் எழுந்த பிற்பாடு நடந்ததை அறிந்தால்கூடப் பழையபடி கற்போடு இருப்பதாகப் பாசாங்கு பண்ணமுடியாது. வேறு விதியின்றி உங்களுக்கு இணங்கி உங்கள் வைப்பாட்டியாக வேண்டியது தான்! மயக்க மருந்து கொடுக்காவிட்டால் அவள் உங்களுக்கு இணங்கவே மாட்டாள். அவள் போக்கே அலாதி!" என்ருள் கனகவல்லி. "உம். அவளுக்குப் பிரக்ஞை இராதிருக்கும் போது அதில் அவ்வளவு சுகம் ஏது? ஆனாலும் என்ன பண்ணுவது? அது ஒன்றுதான் இப்போதைக்கு நடக்கக்கூடியது. பேஷான யோசனைதான் பண்ணியிருக்கிருய்! இருந்தாலும் முதல்முதல் அநுபவிக்கிற இன்பம் இதில் இராது. ஏற்கனவே என் தகப்பனுருக்கு இப்படிப் பெயர் உண்டு; அதோடு இதுவும் ஒன்ருயிற்று! ஆனல் இளவயசில் உன்னைப் பார்த்திருந்தால் நிச்சயமாகச் சும்மா விட்டிருக்கமாட்டார். எப்போது ராத்திரி வரும் வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன். தனியாக, யாரும் அறியாதபடியே வருகிறேன்" என்ருர் ராஜா.

"சரி; எனக்குச் சேரவேண்டிய பத்தாயிரத்தைக் கொடுங்கள்" என்ருள் கனகவல்லி.

ராஜா 'டிராயரை'த் திறந்து பத்து ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை அவளிடம் கொடுத்தார். கனகவல்லிக்கு ஸந்தோஷம் தலைகால் தெரியவில்லை. ராஜாவிடம் மிகுந்த நன்றி பாராட்டினுள்.

"மகாராஜா! நவரத்தினமாலையையும் மறக்கமாட்டீர்களென்று நினைக்கிறேன்" என்ருள்.

"மறப்பேனு?" என்ருர் ராஜா.

கனகவல்லி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் புறப்பட்டாள். வழியில் இருந்த பாங்கிக்கும் போய்விட்டுத்தான் வீடு திரும்பினுள்.

அன்று இரவு எட்டு மணிக்குக் கனகவல்லியும் அவள் மகளும் சாப்பிட்டானதும் வேலைக்காரி தன் தங்கை வீட்டுக்குப் போய்விட்டாள். அப்போது யாரோ ஓர் ஆள்வந்து கதவைத் தட்டவே சம்பகவதி கதவைத் திறந்தாள். அவன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அது கனகவல்லியின் பெயருக்கு வந்திருந்தது, சியாமளகிரி ராஜாவிடமிருந்து. கனகவல்லி அதைப் படித்ததும் சம்பகத்தை அன்போடு அணைத்துக் கொண்டு, "என் கண்ணே! நம் தரித்திரம் நீங்கிற்று! இனி

மேல் பரவாயில்லை. உன் தமையன் உன்னைப் பார்க்க வருகிருனும்" என்றாள்.

"யார் அம்மா, சியாமளகிரி ராஜா எனக்குத் தமையன் முறையா என்ன?" என்று குரல் நடுங்கக் கேட்டாள் சம்பகம்.

"அவர் தகப்பனுர்தான் உன் அப்பா. அவரும் நானும் இன்பமாக இருந்த நாளில்தான், அம்மா, நீ பிறந்தாய்" என்றாள் கனகம்.

"இதை முன்னேயே ஏன் நீ சொல்லவில்லை, அம்மா? நான் எத்தனையோ தடவை கேட்டிருக்கிறேனே!" என்றாள் சம்பகம்.

"சரி. கடுதாசியைப் படித்துப் பார்; விஷயம் புரியும். நமக்கு ஓர் ஏற்பாடு பண்ணிவிட்டுப் போவதற்கு முன்னேயே உன் தகப்பனுர் இறந்து போய்விட்டார்; அவர் ராணியும் மகனும் என்னை வெறுத்து வந்தார்கள். இப்போது தான் ராஜா நம்மோடு சமாதானத்துக்கு வரப் பார்க்கிருர். இது பெரிய விசேஷந்தானே! ராஜாவே வரட்டும்; வந்த பிற்பாடு சொல்லலாம் என்று இருந்தேன்; அவர் கட்டாயம் வருவார் என்று எனக்குத் தெரியும்" என்றாள் கனகவல்லி.

"அம்மா, அவரைக் கண்டால் எனக்கும் பிடித்துத்தான் இருக்கிறது. நல்ல மனுஷ்யர்; ஆளும் நன்ருக இருப்பார். எனக்கு ஓர் அழகான தங்கப் பதக்கம் கொடுத்தார், ஒரு கச்சேரியின்போது. அவரைப் பார்க்கவேண்டுமென்று எனக்கும் ஆவலாகத்தான் இருக்கிறது – அதுவும் எனக்கு அண்ணு முறையாக வேண்டும் என்று தெரிந்ததிலிருந்து. இன்றைக்கு ராத்திரியெல்லாம் பேசிக்கொண்டே இருக்கலாமோ இல்லையோ?" என்றாள்.

தன்னுடைய யுக்தி இவ்வளவு சுலபமாகப் பலித்து விட்டதே என்று கனகவல்லி பூரித்துப் போனாள். ராஜா வருகிறவரைக்கும், சியாமளகிரி மூத்த ராஜாவோடு அவள் இன்பமாய்க் கழித்த நாட்களைப்பற்றியும், அவர் எப்படி இருப்பார் என்றும் கேள்வி கேட்டுத் தொளைத்தெடுத்து விட்டாள் சம்பகம். கனகவல்லி தன் மனசுக்குத் தோன்றினபடி அவரைப்பற்றியும் இன்பமாய்க் கழிந்த அந்த நாட்களைப்பற்றியும் கதை அளந்தாள்.

"ஆஜானுபாகுவாய் அசுரபலம் படைத்தவர். மகரிஷிகளைப் போல் ஞானி. குழந்தை உள்ளம். ராஜ வம்சத்துக்கு ஏற்ற தயாளம்" என்று கனகவல்லி அவரைப்பற்றி வர்ணித்துப் புகழும்போது சம்பகவதிக்குச் சலிப்பில்லா

மல் இன்னும் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போல் அவ்வளவு ஆனந்தமாய் இருந்தது.

கனகவல்லி, "என்னை வைத்துக்கொண்டு இருந்தாரே, அது ஒன்றுதான் அவரிடத்திலுள்ள ஒரே குறை!" என்று சொன்னாள்.

சம்பகம், "அது ஒன்றும் பிரமாதமில்லை. தம் ராணிமாரிடத்தில் என்ன என்ன இடிபட்டாரோ, பாவம்! அதோடு பூலோகத்தில் ஒரு குற்றங்கூட இல்லாமல் யார்தான் இருக்கிறார்கள்?" என்றாள்.

சரியாகப் பத்து மணிக்குக் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. சம்பகவதி கதவைத் திறக்க ஓடினாள். கதவைத் திறந்ததும் ராஜா உள்ளே நுழைந்தார்; அவள் அதைச் சாத்திவிட்டு வந்ததும் ராஜா அன்போடு அவளை நெருங்கி, "தங்கச்சி! எத்தனை நாள் நீயும் நானும் பிரிந்திருக்க வேண்டியிருந்தது பார்!" என்றார்.

கனகவல்லியிடம் வந்து, தாம் இத்தனை நாள் அவர்களைக் கவனிக்காமல் இருந்ததைப் பொறுத்தருளும்படி கேட்டுக் கொண்டார்.

"இனிமேலாவது உன் தங்கச்சியைச் சரிவரக் கவனித்துக் கொள்வாய் என்று நினைக்கிறேன்" என்றாள் கனகம்.

"நிச்சயமாக எனக்குச் சொந்தத் தங்கை யாரும் இல்லை. நம் அருமைச் சம்பகமாவது இருக்கிறாளே தங்கை முறையாக. முதல் முதலாக இந்த நவரத்தினமாலையைக் கொடுக்கப் போகிறேன், அவளுக்கு" என்று சொல்லிக்கொண்டே 50,000 ரூபாய் பொறுமான அவ்வாபரணத்தைச் சம்பகத்தின் கழுத்தில் கம்பீரமாகப் போட்டார்.

சம்பகம் அடைந்த சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. கனகவல்லி அவளையும் ராஜாவையும் சம்பகத்தின் அறைக்கு அழைத்துச் சென்றாள். கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு உள்ளே போய் மூன்று கோப்பை காப்பி கொண்டு வந்தாள்.

"இந்த மாதிரிச் சுபத்தைக் கொண்டாட வேண்டாமா? எல்லாரும் சேர்ந்து காப்பி சாப்பிடலாம் வாருங்கள்" என்று சொல்லி ராஜாவிடம் ஒரு கோப்பையும் சம்பகத்திடம் ஒரு கோப்பையும் நீட்டினாள். மூன்று பேரும் காப்பி அருந்தினார்கள். மயக்க மருந்து வேலைசெய்ய ஆரம்பித்தது.

தன் கட்டிலில் சம்பகம் அயர்ந்து நித்திரை போகும் வரை, தம் யானைகளைப்பற்றியும் தம் வேட்டை அனுபவங்களைப் பற்றியும் ராஜா ஸ்வாரஸ்யமாகவும் ஸரளமாகவும் பேசிக் கொண்டே இருந்தார். பிறகு, கனகவல்லி நாலைந்து புட்டி சாராயம் கொண்டுவந்தாள். அவளும் ராஜாவும் நன்றாகக் குடித்தார்கள். குடிமயக்கத்தால் உறக்கம் மேலிடக் கனகவல்லி அந்த அறையைவிட்டு அகன்றாள்.

அவள் போனதுமே, ராஜா சம்பகத்தை இறுகத் தழுவிக் கொண்டு, "என் கண்ணே! கண்ணே சம்பகம்! உன்னோடு கூடி இன்புறும் நாள் என்று வரும், என்று வரும் என்று எவ்வளவு காலமாக ஏங்கிக் கிடக்கிறேன் தெரியுமா?" என்றார்.

சம்பகம் உணர்ச்சியின்றிக் கிடந்தாள். அவர் பிடியி லிருந்து மீளத்தான் அவளுக்குச் சக்தி இல்லையே!

ராஜா தம் இச்சையைப் பூர்த்தி செய்துகொண்டார். ஒரு மணி நேரம் ஆயிற்று, மயக்கம் நன்றாகத் தெளிய; தெளிந்தவுடன் சம்பகம் எழுந்து பார்த்தபோது ராஜா தன்னை அணைத்துக் கொண்டிருப்பதையும் தன் ஆடை சீர் குலைந்திருப்பதையும் கண்டாள். திகிலடைந்தவளாய், "என்னை விடு! இதென்ன, எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றாள்.

"கண்ணே சம்பகம்! என்னை மன்னித்து விடு! உன்னை ஏமாற்றிவிட்டேன். உன்னை எப்படியாவது அடைய வேண் டும் என்று கோரினேன். வேறு வழி இல்லாததால் இப்படிச் சூழ்ச்சி செய்தேன். என்னை மன்னித்து விடேன்; விடுகிறாயா? சொல்லேன்" என்று கெஞ்சினார்.

"என்னை விடு!" என்று அவள் கம்பீரமாக மொழிந்தாள். ராஜா மோசமான லோலாயிப் பயல்தான்! இருந்தாலும் அதைக் கேட்டதும் அவளைத் தம் பிடியிலிருந்து விட்டு விட்டார்.

"சரி. நீயும் என் அம்மாவும் சேர்ந்து சூழ்ச்சி செய்திருக் கிறீர்கள்; நீ எனக்குத் தமையன், அது இது என்றெல்லாம் பொய்க் கதை கட்டினது வாஸ்தவந்தானே? புளுகாமல் சொல்" என்று கேட்டாள் சம்பகம்.

அவளுடைய கம்பீரத்தையும் அப்பழுக்கில்லாத குணத் தையும் கண்டு தலைபிரங்கிப் போய், "வாஸ்தவந்தான்" என்றார் ராஜா.

"அம்மாவுக்கு எவ்வளவு கொடுத்தாய்?"

"மொத்தம் 14,000 ரூபாய்."

"சீச்சீ! கேவலம் அற்பக் காசுக்காகப் பெண்ணின் மானத்தையும் சுகத்தையும் விற்ருளே! அம்மாவாம் இவள்! ராஜா என்று பிரமாதமாகப் பெயர்வைத்துக்கொண்டு நடித்து இந்தச் சூழ்ச்சியில் கலக்கிருனே; பெரிய மனுஷ்யன் மாதிரி நடித்து அநாதரவாக இருக்கிற பெண்களைக் கெடுத்துத் தன் கௌரவத்தையும் பாழாக்கிக் கொள்கிருனே; இவனை என்ன என்று சொல்வேன்!" என்ருள் சம்பகம்.

"கண்ணே! கோபித்துக் கொள்ளாதே! என் பேரில் தப்புத்தான்; நான் ஒப்புக்கொள்கிறேன். அதற்காக வருத்தப் பட்டு மன்னிப்புக் கூடத்தான் கேட்டுக் கொண்டேனே! இதற்கு ஏற்ற பரிகாரமும் செய்யத் தயார். கல்யாணம் பண்ணிக் கொள்ளாவிட்டாலும் என் மாளிகைக்கு அழைத்துப் போய் வாழ்நாள் முழுதும் உன்னை அங்கே வைத்துக் கொண் டிருப்பேன். உன் பிள்ளை குட்டிகளையும் பராமரிப்பேன், என் மற்றக் குழந்தைகளைப்போல்" என்ருர் ராஜா.

"போதும், நிறுத்து" என்று கோபம் பொங்கச் சீறினுள் சம்பகம். "பண்ணின அக்கிரமம் போதாது என்று என்னை அவமானப் படுத்தவுமா பார்க்கிருய்! நான் ஏழையாக இருக்கலாம், தேவடியாளுக்குப் பிறந்தவளாகவும் இருக்க லாம், காப்பாற்ற அப்பனே அண்ணனே இராமல். ஆனுல், நம் பெரியவர்கள் சொல்கிறபடி, என்னிடத்தில் கூட அந்த அனந்தவியாபியின் அம்சம் துளி இருக்கத்தான் இருக்கிறது. நீ என்னைப் பண்ணின மாதிரி உன் தங்கையை ஒருத்தன் கெடுத்து விடுகிருன் என்று வைத்துக்கொள்; என்ன செய்வாய்?" என்று கேட்டாள் சம்பகம்.

"அந்த இடத்திலேயே அவனைக் கொன்றுவிடுவேன். க்ஷத்திரியனுக்குரிய கடமை அது" என்ருர் ராஜா.

"அப்படியானுல் தனக்குமட்டும் வேறு நியாயமோ?" என்று கேட்டாள் சம்பகம்.

"நீ க்ஷத்திரியப் பெண் அல்லவே! என்னதான் நல்ல குணம் இருந்தாலும் நீ தேவடியாள் பெண்தானே?" என்ருர் ராஜா.

"நீ என்னைக் கற்பழிப்பதற்கு முன்னுல் நானும் உங்கள் க்ஷத்திரியப் பெண்ணைப் போலவே பரிசுத்தமாகத்தான் இருந்தேன். தெரியுமா?" என்று நேராக அவர் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"வாஸ்தவந்தான்" என்ருர் ராஜா.

"அப்படியானால் க்ஷத்திரியனுக்குரிய கடமையைச் செய். மற்றவர்களை நீ தண்டிப்பதுபோல் உன்னையும் தண்டித் துக்கொள். 'நான் சூரியவம்சத்தில் பிறந்தவன்; தனக்கு ஒரு நியாயம் பிறத்தியாருக்கு ஒரு நியாயம் என்று பாராமல் என் மூதாதைகள் செங்கோல் செலுத்தினார்கள்' என்று பெருமை அடித்துக்கொள்கிறாயே! உன் விஷயத்தில் மட்டும் அந்த நீதியை ஏன் செலுத்தாமல் பேடி மாதிரி சும்மா இருக்கிறாய்? ஏன், உயிர் என்றால் வெல்லமாய் இருக்கிறதா உனக்கு?" என்றாள்.

ராஜா ஆவேசம் வந்தவர்போல், "சரி; இந்தா என் கைத்துப்பாக்கி! ஏழு ரவை போட்டுத் தயாராய் வைத்திருக் கிறது. என்னைச் சுட்டுக் கொன்றுவிடு, உன் கையால்" என்றார்.

"ஊஹூம், முடியாது. நீங்களே சுட்டுக்கொள்ளுங்கள். சாதாரண மனுஷ்யர்கள் ராஜாவைத் தண்டிப்பது நியாய மல்ல" என்றாள் சம்பகம்.

"அப்படி உயிரை வைத்துக்கொண்டிருக்க நான் பேடியல்ல. இதோ பார்" என்று சொல்லிக்கொண்டே சட்டென உணர்ச்சி மேலிட ராஜா தம்மைத் தாமே சுட்டுக் கொண்டு இறந்துபோனார்.

"தீர புருஷர்தான்! வளர்ப்பு மட்டும் சரியானபடி இருந் திருந்தால் உலகத்துக்கே இவரால் நன்மை ஏற்பட்டிருக்கும். தாம் பண்ணின பாபத்திற்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொண்டுவிட்டார். நானும் இவரோடு போகவேண்டி யதுதான், அண்டை அயலார் வருவதற்குள். இனியும் இந்தப் பாழும் உடலை வைத்துக்கொண்டிருப்பானேன்?" என்று சொல்லிக்கொண்டே சம்பகம் கைத்துப்பாக்கிக் குழாயை வாய்க்குள் செலுத்தி அதன் குதிரையை அழுத்தினாள். வெடிச் சத்தம் பிரமாதமாகக் கேட்டது; தரையில் பிணமாய் விழுந்தாள் சம்பகம்.

இரண்டு தடவை வெடிச் சத்தம் கேட்கவே அக்கம் பக்கத்து வீட்டார் இவர்கள் வீட்டுக்கு ஓடிவந்து கதவை இடித்தார்கள். கனகவல்லி குடி மயக்கத்தோடு உறங்கிக் கொண்டே எழுந்துவந்து கதவைத் திறந்தாள்.

அவர்கள், "ஏதோ குண்டுச் சத்தம் கேட்டதே?" என்று கேட்டார்கள் அவளை.

தனக்கு ஒன்றுமே கேட்கவில்லையே என்றாள் அவள். உள்ளம் நடுங்கச் சம்பகத்தின் அறைக் கதவைத் திறந்தவள் இரண்டு பிணங்களையும் பார்த்ததும் வீறிட்டு அலறிக்கொண்டு பின்னடைந்தாள். சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டது அவளுக்கு. போலீஸ் வந்து பிரேத விசாரணை நடந்தது; சாக்ஷியமும் பதிவு செய்யப்பட்டது; 'புத்தி பேதித்து இருக்கும் போது நிகழ்ந்த தற்கொலை' என்ற முடிவுக்கு வந்தார் பிரேத விசாரணை அதிகாரி. ஒரு வாரம்வரை இந்தச் செய்தி தினசரிப் பத்திரிகைகளில் அடிபட்டது. அப்புறம் யாரும் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இது நடந்து மூன்று மாதம் வரை பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உன்மத்தம் பிடித்து ஒருத்தி அலறிக்கொண்டே இருந்தாள். அவள் பைத்தியத்தைத் தீர்க்க எந்த மருந்தும் பிரயோஜனப்படவில்லை. கடைசியாக ஒரு நாள் இரவு மழையிருட்டில் அவள் உயிர் அப்பாழும் சடலத்தை விட்டு நீங்கியது. அவள்தான் கனகவல்லி!

ஒற்றை மரம்

பருத்தி விளையும் பிரதேசமான ராயலசீமையில் மிட்டா மிடப்பள்ளி என்று ஒரு கிராமம். அதில் இருநூறு வீடுகள்; பெரும்பாலும் ரெட்டிகள்; வியவசாயிகள். எப்போதும் போல் மந்தமாக ஊர்ந்துசெல்லும் கிராமவாழ்க்கை. வருஷத்துக்கு ஒரு தரமாவது கொலை நடக்கும் அங்கே.

இந்தமாதிரி இடங்களில் அது ஸர்வஸாதாரணந்தான். ஆனாலும், ஏன் அப்படி என்றுதான் எவருக்கும் சரியாகப் புரியவில்லை. கவிகள், "கன்னங்கறேலென்று இருக்கும் இந்தப் பூமியின் வாசிக்கு ஏற்றாற்போல் வெள்ளை வெளேறென்றுதானே பயிர் விளைகிறது? அதைப் போலவே இந்தப் பருத்தியின் வெண்மைக்கு ரத்தத்தின் சிவப்பு வேண்டியிருக்கிறது" என்று சாதுர்யமாகக் கூறலாம்.

பொருளாதார நிபுணர்கள், "இந்தப் பயிரே இப்படித்தான். ஒரு வருஷம் ஏராளமாகக் கைக்கு வரும்; பணமும் குவியும். மறு வருஷம் மழை பெய்யாது; கறுப்பு வந்துவிடும். எங்கிருந்து இந்த ஜனங்களுக்கு நாகரிகம் ஏற்படும்? நெற்பயிர்போல் இருந்தாலாவது வருஷத்துக்குச் சராசரி இவ்வளவென்று வருமானம் கிடைக்கும்; நாகரிகமாக வாழலாம். அப்படி இராததால்தான் அதிக வருமானம் கிட்டுகிற வருஷங்

களில் குடித்தோ, சண்டை போட்டோ, கொலை பண்ணியோ பணத்தைக் கரைக்கிறார்கள்" எனலாம்.

வான சாஸ்திரிகள், "உஷ்ணப் பிரதேசம் அல்லவா? ரத்தம் கொதித்துப் போகிறது; அதோடு பேய்க்காற்று ஸதா ஊளையிடுகிறது. இரண்டும் சேர்ந்துவிட்டால் கேட்பானேன்? கொலை பண்ண வேண்டுமென்றுதான் தோன்றும்" என்று சொல்லலாம்.

சமூக ஆராய்ச்சியாளரோ, "அவ்வளவாக எழுத்து வாசனை அறியாமல், கொஞ்சத்தை வைத்துக்கொண்டு காலந் தள்ளும் பூர்விக ஜனங்கள் அல்லவா? பழைய வழக்கப்படி கொலை பண்ணுவது சகஜந்தானே? கோர்ட்டுக்குப் போவது, ஜாதிபலி போடுவது – இந்த நாசூக்கு வழியெல்லாம் அவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கூறலாம். இதெல்லாம் எவ்வளவு தூரத்துக்கு நிஜமோ நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: இந்தப் பிரதேசத்திலுள்ள மற்றக் கிராமங்களைப் போலவே இவ்வூரிலும் வருஷந்தோறும் கொலைகள் என்னவோ நடந்துதான் வருகின்றன. ஜனங்கள் சாதாரணமாகவே இருக்கிறார்கள்; எல்லோருடனும் கலந்துதான் பழகுகிறார்கள். விருந்தாளிகளை உபசரிக்கிறார்கள்; ராஜ விசுவாசமும் உண்டு.

ஆனால் கொலைபாதக எண்ணமும் கூடவே இருக்கும். மற்ற இடங்களிலுள்ள ஜனங்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் இதுதான். அவர்கள் மூளையில் அப்படிப்பட்ட எண்ணம் எங்காவது ஒரு மூலையில் பத்திரமாகப் பதுங்கியிருக்கும்; தங்களை அறிந்தும் அறியாமலும் மனசில் எங்கோ ஆழத்தில் புதைந்து கிடக்கும். இவர்களுக்கோ வெளிப்படையாகவே உண்டு, அந்தச் சுபாவம். எந்த ஸமயத்தில் வெறி மூளும் என்று சொல்லமுடியாது.

மிட்டாமிடப்பள்ளிக்குத் தெற்கே ஒரு மைல் தொலைவில் கன்னங்கறேலென்று பரந்திருக்கும் வயல்களுக்கு நடுவே, தன்னந்தனியாகக் கம்பீரமாய்த் தலைதூக்கி நின்றது ஒரு வேப்பமரம்; சுற்றிலும் அரை மைலுக்கு வேறு ஒரு மரமும் இல்லை. வெகு நாளைய மரம் அது. அதில் ஒரு பேய் வாசம் செய்கிறதென்றும், அதன்கீழ் யாரேனும் வந்து தங்கினால் அப்பேய் வந்து அவர்கள் மனசைச் சாமர்த்தியமாகக் கலைத்துக் கொலைபண்ணத் தூண்டும் என்றும், அதனடியிலேயே இதுவரை ஆறு கொலை நடந்திருக்கின்றனவென்றும் ஊர் வதந்தி. நாலு அடி பருமனுக்கு இருந்தது அந்த மரம். கனங்கனமாகக் கிளைகள் வேறு விட்டிருந்தன. மரம் எப்போதும் பச்சுப்

பச்சென்று செழித்திருக்கும். வழக்கமாக நாம் பார்க்கும் வேப்ப இலையைப்போல் இராமல் அதன் இலையின் பசுமை புதுத் தினுசாகவே இருந்தது. அதனடியில் கொலையுண்டவர்கள் ரத்தமே அப்படி அதற்கு ஊட்டங்கொடுக்கிறது என்று ஊரார் பேசிக்கொண்டனர். கிராமப் பாட்டையோரம் இருந்தது, அந்த மரம்; சுற்றிலும் கொஞ்சம் தொலைவுக்கு நிழல் என்கிற பேச்சே இல்லை. ஆனாலும் பதை பதைக்கிற வெயிலாய் இருந்தால்கூட ஊரார் எவரும் அதன்கீழ்த் தங்குவதில்லை. 'ஒற்றை மரம்' என்று அதை அழைத்தனர். மத்தியான்ன வேளையிலும் அஸ்தமனமான பிற்பாடும் அந்தப் பக்கம் போகக்கூட அஞ்சுவார்கள். அப்போது அந்தப் பேய் அங்கே உலாவுமாம்! அந்த அவவேளையில் இலைகள் காற்றில் அசைந்தால்கூட, வாஸ்தவமாகவே உடம்பு சிலிர்க்குமாம். எப்பேர்ப்பட்ட நெஞ்சுறுதிக்காரனாய் இருந்தாலும் நடுங்கித்தான் போவானாம்.

இலைகளின் சலசலப்பு, சிலவேளை, யாரையோ பேய் கொல்லத் தூண்டுவதுபோல் இருக்கும். சில சமயம் அது, பேய் 'காவு' வாங்கிய ஆறு பேரும் அலறுவது போலவும் தொனிக்கும். இப்படி இருந்தால் யார்தான் அதை அண்டுவார்கள்? அதன் இரண்டு பக்கங்களிலுள்ள வயல்களும் அப்படியே தரிசாகக் கிடக்கின்றன என்றால் அது ஓர் ஆச்சரியம் அல்ல. அவ்வளவு ஸமீபத்தில் போகக்கூட எவருக்கும் துணிவு இல்லையே!

செங்கா ரெட்டி என்பவன் அந்த ஊர் வாசி. நல்ல தேகக்கட்டு வாய்ந்த இளைஞன்; கண்ணுக்கு நன்றாக இருப்பான். வயசு இருபத்து நான்கு ஆகிறது. ஒன்றி ஆள்; தானே குடித்தனத்தை நடத்திவந்தான். ஒரு காலத்தில் அது பணக்காரக் குடும்பந்தான். ஆனால் இப்போது துர்த்தசை வந்துவிட்டது. தொடர்ந்து சில வருஷங்களாகப் பயிர் சாவியாகிக் கொண்டே வந்தது. செங்கா ரெட்டிக்கு ஓபி ரெட்டி என்று ஒரு தாயாதி. அவன் கெட்டிக்கார ஆசாமி; தந்திரசாலி; வயசு முப்பது இருக்கும். அவனோடு ஸிவில், கிரிமினல் வியாஜ்யம் ஆடிஆடிச் செங்கா ரெட்டியின் சொத்தெல்லாம் கரைந்து போய்விட்டது. ஊரிலுள்ள வட்டி வியாபாரியான முத்யாலுவிடமிருந்து நூற்றுக்கு ஒன்றரை அல்லது இரண்டு வட்டிவீதம் பெருந்தொகை கடன் வாங்குவதைத் தவிர வேறு வழி இல்லை.

முத்யாலு ரெட்டிபாடு கொண்டாட்டந்தான்; தாராளமாகக் கடன் கொடுத்தான். பின்னால் நிலத்தை அப்படியே

மடக்கிவிடலாம் என்பது அவன் எண்ணம். இப்படி எளிதில் கடன்தொகையும் கிடைத்து, வட்டியும் ஏறினல் குடித்தனம் எப்படி உருப்படும்? தரித்திரம் பிடித்துவிட்டது. கடைசியாக, முத்யாலுவுக்குச் சேரவேண்டிய பாக்கிக்காக, அவன் நிலங்களும் பெரிய மச்சுவீடும் கோர்ட்டில் ஏலம் போயின. அப்படியும் 500 ரூபாய்க்கு டிக்ரி ஒன்று பாக்கி நின்றது. கோர்ட்டு ஏலத்தில் அவ்வளவு நயமாக நிலங்களை எடுத்துவிட்டான் அல்லவா?

மீதி ரூ. 500 உடனே வருவதென்றாலும் ஸாத்யமில்லை. ஆகவே, சற்றுத் தாராளமாக இருப்பதுபோல் காட்டிப் பின்னல் அந்தத் தொகையை வசூலித்துவிடலாம் என்று இருந்தான் முத்யாலு.

செங்காரெட்டி ஒரு குடிசையில் இருந்துவந்தான். அது ஐம்பது ரூபாய் பொறும்; ஒரு ஜதை உழவுமாடும், அவன் தகப்பனர் சொந்த உபயோகத்துக்காக வைத்திருந்த அழகான வண்டியும், ஜோரான ஒரு ஜோடி வண்டிக்காளையும் மட்டுமே இருந்தன.

முத்யாலுவும் இருக்கட்டும் என்று சும்மா விட்டிருந்தான். இந்தப் புது எஜமானனிடமிருந்து தன் பழைய நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டு வந்தான் செங்காரெட்டி.

மற்ற ஏழைக் குடியானவர்களைப்போல் தானும் பாதி வாரத்துக்கு ஒப்புக்கொண்டான்.

முத்யாலு பேராசைக்காரன்; கொஞ்சங்கூடச் சலுகை காட்டவில்லை. ஒரு வாய் சோறு கிட்டினற்போதும் போல் இருந்தது செங்காரெட்டியின் நிலைமை!

சொத்தையெல்லாம் இழந்தும் ஓபி ரெட்டிமேல் அவனுக்கு இருந்த வைரம்மட்டும் தீர்ந்தபாடில்லை. ஓபிரெட்டியோ நாளுக்குநாள் உயர்ந்து வந்தான். ஸிவில் வழக்குகள் எல்லாவற்றிலும் அவனுக்குத்தான் ஜயம். ஏற்கனவே நல்ல பணக்காரன்; கையிலே எப்போதும் ரொக்கம் நடமாடும். அதிர்ஷ்டம் வேறு இருந்தது அவன் பக்கம். அதோடு தாய்வழிப் பாட்டன் வாரிசு இல்லாமல் இறந்து போய்விட்டான்; எத்தனையோ ஏக்கர் நிலமும் ரூ. 20,000-க்கு ரொக்கமும் வந்து சேர்ந்தன.

செங்கா ரெட்டி நல்ல ஸ்திதியில் இருந்தபோது **பிச்சம்மா** என்னும் பெண்மேல் ஆசை வைத்திருந்தான். அந்த ஊருக்குள்ளே அவள்தான் அழகி. வயசு பதினன்கு இருக்கும்.

இந்த விஷயத்திலும் அவனுக்குப் போட்டியாக வந்து சேர்ந்தான் ஓபிரெட்டி. பிச்சம்மாவின் தகப்பனுன கங்கி ரெட்டியும் சொத்துக்காரன்தான். பயிர்த்தொழில் ஜீவனம். நாலு பேர் அறிய இரண்டு பேரும் அவளைக் காதலித்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஊர் வழக்கப்படி அடிக்கடி பழமோ, புஷ்பமோ அவள் வீட்டுக்கு அனுப்புவார்கள். வண்டி கொடுத்து உதவுவார்கள். பிரதிதினமும் அங்கே போய் வராந்தாவில் அமர்ந்து தகப்பனுரோடாவது, பிள்ளைகளோடாவது பல விஷயங்களைப்பற்றி வம்பளந்து கொண்டிருப்பார்கள். பிச்சம்மா அவ்வழியாக வரும்போதும், தன் தாயாரோடு வாயிற்படியண்டை வந்து எட்டிப் பார்த்து அவர்கள் பேசுவதைக் கேட்கும்போதும் அவர்கள் கண்ணில் படுவாள். அவ்வளவு பெரிய பெண்ணோடு பேசினுல் நன்ருய் இருக்குமா? அதனுல், சும்மா பார்ப்பதோடு திருப்தி அடைவார்கள். அவர்கள் கொடுத்தனுப்பிய வஸ்து அவளுக்குப் பிடித்திருந்தால் எப்போதாவது ஒரு சமயம் அவர்களைப் புன்சிரிப்பாகப் பார்த்துக்கொண்டு போவாள்; அதற்குமேல் என்ன வேண்டும்? பிச்சம்மாவைக் 'கட்டிக்கொள்ள' வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அவர்கள் இப்படி அடிக்கடி அங்கே வந்து போகிருர்கள் என்று ஊராருக்கும் தெரியும். இவர்கள் தகப்பன்மாரோ உயிரோடில்லை; குடும்பத்தில் பெரியவர்கள் என்று சொல்ல யாருமே இல்லை. ஆகவே, தாங்களே வந்து உறவு கொண்டாடினுர்கள். பெரியவர்கள் இருந்திருந்தால் ஒருவிதமாக முடித்திருப்பார்கள். ஆனுல் இதில் உள்ள இன்பம் ஏது அதில்? ஸந்தேகாஸ்பதமான வழக்காய் இருந்தால் வாதி பிரதிவாதி இருவரும் நாளைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வரப் பார்ப்பார்கள். காரணம் இதுதான்: ஜயம் ஏற்பட்டால் நீடித்திருக்கும்; தோற்று விட்டோமானுல் என்ன செய்வது என்ற திகில் வேறே! — அதுபோலவே, இவர்களும் கங்கி ரெட்டிக்குத் தொந்தரவு கொடுக்காமல் நாள் போக்கி வந்தனர். முதலில் கங்கி ரெட்டியும் அவன் புதல்வர்களும் யாருக்குக் கொடுக்கலாம் என்று தயங்கினுர்கள்; செங்கா ரெட்டிக்கு சற்று இடங்கொடுத்தும் வந்தார்கள். பிச்சம்மாவும் அவள் தாயார் கொண்டம்மாவுங் கூட இப்படித்தான் திண்டாடினுர்கள். செங்கா ரெட்டி கள்ளங்கவடு இல்லாமல் நன்ருக இருந்தான். அதோடு, அவனுக்கு வண்டியும் மாடும் அழகாக அமைந்து இருக்கவே அவனைப் பிடித்திருந்தது இருவருக்கும். அந்த வண்டியில் எத்தனை தரம் ஜோராகச் சவாரி போயிருக்கிருர்கள்! அந்த வண்டி, மாடு இரண்டின் பேரிலும் செங்கா ரெட்டிக்கு எவ்வளவு ஆசையோ அவ்வளவு

ஆசை அவர்களுக்கும்! ஆனல், ஓபி ரெட்டிக்கு இருக்கும் ஐசுவரியத்தையும் வியவகார புத்தியையும் சாமர்த்தியத்தையும் பார்த்து, அவன் மேலும் ஒரு கண்தான். செங்கா ரெட்டியைப்போல் அவனுக்கு அப்படி அழகான எருதுகள் இல்லாவிட்டாலும், பசுமாடுகளும் எருதுகளும் எருமைகளும் ஏராளமாக உண்டு. கோர்ட்டு வியவகாரங்களிலும் இன்னும் பல விஷயங்களிலும் கைதேர்ந்தவன் என்று பெயரெடுத்திருந்தான். பிச்சம்மாவுக்குப் பழங்களாய்க் கொண்டு குவிப்பான். ஆப்பிள் என்ன, பியர் என்ன, வாழைப்பழம் என்ன, ஸபோடா என்ன, மாதுளம்பழம் என்ன, திராக்ஷை என்ன, ஒட்டு மாங்கனி என்ன எல்லாம் சென்னையிலிருந்து வரவழைத்துக் கொடுப்பான். பிச்சம்மா ஆரோக்கியமாக வளர்ந்த பெண் அல்லவா? ஆசைதீரப் பழங்களை வாங்கிச் சாப்பிடுவாள். செங்காரெட்டி வண்டியில் சவாரி போவதாயிருந்தாலும் அவளுக்குத் திருப்திதான். ஆகவே, செங்கா ரெட்டி திவாலாவதற்குமுன் இரண்டு பேர்மேலும் சரிசமமாக ஆசை வைத்திருந்தாள். அந்த நாளில் எப்போதாவது அவள் தகப்பன், "உனக்கு எவனைப் பிடித்திருக்கிறது?" என்று கேட்டால், "நீ யாரைப் பண்ணிக்கொள்ளச் சொன்னலும் சம்மதந்தான்" என்று பெண் பதில் அளித்துவந்தாள்.

"அதெல்லாம் இல்லை. உனக்கு யார்மேல் ஆசை, சொல்லேன்" என்றான் கங்கிரெட்டி.

"நான் எப்படிச் சொல்வது? நாயனு! இரண்டுபேரிடத்திலும் சில விசேஷ குணங்கள் இருக்கின்றன" என்றாள் பெண்.

கங்கி ரெட்டி கொண்டம்மாவைப் பார்த்தும் அதே கேள்வி கேட்டான்.

அவள், "எனக்குந்தான் அது தெரியவில்லை. அந்த வண்டியிலே சவாரி பண்ணும்போது செங்காரெட்டியைத்தான் பிடித்திருக்கிறது. ஆனல், அந்தப் பழங்களை ருசி பார்க்கும்போது மறுபடியும் சந்தேகம் வந்துவிடுகிறது; ஓபிரெட்டி மேல்தான் மனசு போகிறது. ஆனல் கள்ளங் கவடு ஒன்றும் இல்லாமல் செங்காரெட்டி பேசும்போது அவனையே பிடித்திருக்கிறது. ஆனலும் ஓபி ரெட்டியின் புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் கவனித்தால் அவனே மேல் என்று பட்டுவிடுகிறது ... உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? சொல்லுங்களேன்" என்று கேட்டாள்.

"எனக்கும் இந்த விஷயத்தில் உங்களைப்போலவே தர்ம

சங்கடமாகத்தான் இருக்கிறது! இப்போது என்ன பண்ணுவது, சொல்?" என்முன் கங்கி ரெட்டி.

கொண்டம்மா, "இப்போதைக்கு ஒன்றும் செய்ய வேண்டாம். சற்றுப் பொறுக்கலாம். பின்னுலே எப்படி எப்படி நேருமோ; அதையெல்லாம் பார்த்துக்கொண்டு நிச்சயம் பண்ணலாம். இப்போது என்ன அவசரம்? இவளுக்குப் பதினுலு வயசுதானே ஆகிறது! அவர்களுக்கும் அப்படி ஒன்றும் அதிக வயசு ஆகிவிடவில்லை. வண்டியும், பழமும் கிடைக்கிறவரையில் நமக்கு லாபந்தானே?" என்முள்.

"ஸபாஷ்!" என்று கங்கி ரெட்டியும் அதற்கு உடன் பட்டான்.

ஆகவே, அவ்விருவரும் போட்டி போட்டுக்கொண்டு பெண்ணைக் காதலித்து வந்தார்கள். ஏற்கனவே கோர்ட்டு வியாஜ்யத்தால் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு இதனுல் பின்னும் அதிகரித்தது.

ஆனுல் செங்கா ரெட்டியின் சொத்தெல்லாம் முழுகிப் போனதும் கங்கி ரெட்டி குடும்பத்தாரே ஒரே யடியாக மாறி விட்டனர். செங்கா ரெட்டி வந்தானுனுல் அவ்வளவாகச் சட்டை செய்வதில்லை அவனை. பிச்சம்மாகூட மாறிவிட்டாள் என்றுதான் அவனுக்குப் பட்டது. அவள் முன்போல் அடிக்கடி அவன் வண்டிக்குச் சொல்லி யனுப்புவதில்லை. அப்படி எப்போதாவது அதில் ஏறிக்கொண்டு போனுலும் முன்போல் திருப்தி அடைந்ததாகக் காட்டிக்கொள்வதில்லை. அதற்கு மாருக, சற்றுக் கூச்சத்துடன் பரிதாபப்படுவதுபோல் நோக்குவாள். அவர்கள் நெட்டிப் பிடித்துத் தள்ளுவதற்கு முன் தானே மரியாதையாக விலகிவிடுவதே உத்தமம் என்று பட்டது செங்கா ரெட்டிக்கு. ஆனுலும், மூன்று விஷயம் அதற்குத் தடங்கலாக நின்றன. பிச்சம்மாபேரில் அவனுக்கு இருந்த ஆருக்காதல் ஒரு காரணம்; 'அவர்கள் ஒன்றும் சொல்லாத வரையில் அவள் அருகிலேயாவது இருக்கலாமே' என்று எண்ணினுன்.

'நமக்கு ஜன்ம சத்ருவாய் இருப்பவனுக்கு இடங் கொடுப்பதா?' என்ற முரட்டுப் பிடிவாதமும் இரண்டாம் காரணம். மூன்ருவதாக, ஒருவேளை அதிர்ஷ்டம் மறுப்டியும் தன் பக்கம் திரும்பி, தான் பழையபடி பணக்காரனுகிவிடலாம் என்று ஒரு குருட்டு ஆசை. ஆனுல் கங்கிரெட்டி வீட்டில் ஒபி ரெட்டி வரவர அதிகமாய்க் கொம்மாளம் அடிப்பதையும்,

தன்னை அருவருப்போடு கவனிப்பதையும் பார்க்க அவனுக்குச் சகிக்க முடியவில்லை. ஆனவரைக்கும் தன்னைச் சமாளித்துக் கொள்ளத்தான் பார்த்தான். கங்கி ரெட்டியின் வீட்டுக்குப் போவதை நிறுத்தவில்லை; எப்போதாவது 'அவள்' கண்ணில் படமாட்டாளா என்றுதான். ஆனால் அவன் அதோகதி ஆக ஆக அதுகூட அரிதாகிவிட்டது. முன்னே பிரதிதினமும் அங்கே போய்க்கொண் டிருந்தவன் இப்போதெல்லாம் அப்படிப் போவதில்லை; இரண்டு வாரத்துக்கு ஒருதரந்தான் செல்வான்.

செங்கா ரெட்டி இப்படித் திண்டாடத் திண்டாட ஓபிரெட்டி பாடு கொண்டாட்டமாய் இருந்தது. இரண்டு பேரையும் பிச்சம்மாவும் அவள் வீட்டாரும் சமமாகப் பாவித்து வந்த வரை, ஓபி ரெட்டியும் தன் இகலாள் அங்கு வருவதைப்பற்றியோ அவனுடைய விஷயங்களைக் குறித்தோ வார்த்தையே எடுக்காமல் சாமர்த்தியமாகவும் உஷாராகவும் நடந்துகொண்டான். தன் வழக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றும் செங்கா ரெட்டிக்கு வரவரக் கடன் ஏறிக் கொண்டே வருகிறதென்றும் எப்போதாவது இரண்டொரு தடவை மட்டுமே கங்கிரெட்டியோடு பேசிக்கொண்டிருப்பான். செங்கா ரெட்டி சொத்தையெல்லாம் தோற்றதும், பிச்சம்மா வீட்டார் அவனை அலக்ஷியம் செய்யவே இவனுக்குத் துணிவு பிறந்துவிட்டது. கங்கி ரெட்டியிடம் செங்கா ரெட்டியைப் பற்றிக் கன்னுபின்னு என்று பேச ஆரம்பித்துவிட்டான். செங்கா ரெட்டி இப்படிக் கடனைக்கூடத் திருப்பிக் கொடுக்க முடியாமல் திண்டாடுவதைப்பற்றி ஒருநாள் சொல்லிக்கொண் டிருக்கும்போது கங்கிரெட்டி பேச்சு வாக்கில், "பாவம், திவாலாகத்தான் போய்விட்டானே! இன்னுமா நம் பிச்சம்மாவைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று ஆசை! நிற்க நிழல்தான் உண்டா! மூன்று வேளையும் சோறுபோட்டு அவளை வைத்துக் கொண்டு படைக்கத்தான் இவனால் முடியுமா!" என்றான்.

ஓபி ரெட்டி விஷயத்தை ஊகித்துக்கொண்டான். மறுமுறை செங்கா ரெட்டி அங்கே வந்திருந்தபோது, ஓபி ரெட்டி, கங்கி ரெட்டியோடு, "எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டுத்தான் என்ன பலன்? கங்கி ரெட்டி! தாம் திவாலாய்ப் போயும் சொத்து இருக்கிற கௌரவமான குடும்பத்தில் பெண் கட்டிக்கொள்வோம் என்று பார்க்கிறார்களே மடையர்கள்! இவர்களை என்ன என்று சொல்வது? தங்கள் வயிற்றைக் கழுவிக்கொள்ளக்கூடக் கஞ்சி இல்லை; இவர்கள் பெண் சாதியை வைத்துக்கொண்டு வேறு காப்பாற்றப் போகிறார்

களாம்! நிற்க நிழல்தான் இருக்கிறதா! மூன்றுவேளை சாப்பாடு போடத்தான் இவர்களுக்கு யோக்கியதை உண்டா? வேண்டாத வீட்டுக்கு அடிக்கடி வந்துகொண்டிருப்பானேன்! அங்கே வந்து பொழுதை வீணுக்குவானேன்! அந்த வேளையிலே குத்தகை நிலத்தை நன்றாக உழுது பயிரிட்டு இரண்டு நெல்லு ஸம்பாதித்தாலாவது பிரயோஜனம் உண்டே!" என்றான்.

செங்கா ரெட்டிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது; அதோடு, கங்கி ரெட்டியும் அதைக் கண்டிக்காமல் சும்மா இருக்கவே அவமானம் வேறு தலை தூக்க முடியவில்லை. ஆனாலும் அதை அடக்கிக்கொண்டு, குரல் நடுங்க, கங்கி ரெட்டியைப் பார்த்து, "கேட்டீர்களா, ஐயா, இவன் பேச்சை! இது நியாயமா? நீரே சொல்லும்" என்றான்.

கங்கி ரெட்டி பதில் பேசாமல் சும்மா இருந்தான். செங்கா ரெட்டி மீண்டும், "சொல்லுமே ஐயா, இது அக்கிரமமா இல்லையா?" என்று கேட்டான்.

"நல்லது. நான் சொல்வதைக் கேள்: செங்கா ரெட்டி, எனக்கென்னவோ உன்னைக் கண்டால் பிடித்துத்தான் இருக்கிறது; நீ எங்கள் வீட்டுக்கு எப்போது வந்தாலும் ஸந்தோஷந்தான். ஆனால் நீ இப்போது இருக்கும் நிலையில், உனக்குப் பிச்சம்மாவைக் கட்டிக் கொடுப்போம் என்றுமட்டும் எதிர்பார்க்கவேண்டாம்; அது ஸாத்தியமே இல்லை. இங்கே அவள் ராஜபோகத்தில் வளர்ந்தவள். அவளைப் போய் ஓர் ஏழை இடத்தில் கொடுக்க எனக்கு ஸம்மதமில்லை. உனக்கே தெரியலாம். அந்தப் பாழுங்குடிசையில் அவளால் எப்படி இருக்கமுடியும்? அவள் இங்கே வேளை தவறாமல் நல்ல சாப்பாடு சாப்பிட்டு வழக்கம்; அப்படி வைத்துக்கொள்ளத்தான் உன்னால் முடியுமா?" என்றான் கங்கி ரெட்டி.

செங்கா ரெட்டி உதட்டைக் கடித்துக்கொண்டான்; வருத்தத்துடன், "நான் நினைத்தாற் போலத்தான் ஆயிற்று. உம்முடைய அபிப்பிராயத்தை எப்படியோ ஜாடைமாடையாகக் கண்டுகொண்டுதான் இவன் இவ்வளவு துணிச்சலாகப் பேசுகிறான்! தெரிகிறது; எல்லோரும் பணமோ பணமோ என்றுதான் அடித்துக் கொள்கிறார்கள்! ஏழையை யார் மதிக்கிறார்கள்? என் தலைவிதி அப்படி இருக்கிறதே; ஓபி ரெட்டியும் சேர்ந்து என்னை வஞ்சகமாகப் பாழ்பண்ணி விட்டான்; ஐயோ! உலகமே பணத்தாசை பிடித்துத்தான் திரிகிறது!" என்றான்.

"வாஸ்தவந்தான்; அதிசயம் என்ன இதில்? பணம் இருந்தால்தானே அழகு சோபிக்கும்; அழகாய் இருக்க

வேண்டுமென்றால் பணம் அவசியம். படிப்பு இருந்தால் இரண்டும் கைகூடும். சுமங்கலிகளுக்கு வேண்டியது என்ன? தனது என்று சொல்லிக்கொள்ள ஒரு நல்ல வீடும், ஏராளமான நகை நட்டுகளும், சாப்பாடுந்தானே, அப்பா? பணம் இராவிட்டால் இதெல்லாம் ஸாத்தியமோ?" என்றான் கங்கி ரெட்டி.

"ஆனால், நான் இங்கே வரக்கூடாது என்கிறீர்; அது தானே?" என்று கேட்டான் செங்கா ரெட்டி.

"நான் அப்படிச் சொல்லவில்லை. என் பெண்ணைக் கட்டிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விடு; அவ்வளவுதான் சொன்னேன்" என்றான் கங்கி ரெட்டி.

"அப்படி என்றால் நான் இங்கே வருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் அர்த்தம். நான் இங்கே வருவது பின்னே எதற்காக? பிச்சம்மாவைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்றுதான்" என்று சொல்லிக்கொண்டே வருத்தத் தோடு வீட்டை நோக்கிப் புறப்பட்டான் செங்கா ரெட்டி.

பின்னாலேயே தன் விரோதி இடிஇடியென்று நகைப்பது அவன் காதைத் துளைத்தது.

உள்ளே இருந்தபடி இதையெல்லாம் கேட்டுக்கொண் டிருந்த கொண்டம்மாவும் பிச்சம்மாவும் அவன் புறப்பட்டுப் போவதை வெளியே வந்து பார்த்தார்கள்.

"நல்ல வேளை! தொலைந்தான்; மடக்கழுதை! பிரதிதின மும் இங்கே வந்து வீணாகப் பொழுதைப் போக்கிக்கொண்டு இருந்தால் என்ன பிரயோஜனம்? இன்னும் ஓட்டாண்டியாக வேண்டியதுதான்" என்றான் ஓபி ரெட்டி.

"எல்லாம் அவன் நன்மைக்குத்தான் சொல்கிறோம். ஆனாலும், அவனைப் பார்த்தால் ஐயோ பாவம் என்றுதான் இருக்கிறது. உனக்கு என்ன படுகிறது?" என்று தன் மனைவியைப் பார்த்துக் கேட்டான் கங்கி ரெட்டி.

"எப்போதும் நம்மோடு சகஜமாகப் பழகுவான். அப் பழுக்கு இல்லாத பிள்ளை; நல்ல மனசுதான்; ஆனால் விதி குறுக்காக நிற்கிறதே! அவன் இப்போது இருக்கிற ஸ்திதியில் அவனுக்கு நம் பிச்சம்மாவைக் கொடுக்கிறது என்னவோ ஆகாத காரியம். பின்னாலேயும் முன்னுக்கு வருவான் என்று தோன்றவில்லை. நடந்தது நடந்தாயிற்று; எல்லாம் நன்மைக் குத்தான். ஆனால் அவன் இங்கே இனிமேல் வரமாட்டான்; அவன் வண்டியும் கிடைக்காது, எப்போதாவது பிச்சம்மா சவாரி போகலாமென்றால். நாமும் இனிமேல் அதற்குச்

சொல்லி அனுப்ப வேண்டாம். அவ்வளவுதான்; என்ன பண்ணுவது!" என்றாள் கொண்டம்மா.

ஓபி ரெட்டி, "கங்கிரெட்டி! இதற்கா வருத்தப்படுகிறாய்? நான் அந்த வண்டியை வாங்கிப் பிச்சம்மாவுக்குக் கொடுக்கிறேனா இல்லையா பார்" என்றான்.

"ஆனால் செங்கா ரெட்டி ரொம்பப் பிடிவாதக்காரனாயிற்றே! எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் உனக்கு விற்கவே மாட்டான் பார்" என்றான் கங்கி ரெட்டி.

"அப்படியா? நல்லது. இதோ உன் எதிரே சொன்னேன்: அந்த வண்டியையும் மாட்டையும் எப்படியாவது வாங்கிப் பிச்சம்மாவுக்குக் கொடுத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன். அதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம், மருமகனாக வரப்போகிறவன் எப்பேர்ப்பட்ட ஆசாமி யென்று!" என்றான் ஓபி ரெட்டி.

"ஓபி ரெட்டி! தடைபண்ணுகிறேன் என்று எண்ணாதே. எனக்கென்னவோ நீ ஆத்திரப்பட்டு இப்படிச் சொல்லி விட்டாய் என்றுதான் படுகிறது. செங்கா ரெட்டிக்கு இருக்கிற பிடிவாதம் உனக்குத் தெரியாது; அவன் முரடன்; அவனை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, இன்னும். நீமட்டும் அவன் வண்டியையும் மாட்டையும் வாங்கிவிடு; நீ மகா சாமர்த்தியசாலி என்றுதான் சொல்வேன். அப்படி அவைகளை வாங்கி இங்கே கொண்டுவந்து விட்டாயானால் அன்றைக்கே முகூர்த்தம் நிச்சயம் பண்ணிவிடுகிறேன். இது ஸத்யம்" என்றான் கங்கா ரெட்டி.

"சரி" என்று ஓபி ரெட்டி குதூகலம் பொங்கக் கூவி, "இன்னும் ஒரு மாஸத்திற்குள்ளே முகூர்த்தம் வைத்துவிடலாம். போய் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டான்.

பிச்சம்மா கதவண்டை புன்சிரிப்போடு தன்னைப் பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது.

"அவன் சொன்னாற்போல் செய்யமுடியுமா?" என்று புருஷனைக் கேட்டாள் கொண்டம்மாள்.

கங்கி ரெட்டி, "அது என்னவோ எனக்குத் தெரியாது. என்னதான் யுக்தி பண்ணினாலும் செங்கா ரெட்டியிடமிருந்து அதை வாங்குவது சிரமந்தான். ஆனால் ஓபி ரெட்டியும் அதற்கெல்லாம் சரியானபடிதான் யோசனை பண்ணி வைத்திருப்பான். அது வாஸ்தவமானால், அவனுக்கு மிஞ்சினவனே

இல்லை. அவன் நம்மிடம் ஒன்றும் சொல்லவில்லை. போகப் போகத் தெரியும். சும்மா இருந்துகொண்டு கவனிக்கலாம்; நம்மால் ஆகக்கூடியது அவ்வளவுதான்" என்றான்.

இது நிற்க, செங்காரெட்டி முகம் தொங்கிப்போய் வீடு வந்துசேர்ந்தான். நார்க் கட்டிலின்மேல் தொப்பென்று சாய்ந்து குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழத்தொடங்கினன். 'என்ன மடையன் நான்! இந்தப் பாழும் வியாஜ்யத்தில் தலையிடுவானேன்! சொத்தையெல்லாம் தோற்பானேன்? இந்த இழவு பிடித்த வியாஜ்யத்துக்கு முன் இருந்தாற்போல் சற்றுப் பணம் படைத்திருந்தாலாவது பிச்சம்மாவைக் கட்டிக் கொள்ள நாமும் அவனோடு போட்டிபோட முடிந்திருக்கும். இனிமேல் கனவில்கூட எண்ண முடியாது. அப்படி நம் விதி ஒன்று நமக்குக் குறுக்கே நிற்கிறதே, இந்த இளவயசிலேயே; அதற்கு எதிராக நாம் என்ன செய்ய முடியும்? போனதை யெல்லாம்பற்றி வருந்தி என்ன லாபம்? ஆனாலும், ஓபி ரெட்டி செய்த சூழ்ச்சிகளையும், அவன் பொய்ச் சாக்ஷி தயார் பண்ணி வழக்குகளில் ஜயித்ததையும், நம்மைப்பற்றி இல்லாத தையும் பொல்லாததையும் பிரமாதமாக எடுத்துச் சொல்லி அவன் பிச்சம்மா வீட்டாரைக் கலைத்ததையும் எண்ணினால் அவனைக் கொல்லவேண்டும் என்றுதான் ஆத்திரம் வருகிறது. திருட்டுப் பையன், அவன் மட்டும் பிச்சம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு ஏன் சுகமாக வாழவேணும்? பிச்சம்மா வைப்போன்ற நல்ல பெண்ணுக்கு ஏற்ற புருஷனே அல்ல அவன். அவள்மேல் உள்ளூற ஆசையா இழவா? லோலாயிப் பயல்! அவள் குணம் தங்கமாயிற்றே! அதெல்லாம் அவனுக்கு ஏன் தெரியப்போகிறது? கல்யாணம் ஆகி ஒரு வருஷம் ஆகட்டும்; அவளுக்கு அவன்மேல் நிச்சயமாய் வெறுப்புத் தட்டி விடுகிறதா இல்லையா பார். அறியாத பெண்ணே இல்லையோ; இப்போது ஒன்றும் தெரியவில்லை; மேலோடு அவனைப் பார்த்துவிட்டு, 'நல்லவன்; தனக்கு ஏற்றவன்தான்' என்று எண்ணிக்கொண்டிருக்கிறாள். சர்க்கஸிலே புலி உடம் பைப் பார்த்தால், 'என்ன நன்றாயிருக்கிறது!' என்று ஆசை யாகத்தான் இருக்கும், அதன்மேல். ஆனால் காட்டிலே போய்ப் பார்க்கட்டும், அது யதேச்சையாகத் திரியும்போது; அப் போது வேறு விதமாகத்தான் படும். ஓபி ரெட்டியையே முன்பின் பார்த்திராதவர்களுக்கு அவன் கங்கி ரெட்டி வீட்டு வராந்தாவில் குந்திக்கொண்டிருக்கும்போது நல்லவனாகத்தான் தோன்றுவான். வெளியிலே போய்ப் பார்க்கட்டும், அவன் தினம் என்ன பண்ணுகிறானென்று? எவ்வளவு துன்மார்க்கன் அவன் என்பது அப்போது தெரியும்...என்ன இது! இப்படி

மடத்தனமாக ஏதேதோ எண்ணம் இட்டுக்கொண்டிருக்கிறேமே! சீ! நம்மை ஸமாளித்துக் கொள்ளவேண்டும். ஓபிரெட்டி குணமெல்லாம் நன்றாய்த் தெரிந்தும் கங்கிரெட்டி தானே இஷ்டத்தோடு பிச்சம்மாவை அவனுக்குக் கொடுத்து விட்டுப் போகிறான்; நமக்கு என்ன வந்தது! அந்த மிருகத்தைத்தான் கொல்லுவானேன்! அந்தப் பாவத்தைத்தான் கட்டிக்கொள்வானேன்?...செங்கா ரெட்டி, ஸமாளித்துக் கொள், ஸமாளித்துக்கொள்; அவ்வளவு தூரத்துக்குப் போகாதே" என்று தன்னுள்ளேயே சொல்லிக்கொண்டான்.

பிறகு கட்டிலை விட்டு எழுந்து தன் வண்டியையும் மாட்டையும் கவனிக்கச் சென்றான். அந்தக் காளைகளைத் தடவிக் கொடுத்துக்கொண்டே, "என் கண்களே! அவளை ஏற்றிக் கொண்டு போகிறதென்றால் எவ்வளவு பெருமையாக இருக்கும் உங்களுக்கு? அந்த நாளெல்லாம் போயிற்றே! இனிமேல் அது முடியாது" என்றான். அப்போது தெருவில் வரதா ரெட்டி என்பவன் தன் வீட்டை நோக்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டான். வரதா ரெட்டி அந்த ஊரில் மாட்டு வியாபாரம் செய்பவன். ரொம்ப நாளாக அந்தப் பக்கம் அவன் வருவதில்லை. 'இப்போது இவன் வருவானேன்?' என்று செங்கா ரெட்டிக்கு ஆச்சரியமாய் இருந்தது. காளைகளை விட்டுவிட்டு வாயில் பக்கம் வந்து வரதா ரெட்டியை வரவேற்றான். அவன் வந்து உட்கார்ந்ததும், "என்ன ஸமாசாரம், வரதா ரெட்டி?" என்று கேட்டான் செங்கா ரெட்டி.

"ஒன்றும் விசேஷம் இல்லை. உன் காளைகளைப் பார்க்கலாம் என்றுதான் வந்தேன். இப்போது நீ இருக்கிற நிலைக்கு உழவு மாடு நாலு வைத்திருந்தாலாவது உபயோகமாக இருக்கும்; இந்தப் பகட்டான காளைகள் எதற்கு? ஏர் உழ என்னவோ இவை லாயக்கில்லை; அப்படி உழுதாலும் நீ இருந்த அந்தஸ்துக்கு ஏற்று இருக்குமா? இப்போது உன்னிடம் உழவு மாடு இரண்டே இரண்டுதான் இருக்கின்றன. எப்போதாவது உழவேண்டியிருந்தால் பிறத்தியாரை மாடு கடன் கேட்கவேண்டியிருக்கிறது; அவர்களுக்கும் உன் மாட்டைப் பதிலுக்குத் தரவேண்டியிருக்கிறது. இதெல்லாம் வீண் தொல்லைதானே? கௌரவக் குறைவுதானே? உன் வேலைக்கும் இடைஞ்சலாக இருக்கிறது. உன் வண்டி மாடு இரண்டுக்கும் பேஷான கிராக்கி வந்திருக்கிறது; என்ன சொல்கிறாய்? முந்நூறு ரூபாய்; ஆறு ஜதை உழவு மாடு வாங்கலாம்! அவ்வளவா என்று உனக்கே ஆச்சரியமாய் இல்லையா?" என்றான் வரதா ரெட்டி.

"ஊஹூம்; துளிக்கூட இல்லை. நான் சொல்வதைக் கேட்டால்தான் உனக்கு ஆச்சரியமாய் இருக்கும். ஓபி ரெட்டி உன்னை அனுப்பியிருக்கிறான், இங்கே. அவன்தான் இவ்வளவு கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறான்; எனக்குத் தெரியும். நான் அதற்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் ஆயிரம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயார் என்று சொல்லி அனுப்பியிருக்கிறான்; அதுவும் தெரியும்" என்றான் செங்கா ரெட்டி.

வரதா ரெட்டி திடுக்கிட்டுப் போனான். ஊரிலேயே செங்கா ரெட்டி அவ்வளவாகப் புத்திசாலி அல்ல என்று பெயர். அப்பேர்ப்பட்டவனுக்கு இவ்வளவு ஊகம் இருக்கும் என்று வரதா ரெட்டி எதிர்பார்க்கவே இல்லை. ஆனாலும் ஸமாளித்துக்கொண்டு, "ஓபி ரெட்டிதான் என்னை அனுப்பினான் என்று எப்படிச் சொல்லிவிடுவாய்?" என்றான்.

"வேறு ஒருத்தனும் அதற்கு முந்நூறே இன்னும் மேலே போனால் ஆயிரமோ கொடுக்க ஸம்மதிக்கவே மாட்டான். அவனுக்குத்தான் என் வண்டியையும் மாட்டையும் கண்டால் வயிற்றெரிச்சல். எப்படியாவது வாங்கிக்கொள்ள வேண்டுமென்று பார்க்கிறான்" என்றான் செங்கா ரெட்டி.

"அப்படி என்ன வந்தது? அவனுக்கு என்ன மாடுகளுக்குக் குறைச்சலா?" என்று கேட்டான் வரதா ரெட்டி.

"அது சரி; ஆனால் இதைப்போல் ஜதை ஏது? அகப்பட வேண்டுமே! மூன்று வருஷத்துக்கு முந்தி ஏதோ ஓர் ஊரில் நடந்த மாட்டு வண்டிப் பந்தயத்திற்குப் போயிருந்தாரே தெரியுமா எங்க நாயினு; இந்த ஜதைதான் ஜயித்தது. உடனே வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்; இருநூறு ரூபாய் பிடித்தது. கங்கி ரெட்டி வீட்டுப் பெண்பிள்ளைகளுக்கு இதில் சவாரி பண்ணுவதென்றால் ரொம்ப ஆசை. அடிக்கடி அனுப்பி வைப்பேன், அவர்கள் வீட்டுக்கு. ஓபி ரெட்டியிடம் இந்த மாதிரி வண்டியோ மாடோ இருந்தால்தானே? பிச்சம்மா இதில் சவாரி போகும்போது அவளுக்கு ரொம்பத் திருப்தியாக இருக்கும்; அப்போது அவன் மூஞ்சியைப் பார்க்க வேண்டுமே! 'எப்படியாவது இவைகளை வாங்கிப் பிச்சம்மாவுக்குக் கொடுத்து அவள் சிரித்து நாம் பார்க்கவேண்டும்' என்று அவன் வயிற்றெரிச்சல் படுவது நன்றாகத் தெரியும். இப்போது கங்கி ரெட்டியின் மனசைக் கலைத்திருக்கிறான்; பிச்சம்மாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க அவனும் ஸம்மதித்திருக்கிறான். என் வண்டியையும் மாட்டையும் வாங்கிவிட உன்னை அனுப்பியிருக்கிறான். அதுதானே?" என்றான்.

செங்கா ரெட்டி வெறுப்புக் கலந்த சிரிப்புடன், “இதில் என்ன தப்பு? நீ என்னவோ இனிமேல் பிச்சம்மாவைக் கட்டிக் கொள்ளப் போவதில்லை; அவன்தான் கட்டிக்கொள்ளப் போகிறான். இவ்வளவு லாபம் – ஆயிரம் ரூபாய் வருவதாய் இருந்தால்கூடவா - விற்கமாட்டாய் இவைகளை? அதை வைத்துக்கொண்டு மறுபடியும் முன்னுக்கு வரலாமே!” என்றான் வரதா ரெட்டி.

“ஓபி ரெட்டியின் பணத்தை வைத்துக்கொண்டு முன்னுக்கு வர வேண்டியதில்லை நான்!” என்றான் செங்கா ரெட்டி.

“அது ஓபி ரெட்டியின் பணம் ஆவானேன்? உன் வண்டி, மாட்டை விற்ற பணந்தானே?” என்று கேட்டான் வரதா ரெட்டி.

“அவன் ஒருவன்தான் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று வருவான். வேறு எவனும் இதற்கு 200 ரூபாய்க்குமேல் கொடுக்கவே மாட்டான். மீதி 800-ம் அவன் கொடுத்த பிச்சை மாதிரிதானே! எனக்கு அந்தப் பிச்சைக்காசு எதற்கு?” என்றான் செங்கா ரெட்டி.

“உன் சாமானை அவனே வலியக் கேட்கிறானே, ஐயா! கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் பிச்சை என்ன வந்தது? தாக்ஷிண்யம் என்ன வந்தது? அதெல்லாம் ஒன்றும் இல்லை. என்ன சொல்கிறாய்? கைமேலே ஆயிரம் ரூபாய் கொடுப்பதாயிருந்தால் உனக்கு ஸம்மதமா?” என்று கேட்டான் வரதா ரெட்டி.

“ஊஹூம், முடியாது. பட்டினியாய்க் கிடந்தாலும் கிடக்கிறேன். என் அருமையான மாடுகளை விற்கப் போவதில்லை. அதிலும், ஓபி ரெட்டிக்கும் அவன் கையாட்களுக்குமா விற்பேன்?” என்றான் செங்கா ரெட்டி.

“ஏன் உனக்கு இந்த முரட்டுப் பிடிவாதமும் விரோதமும்? சொந்த விஷயத்துக்கும் வியாபாரத்துக்கும் என்ன ஸம்பந்தம்? அதை இதில் புகுத்துவானேன்? ஓபி ரெட்டியோடு என்னவோ நீ ஒரு வார்த்தைகூடப் பேசவேண்டியதில்லை. கையிலே ரொக்கமாக ரூபாய் கிடைக்கிறது. எவன் வாங்கிக் கொண்டு போனால் உனக்கு என்ன?” என்றான் வரதா ரெட்டி.

“வரதா ரெட்டி! தயை செய்து இதோடு விடு; போதும். என் வண்டியையும் சரி, மாட்டையும் சரி, லக்ஷம் ரூபாய் வந்தாலும், அதிலும் ஓபி ரெட்டிக்கு விற்கவே மாட்டேன்! உன் வியாபார தந்திரமெல்லாம் உன்னோடு இருக்கட்

டும்; எனக்கு வேண்டியதில்லை. பகவான் புண்ணியத்தில், எங்கள் பரம்பரையிலே எவர்களும் வியாபாரியாக இருந்த தில்லை. அவர்களெல்லாம் மானிகள். குடும்ப கௌரவத்தைப் பெரிதாக எண்ணினார்களே யொழியப் பணத்தை மதித்த தில்லை" என்றான் செங்கா ரெட்டி.

"நான்கூடத்தான் அந்தக் காலத்து மனுஷ்யன். நீ சொன்னாற்போலே அவர்களெல்லாம் இப்படிப் பணத்தை வெறுத்ததாகவும் எனக்குத் தெரியவில்லை. ஏன், உன் தகப்பனாரையே சொல்லேன்; அவருக்குத் துட்டு மேலே எவ்வளவு கருத்து உண்டு தெரியுமா? அவர்களெல்லாம் குடும்ப கௌரவத்தை விட்டுக் கொடுத்ததில்லை; அது வாஸ்தவந்தான்; சில சமயம் அதைப் பிரமாதப்படுத்திப் பழைய துவேஷத்தை வளர்த்தும் வந்தார்கள். அந்த நாளெல்லாந்தான் போயாயிற்றே! இன்னுமா போனதைக் கிளறிக்கொண்டு கிடப்பார்கள்? அந்த நாளில் இரண்டு ரெட்டிகளுக்குள்ளே ஒரு பெண்ணைக் கட்டிக்கொள்ளப் போட்டி வந்துவிட்டால் எதிரும் புதிரும் நின்று சண்டை போடுவார்களாம். இப்போது யார் அப்படிப் போடுகிறார்கள்? நீ கூடத்தான், சொல்லேன்; போடுவாயோ? பின்னே அந்த நாளைச் சங்கதியைப்பற்றிப் பேசுவானேன்? பிச்சம்மாவுக்காகக் கங்கி ரெட்டி வீட்டுக்கு வண்டி கட்டி அனுப்புவாயே யொழிய உனக்கு என்னவோ அதில் சவாரி பண்ணவேண்டும் என்று இல்லை. ஓபி ரெட்டியும் பிச்சம்மாவுக்குக் கொடுக்கத்தான் விலைக்குக் கேட்கிறான். இந்த நல்ல காரியத்திற்குக் கூடவா கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பது? இன்னும் கேட்டால் இதிலே நல்ல லாபங்கூட ஆயிற்றே உனக்கு!" என்றான் வரதா ரெட்டி.

"நீ இப்படிச் சொல்லச் சொல்ல என் பிடிவாதம் இன்னும் உறுதியாகிறது. எனக்குப் போட்டியாக ஏற்பட்டவனுக்கு என் வண்டியையும் மாட்டையும் கேவலம் துட்டுக்கு ஆசைப்பட்டுக்கொண்டு விற்பதா? அவன் அதை அவளுக்குக் கொடுப்பதா? ஊஹூம்! ஒரு காலும் முடியாது. அப்படிச் செய்தேனானல், பெரியவர்களும் சரி, பின்னாலே வரப் போகிறவர்களும் சரி என்னைச் சபிக்க மாட்டார்களா? கோமுட்டியிலும் கடைகெட்ட கோமுட்டி என்றுதானே சொல்லுவார்கள் எல்லாரும்? அவ்வளவு கதிகெட்டுப் போய்விடவில்லை நான். வேணும் என்று பிச்சம்மா தன் வாயால் கேட்கட்டும்; பூர்ண திருப்தியோடு இனமாகக் கொடுக்கத் தயார். ஆனால் ஓபி ரெட்டிக்கோ, உனக்கோ, வேறு எவனுக்கோ நான் விற்க மாட்டேன். ஆஸ்தி யெல்லாம் போய் விட்டிருக்கலாம்;

ஆனல் நாணயமும் பெருந்தன்மையும் இன்னும் என்னை விட்டுப் போகவில்லை; ஞாபகம் வைத்துக்கொள்" என்ருன் செங்கா ரெட்டி.

"இந்த மாதிரி பார்த்தால் மனுஷ்யன் எவனுமே உருப்பட முடியாது என்ருன் வரதா ரெட்டி.

"உருப்படாவிட்டால்போகிறேன்; அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. பிச்சம்மாதான் கையை விட்டுப் போய்விட்டாள்; இனிமேல் எனக்கு எது வந்து என்ன ஆகவேண்டும்? என் குடும்ப கௌரவந்தான் எனக்குப் பெரிது" என்ருன் செங்கா ரெட்டி.

"இதற்குப் போய் இப்படிச் சப்பிட்டு விடுவார்களா?" என்ருன் வரதா ரெட்டி.

"உனக்கு ஏன் அந்தக் கவலை? என் பாடு. இதோடு நிறுத்திக் கொள்; போய் வரலாம். மறுபடியும் இந்தமாதிரிப் பேச்சை எடுத்துக்கொண்டு என் எதிரே வராதே" என்ருன் செங்கா ரெட்டி.

"கொஞ்சம் கேளேன், நான் சொல்வதை. நான் வயசானவன்; உன்னைவிட உலக அநுபவம் உண்டு. உனக்கு இதனுல் லாபமே" என்ருன் வரதா ரெட்டி.

செங்கா ரெட்டி, "உன் அநுபவம் உன்னேடு இருக்கட்டும். தயைசெய்து போய்வா, ஐயா; சும்மா ஏன் தொந்தரவு பண்ணுகிருய் என்னை?" என்று கத்திக்கொண்டே வரதா ரெட்டியை வாயில் பக்கம் கொண்டுவிட்டான்.

"வீண் பிடிவாதம்! — இந்தக் காலத்துப் பசங்களே இப்படித்தான்!" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான் வரதா ரெட்டி.

செங்கா ரெட்டி சாப்பிட்டானதும் சற்றுநேரம் அந்த நார்க்கட்டிலில் சாய்ந்தபடி அன்றைய நிகழ்ச்சிகளைக் குறித்து எண்ணமிட்டவண்ணம் இருந்தான். அப்போது வட்டி வியாபாரி முத்யாலு ரெட்டி அங்கே வருவதைப் பார்த்தான்.

"இதென்ன, ஒருவர் மாற்றி ஒருவர் இன்றைக்கெல்லாம் வந்துகொண்டே இருக்கிருர்களே!" என்று சொல்லிக்கொண்டான், தனக்குள்ளேயே. கட்டிலைவிட்டு எழுந்து முத்யாலுவை வரவேற்ருன். க்ஷேம ஸமாசாரமெல்லாம் விசாரித்தானதும் முத்யாலு, "அந்த ஐந்நூறு ரூபாய்க்கு டிக்ரித்

தொகை வரவேண்டி இருக்கிறதே; அதைக் கேட்கத்தான் வந்தேன். எனக்கு ரொம்ப முடையாக இருக்கிறது" என்றான்.

"நீதான் அதை நிதானமாக அடைத்தால் போதும் என்றாயே?" என்றான் செங்கா ரெட்டி.

"அப்படித்தான் சொன்னேன். இப்படித் திடீரென்று பணமுடை ஏற்படும் என்று நான் கண்டேனா அப்போது? இப்போதே வேண்டும்; இனிமேல் தவணை கொடுக்கமுடியாது, அப்பா; என்ன பண்ணுவது?" என்றான் முத்யாலு.

"இப்போது எங்கிருந்து, ஐயா, முடியும்? என் விஷய மெல்லாந்தான் உனக்குத் தெரிந்திருக்கிறதே. என் வயிற்றுக்கே பற்றவில்லை. என் தலைவிதி, இந்தமாதிரி கெட்டுப் போய்க் கிடக்கிறேன்!" என்றான் செங்கா ரெட்டி.

"சரி. நான் ஒரு வழி சொல்கிறேன்; கேள். உன் வண்டியையும் மாட்டையும் கொடுத்துவிடு; நான் நல்ல விலைக்கு வாங்கிக் கொள்கிறேன்" என்றான் முத்யாலு.

செங்கா ரெட்டி தேள் கொட்டினதுபோல் துள்ளினான்.

"ஓஹோ! நீகூட அவர்கள் சூழ்ச்சியிலே கலந்திருக்கிறாயா?" என்றான்.

"என்ன சூழ்ச்சி?" என்றான் முத்யாலு.

"ஓபி ரெட்டியும் வரதா ரெட்டியும் சேர்ந்து எப்படியாவது என் வண்டியையும் மாட்டையும் வாங்கிப் பிச்சம்மாவுக்குக் கொடுக்கலாமென்று சூழ்ச்சி பண்ணுகிறார்களே; அதுதான்" என்றான் செங்கா ரெட்டி.

"எனக்கும் அதற்கும் என்ன ஸம்பந்தம்? நியாயமாக எனக்குச் சேரவேண்டியதை நீ கொடுத்துத்தானே ஆக வேண்டும்? சற்று முன்னே வரதா ரெட்டி உன் வண்டியையும் மாட்டையும் ஓபி ரெட்டிக்கு வாங்கித் தர உன்னண்டை ஓடி வந்தானும்...ஆயிரம் ரூபாய்கூடக் கொடுப்பதாகச் சொன்னானும்; நீ ஒரேயடியாக முடியாது என்றாயாம்; இதெல்லாம் தெரிந்துதான் இங்கே வந்தேன்; எனக்குக் கோபம் கோபமாக வந்தது. கடன்காரனாயிருந்து எப்படி நீ வந்த கிராக்கியை விடுவாய்? இருநூறுக்குமேல் எவனும் கேட்கமாட்டானே அவைகளுக்கு! கைமேல் இதோ ஆயிரம் ரூபாய் வரும்போது வேண்டாம் என்று உதறித் தள்ளுகிறானும்! இதென்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! 'கையிலே பணம் கிடைத்

ததும் கடனை அடைக்கிறேன்' என்று நீ சொல்லவில்லையா? பின்னே ஏன் வலுவிலே வந்த லக்ஷ்மியை இப்படி உதறி எறிகிறாய்?" என்றான் முத்யாலு.

"உனக்கு நான் சொல்வது புரியவில்லை. எனக்கு இந்த வண்டி, மாடு இரண்டின்பேரிலும் அவ்வளவு ஆசை. அவைகளைவிட்டுப் பிரிய மனசு வரவில்லையே" என்றான் செங்கா ரெட்டி.

"யோக்கியனாய் இருக்கிறவன் முதலில் தன் கடனை அடைத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பான்; நீயேதான் உங்கள் குடும்பத்தைப்பற்றியும் அதன் கௌரவத்தைப் பற்றியும் பிரமாதமாகப் பேசியிருக்கிறாய்? அதெல்லாம் எங்கே போயிற்றோ தெரியவில்லை! கேட்டதில்லையா? அரிச்சந்திரன் பெண்சாதியையும் பிள்ளையையும் தன்னையுங்கூட அடகு வைத்துக்கொண்டானே, விசுவாமித்திரருக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியைத் தீர்க்க. அதுவாவது வாசாவாகக் கொடுக்க ஒப்புக்கொண்டது. இது அப்படி இல்லையே; ரொக்கமாகக் கொடுத்த கடனாயிற்றே! நீ என்னடா என்றால் இந்தத் திராபை வண்டியையும் மாட்டையும் விற்க அழுகிறாய்! தெரியும் தெரியும் உன் எண்ணம்! நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஸம்பாதித்துக் கடன் கொடுத்திருக்கிறேன்; அதை நீ ஏமாற்றப்பார்க்கிறாய்?" என்றான் முத்யாலு.

"இல்லை, இல்லை, பகவானுக்குப் பொதுவாகச் சொல்கிறேன். உன் கடன் பூராவையும் கூடிய சீக்கிரத்தில் செலுத்திவிட வேண்டுமென்றுதான் நானும் பார்க்கிறேன். ஆனால் எனக்குப் போட்டியாக இருக்கிற அந்த ஓபி ரெட்டிக்குமட்டும் விற்கமுடியாது; அவன் வாங்கி அதைப் பிச்சம்மாவுக்குக் கொடுப்பதா! எனக்கு ஸகிக்காது" என்றான் செங்கா ரெட்டி.

"ஏனோ? உனக்குத்தான் ஆஸ்தியும் இல்லை பாஸ்தியும் இல்லை; இந்த ஐந்நூறு ரூபாய் கடனைக்கூட அடைக்க வழி இல்லை! நீ என்னவோ இனிமேல் பிச்சம்மாவைக் கட்டிக் கொள்ள முடியாது. ஓபி ரெட்டி வாங்கிப் பிச்சம்மாவுக்குக் கொடுத்தால்தான் உனக்கு என்ன முழுகிப்போயிற்றோ தெரியவில்லை" என்றான் முத்யாலு.

"முத்யாலு! உன்னை ஏன் வீணாக இழுக்க அடிக்கவேண்டும்? என் வண்டியையும் மாட்டையும் நான் விற்கப்போவதில்லை; இது நிச்சயம்!" என்றான் செங்கா ரெட்டி.

"ஓஹோ! எனக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாயா? கேப்மாறிப் பயலே!" என்றான் முத்யாலு.

"அப்படியெல்லாம் பேசாதே! நான் யார் சொத்தையும் ஏமாற்றவில்லை. எங்கள் குடும்பத்திலும் எவரும் ஏமாற்றி வழக்கமில்லை. அப்படிப் பேசாதே! எனக்கு ரோஷம் பொத்துக் கொள்கிறது! முன்கோபத்தில் ஏதாவது செய்து விடுவேன்; அப்புறம் வருத்தப்பட வேண்டியிருக்கும். தயை செய்து உடனே போய்விடு!" என்றான் செங்கா ரெட்டி.

"என்ன! என்னைக் கொல்லுவேனென்று பயமுறுத்துகிறாய்? கொலைகாரப் பயலே! உனக்குமேலே சோதாப் பசங்களை நான் பார்த்திருக்கிறேன்டா! எனக்குப் பயமில்லை!" என்றான் முத்யாலு.

கோபம் பொங்க, "வீட்டைவிட்டு வெளியே போ!" என்று செங்கா ரெட்டி கர்ஜித்தான்.

"என்னடா! என் இடத்திலே இருந்துகொண்டு, என் கிட்டக் கடன்பட்டவனாயிருந்து என்னையா வெளியிலே போகச் சொல்கிறாய்? நீ போடா என் இடத்தைவிட்டு; போடா இப்போதே!" என்றான் முத்யாலு.

"சரி. உன் நிலத்தை நீயே எடுத்துக்கொண்டு போ! யாருக்கு வேணுமானாலும் வாரத்துக்கு விட்டுக்கொள்" என்றான் செங்கா ரெட்டி.

"என் ஐந்நூறு ரூபாயைக் கீழே வை!" என்றான் முத்யாலு.

"இப்போது என் கையில் பணம் இல்லை. கிடைத்ததும் கொடுத்துவிடுகிறேன்" என்றான் செங்கா ரெட்டி.

"வண்டியையும் மாட்டையும் கொடுத்து அடை" என்றான் முத்யாலு.

செங்கா ரெட்டி, "முடியாது. போகிறாயா இல்லையா இப்போது வெளியிலே!" என்று சொல்லிக்கொண்டே முத்யாலுவை மெதுவாக வாயில் பக்கம் நெட்டிப் பிடித்துத் தள்ளிக்கொண்டே போய் வெளியே விட்டுவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டான்.

முத்யாலுக் கிழவனை எவரும் இதுவரை இப்படி நடத்தினதில்லை. அவன் திட்டினது கணக்கு வழக்கில்லை; செங்கா ரெட்டியைப் பார்த்து, "உன்மேல் பழி தீர்த்துக்கொள்ளாவிட்டால் பாரடா! ஆயிரம் ரூபாய் செலவானாலும் சரி. நான் விடப்போவதில்லை" என்று கத்தினான்.

அவன் போனதும், செங்கா ரெட்டி சோர்ந்துபோய்க் கட்டிலில் விழுந்து அழத் தொடங்கினான்.

"திவாலாகிக் கடன்காரனுகியும் விட்டால் மனுஷ்யனுக்கு நிம்மதி ஏது? வசை, திட்டு, அவமானம், துன்பம் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டியதுதான். இந்த முத்யாலு என் யோக்கியதையையும் கௌரவத்தையும் மதித்தானு? 'கேப்மாறி! சோதாப் பயலே' என்றுதானே திட்டினுன்! கடன்பட்டு அவன்கீழ்க் குடியாய் இருக்கிறேனே? அவனை என்ன பண்ண முடியும் நான்? நிலத்தை விட்டுப் போய்விடு என்று கூடச் சொல்லிவிட்டான். கொஞ்ச நாளுக்கு முன்னுல் அது என் நிலமாக இருந்தது! இப்போது என்ன செய்வது? வண்டியையும் மாட்டையும் விற்பதென்னவோ ஸாத்யமில்லை. நான் பட்டினி கிடந்து செத்தாலும் அவைகளை விற்கப்போவதில்லை. ஆனுல் வேறு யார் நிலத்தையாவது குத்தகைக்கு எடுத்துத்தான் ஆக வேண்டும். உயிரை வைத்துக்கொண்டு இருக்கவேண்டுமே! இப்போது உடனே எந்த நிலம் அகப்படும்?" என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டான். சட்டென்று அந்த வேப்ப மரத்து வயல்கள் இரண்டும் அவன் கவனத்துக்கு வந்தன. இத்தனை வருஷமாக யாருமே அவைகளைக் குத்தகைக்கு எடுக்கவில்லை. 'நாம் சுலபமாக எடுத்துவிடலாம். நடுவில் அந்த மரம் இருக்கிறதே!... இருந்தால் நமக்கு என்ன? ஆனுல் நமக்குத்தான் இதிலெல்லாம் அவ்வளவாக நம்பிக்கை இல்லையே. எதுவாக இருந்தாலும் சரி. அந்த மரத்தால் நமக்கு ஒரு கெடுதலும் வராது. இங்கே இருக்கும்போதே ஓபி ரெட்டியையும் முத்யாலுவையும் கொல்லவேணும் என்று தோன்றவில்லையா என்ன?' என்று எண்ணமிட்டான். பிறகு அந்நிலத்துக்காரனிடம் போனுன். பாதி வாரம் கொடுப்பதுதான் அந்த ஊர் வழக்கம். ஆனுல் அந்த நிலங்கள் ரொம்ப நாளாகக் கரம்பாய் இருந்ததாலும் யாருமே இதுவரையிலும் வாரத்துக்குக் கேட்காததாலும் அவைகளைத் தனக்குக் கால்வாரத்துக்கு விடும்படி கேட்டான். அவனை முத்யாலு விரட்டிவிட்ட ஸங்கதி நிலத்துச் சொந்தக்காரனுை ஆதி ரெட்டிக்கு அதற்குள் எட்டிவிட்டது. 'செங்கா ரெட்டிக்கு வேறு வழியில்லை. நாம் சொன்னதற்கு ஒப்புக்கொண்டேதான் தீருவான்' என்று தெரிந்துகொண்டு அவன், "பாதி வாரத்துக்குக் குறைய முடியாது" என்று சொல்லிவிட்டான்.

"ரொம்ப நாளாகக் கரம்பாகக் கிடக்கிறதே!" என்று கேட்டுப் பார்த்தான் செங்கா ரெட்டி.

"அதுவும் நல்லதுதான்; செழிப்பாக இருக்கும்" என்றுன் ஆதி ரெட்டி.

"நான் இப்போது வந்திராவிட்டால் உனக்கு அதுகூடக் கிடைக்காதே!" என்ருன் செங்கா ரெட்டி.

"வாஸ்தவந்தான்; அங்கே இத்தனை நாள் பயிரிடாமல் இருந்ததால் நான் பட்டினி கிடந்து செத்துப் போய்விட வில்லையே! இந்தத் தடவையும் அப்படியே இருந்துவிட்டுப் போகிறது; வழக்கமாகக் கொடுக்கும் பாதி வாரத்தை விட்டு விட்டுக் கால்வாரத்துக்கு ஒப்புக்கொண்டால் நன்ருய் இராது; அப்படிச் செய்யவும் தயாராய் இல்லை நான்" என்ருன் ஆதி ரெட்டி.

"அங்கே இருக்கும் மரங்கூட ஒரு மாதிரி என்று பேசிக் கொள்ளுகிருர்களே!" என்ருன் செங்கா ரெட்டி.

"அந்த மரத்துக்கும் வாரத்துக்கும் என்ன ஐயா ஸம்பந்தம்? அதற்குப் பயப்படுகிற ஆசாமிகளாய் இருந்தால் பயிரிட முன்வரமாட்டார்கள். பயப்படாதவர்களாய் இருந்தால் பயிரிட்டு முழுப் பலனையும் அநுபவிக்கிருர்கள்; அவ்வளவு தான். அந்த மரத்தினுல் என்னவோ பயிருக்குக் குந்தகம் நேரப் போவதில்லை. பின்னே, அந்த மரத்தின்மேலே பழி போட்டு வழக்கமாகத் தருகிற வாரத்தைக் குறைக்கச் சொல்வானேன்?" என்ருன் ஆதி ரெட்டி.

செங்கா ரெட்டி அதற்கு மேல் பேச்சை வளர்த்திப் பிரயோஜனம் இல்லை என்று கண்டுகொண்டு பாதிவாரத் துக்குப் பயிரிட ஒப்புக்கொண்டான்.

ஆதிரெட்டியின் வீட்டைவிட்டு நேராகக் கழனிப் பக்கம் போனுன். அப்போது நல்ல உச்சிவேளை. ஓர் ஈ, காக்கைகூட அங்கே இல்லை. அந்த வயல்களைப் பார்வையிட்டான். இத்தனை வருஷ காலமாகத் தரிசாகக் கிடந்ததால் ஒரே முட் புதிராக இருந்தது. "குறைந்தது ஐந்து நாளாவது பிடிக்கும், இதையெல்லாம் சீர்திருத்திப் பொசுக்க. மண்ணும் வளமாக இல்லை. இதை வைத்துக்கொண்டு நாம் காலம் தள்ள முடியுமா என்றுதான் பயமாய் இருக்கிறது. ஆனுல் வேறு வழி? இந்த ஓபி ரெட்டிதான் நம்மை இப்படிக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டான். அவனே பணத்தில் மிதக்கிருன். நாம் இத்தனை நாள் ஆசை வைத்திருந்த பெண்ணைக் கட்டிக் கொள்ளப்போகிருன்! இங்கே நாம் வீடுவாசல் இல்லாமல், கையிலே தம்பிடிகூட இல்லாமல், கடன்காரன் மென்னியைப் பிடித்து நெருக்க நின்றுகொண்டிருக்கிருேம்; பேய் பிடித்துக் கரம்பாய்க் கிடக்கிற இந்த நிலங்களைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிருேம்! இந்த ஓபி ரெட்டியைக் கொன்று

விடலாம்போல் ஆத்திரம் வருகிறது!" என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது காற்றில் வேப்ப இலை சலசலவென்று அடித்துக்கொள்வது யாரோ ஏளனமாகச் சிரிப்பதுபோல் ஒலித்தது. அவனுக்கு நடுக்கம் எடுத்தது. "என்ன! இந்த மரத்தினருகில் வரும்போதே கொல்லவேண்டும் என்று ஓர் எண்ணம் வருகிறதே! ஜனங்கள் சொல்வது வாஸ்தவமாக இருக்குமோ?" என்று நினைத்தான். மரத்தின் ஸமீபம் வந்து உற்றுக் கவனித்தான். சுற்றிலும் நிச்சப்தமாக இருந்தது. அந்தப் பேய்க் காற்று இப்போது அடங்கிவிட்டது. அந்த மரம் தன்னையே கவனிப்பதுபோல் இருந்தது அவனுக்கு. அதற்குமேல் அங்கே நிற்கத் தைரியமில்லை அவனுக்கு. ஆனாலும், "என்னடா இது! இந்த மரத்துக்கா நாம் பயப்படுவது?" என்று அங்கேயே நின்றிருந்தான். கொஞ்ச நேரங் கழித்து மறுபடியும் அதேமாதிரி காற்று வீசத் தொடங்கியது. "கொலை பண்ணு, கொலை பண்ணு என்கிறாற் போலவே தோன்றுகிறது. எல்லாம் பிரமைதான். புத்தி ஒரு நிலையில் இல்லாதவர்களுக்கு அப்படித்தான் படும். சரி; நாம் போகலாம்; நாளைக்கு மற்றுநாள் அரிவாளும் கத்தியும் எடுத்துக்கொண்டு வந்து இந்தப் புதரையெல்லாம் கழிக்கலாம். நம் மாடுகளைக்கூட இங்கே கொண்டுவந்து மேயவிட வேண்டும்; நமக்குத் துணையாகவும் இருக்கும்" என்று எண்ணிக்கொண்டான்.

அப்படியே மூன்றும் நாள் தன் நாலு மாடுகளையும் அழைத்துக்கொண்டு அங்கே போனான். வயலில் அவைகளை மேய விட்டு விட்டு அரிவாளால் புதர்களைக் கழிக்க ஆரம்பித்தான். கத்தியை இடுப்பில் செருகியிருந்தான். அவன்பாடு ரொம்ப சிரமமாக இருந்தது; அதோடு மண்ணும் மோசமாய் இருக்கவே செங்கா ரெட்டிக்கு, 'ஓபி ரெட்டியின் சூழ்ச்சியால்தானே இப்படியெல்லாம் நேர்ந்தது!' என்று அவன்மேல் கோபம் பொங்கி எழுந்தது. தனக்குள்ளேயே அடிக்கடி, "ஏன் அவன்மட்டும் பிச்சம்மாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சுகமாக வாழவேண்டும்? நாம் ஏன் இப்படி அவதிப்பட வேண்டும்? அவனைக் குத்திக் கொலை பண்ணி விட்டு நாமும் தற்கொலை பண்ணிக்கொண்டால் என்ன? நம்முடைய கஷ்டமும் தொலைந்தாற்போல் இருக்கும், ஓபி ரெட்டியையும் தண்டித்தாற்போல் இருக்கும். அப்போதுதான் தங்கள் சூழ்ச்சியெல்லாம் பலிக்காத இடமும் ஒன்று இருக்கிறது, ஒருவன் நொந்து போய் எதற்கும் துணிந்து

விட்டானுனல், எப்பேர்ப்பட்டவனையும் சுலபமாக வென்று விடுவான் என்று மற்றத் துன்மார்க்கர்களுக்கும் புரியும்" என்று சொல்லிக்கொண்டான். அடிக்கடி அதேமாதிரி ஏளனம் செய்வதுபோல் மரத்திலிருந்து சலசலப்புக் கேட்டது; 'ஸபாஷ்' என்று அது அவனைத் தட்டிக்கொடுப்பதுபோலும் இருந்தது. "திரும்பத் திரும்ப இந்த எண்ணமே வருகிறதே" என்று செங்கா ரெட்டிக்கே ஆச்சரியமாக இருந்தது. அந்த மரந்தான் இதற்கெல்லாம் காரணம் என்று அவனுக்குப் பட்டது. "என் வீட்டில் இந்தமாதிரி தோன்றினதே இல்லையே! இவ்வளவு வகையாக எண்ணம் கூடவில்லையே. இந்தப் பாழும் மரத்தின்கீழ் வந்தால்தான் இப்படித் தோன்று கிறது! என்னுல் அடக்கக்கூட முடியவில்லையே! என்னவோ விந்தையாகத்தான் இருக்கிறது! என்னுலே ஸமாளிக்க முடிந்தால்தானே?...ஆனுல் ஏன் இப்படி ஸமாளிக்கப் பார்க்க வேண்டும்? செங்கா ரெட்டி! இந்த விஷயத்தில் தயாதாக்ஷிண் யம் ஏன் பார்க்கவேண்டும்? ஒருவனை இன்னொருவன் நாசமாக் குவதுமட்டும் நியாயமோ? என்னைப் பாழாக்கினுன் அவன்; நான் மாத்திரம் ஏன் அவனைச் சும்மா விடவேண்டும்?" இப்படி அவன் மனசில் எண்ணங்கள் சுழன்றன.

அப்போது நடுப்பகல். யாரோ "ஓ" என்று நகைப்பது கேட்டது. அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். அமீனு ஒருவனும், முத்யாலுவும், ஓபி ரெட்டியும், கிராமத்து மணிய காரரும் சேர்ந்து தன் இரண்டு வண்டி எருதுகளையும் பிடிப் பதைக் கண்டான். பாவம், அவை செங்கா ரெட்டியை அழைப்பதுபோல் துள்ளி அலறின. செங்கா ரெட்டி அரிவா ளும் கையுமாக அங்கே ஓடிவந்து, "திருட்டுப் பசங்களா! விடுங்களடா என் மாடுகளை!" என்று கத்தினுன்.

"நாங்கள் ஒன்றும் திருட்டுப் பசங்களல்ல. மாடுகளை விட மாட்டோம். இவர் கோர்ட்டு அமீனு, முத்யாலுவுக்குத் தர வேண்டிய பாக்கிக்காக இவைகளை 'அட்டாச்' பண்ணக் கோர்ட்டாரிடமிருந்து சரியானபடி உத்தரவு வாங்கிக்கொண்டு தான் இங்கே வந்திருக்கிறுர்; தெரியுமா? நேற்றுப் பிராது கொடுத்து அவசரமாக உத்தரவு வாங்கிக் கொண்டுதான் இங்கே வந்திருக்கிறேம். ஜாக்கிரதை! மடையா, இவைகளை வாங்கிப் பிச்சம்மாவுக்குக் கொடுக்க என்னுல் முடியாது என்று தானே எண்ணிக் கொண்டிருந்தாய்? ஓபி ரெட்டி ஸாமர்த்தி யத்தைப் பார்த்தாயா? என்னவோ என்று நினைத்தாயே! வண்டியை முன்னுலேயே 'அட்டாச்' பண்ணியாயிற்று! இந்த எருதுகள்தான் பாக்கி. நான் எப்படியாவது ஏலத்தில்

எடுத்துவிடுவேன் எல்லாவற்றையும். ஒபி ரெட்டி தன் காரியத்தை முடித்துக் காட்டினுனு இல்லையா பார்; அவன் எதில் கையைவைத்து இதுவரைக்கும் தோற்று இருக்கிருன்; சொல்'' என்ருன் ஒபி ரெட்டி.

"இந்தத் தடவை பார்!'' என்று ஓங்கி அவன் தலையில் ஒரே போடு போட்டான் செங்கா ரெட்டி. அரிவாள் ஒபியின் தலையில் புதைந்துவிட்டது.

"அட விஷப்பாம்பே! நாயே! உன் ஆயுசு மாண்டது. இனிமேல் கோர்ட்டில் உன் ஜபம் எல்லாம் செல்லாது. என் வண்டியும் மாடுகளும் மட்டுமல்ல; பிச்சம்மாகூட உனக்குக் கிட்ட மாட்டாள் இனிமேல்'' என்று கத்தினுன் செங்கா ரெட்டி.

ஒபி ரெட்டியின் மண்டை ஒடு விரிந்துவிட்டது. மூளை பிதுங்கி வெளியில் வந்தது. மறு பேச்சில்லாமல் அவன் தொப்பென்று கீழே பிணமாய்ச் சாய்ந்தான். மற்றவர்க ளெல்லாரும் வியப்பும் அச்சமும் மேலிடச் சற்று ஒதுங்கிப் போய் நின்ருர்கள்.

"என்கிட்ட வராதீர்கள். யாராவது வந்தால் இந்த மரத்துக்கு இன்னெரு 'காவு'; பத்திரம்!'' என்று கூவிக் கொண்டே செங்கா ரெட்டி தன் இடுப்பில் செருகி இருக்கும் கத்தியை எடுத்துச் சுழற்றிக்கொண்டே கோபம் பொங்க ஊளையிட்டான். எல்லோரும் களேபரமாக ஓடத் தலைப் பட்டார்கள்.

செங்கா ரெட்டி திடமாக நின்றுகொண்டு கத்தியால் தன் கழுத்தில் ஆழக் குத்திக்கொண்டு கீழே பிணமாய் வீழ்ந்தான். ஓயாமல் பேய்க்காற்று ஒன்று அந்த ஒற்றை மரத்தின் கிளைகளை யும் இலைகளையும் உலுக்கி எடுத்தது.

கிராம மணியகாரரும் மற்றவர்களும் வந்து கூடி விட்டனர். இரண்டு சவங்களும் அருகருகில் தரையில் விழுந்து கிடந்தன.

செங்கா ரெட்டியின் எருதுகள் இரண்டும் வருத் தந் தாளாமல் அவன் சவத்தைச்சுற்றிச் சுற்றித் துள்ளி வந்தன.

"இந்தப் பாழும் மரம் பண்ணின கோரம் இது! இவன் மூளையைக் குழப்பி அதில் கொலை பாதக எண்ணங்களைக்

கிளப்பி ஒரு கொலைக்கு இரண்டு கொலை பண்ணத் தூண்டி விட்டது!" என்றான் முத்யாலு.

"அது கிடக்கட்டும், ஐயா! இந்த எருதுகளுக்கு எவ்வளவு எஜமான விசுவாஸம் பார்: பிச்சம்மாவுக்குமட்டும் செங்கா ரெட்டியிடம் கொஞ்சமாவது ஆசை இருந்திருக்கும் பக்ஷத்தில் இந்த மாதிரி கோரமே நடந்திராது. மனுஷ்யனைவிட வாயில்லாப் பிராணிகளே சில விஷயங்களுக்கு மேல்!" என்றார் மணியகாரர்.

"சரி; நாம் 'அட்டாச்மெண்ட் ரிப்போர்ட்' எழுதலாம் வாரும்" என்றார் அமீனா.

"முதலில் இந்தக் கொலை 'ரிப்போர்ட்' எழுதி முடிக்கலாம். ஆனால் இந்த மரத்தின்கீழ் வேண்டியதில்லை; வேறு யாருக்காவது அந்த எண்ணம் வந்துவிடப் போகிறது!" என்றார் மணியகாரர்.

"இந்தப் பாழும் மரத்தையே வெட்டித் தள்ளிவிட்டால் என்ன?" என்று கேட்டார் அமீனா.

"அதுவும் சரியான யோசனைதான்! பிரேத விசாரணை ஆனதும் முன்னாலே செய்யவேண்டிய காரியம் அதுதான்" என்றார் மணியகாரர்.

சொன்னபடியே செய்தும் முடித்தார். மரத்தின் சொந்தக்காரனும் உடனே அதற்கு ஒப்புக்கொண்டான். அந்த மரத்தை வெட்டும்போது ஊரே திரண்டு வந்தது. அது கீழே விழுந்ததும் எல்லோரும், "அப்பாடா! ஒழிந்தது" என்று ஸந்தோஷப்பட்டனர். "கொலை பண்ணத் தூண்டும் அந்த ஏளனச் சிரிப்பு இனிமேல் கேட்காது. இனிமேல் ஊரில் கொலையே இராது" என்று கூவினார்கள். ஆனால் அவர்கள் சொன்னது பலிக்கவில்லை. அந்த ஒற்றைமரம் போய்விட்டாலும் மிட்டாமிடப்பள்ளியில் வருஷந்தோறும் கொலைகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

எல்லாம் வீணே!

சுற்றிலும் பரந்த வெளி. அதன் நடுவில் ஒட்டகத்தின் முதுகு போல் தோன்றும் பழுப்பு நிறக் குன்று ஒன்று; அதில் புல் பூண்டு ஒன்றும் இல்லை. இரண்டு நண்பர்கள் அதன் உச்சியில் ஏறி அமர்ந்தார்கள். அவர்களுள் இளையவனான ரத்னத்துக்கு வயசு முப்பது இருக்கும். அவன் மற்றவனை நோக்கி, "அசுவத்தா! பார், சிரமப்பட்டு வந்ததுதான் மிச்சம்! ஒரு புல்லாவது இருக்கிறதா? நன்றாய் உட்கார்ந்துகொள்ளலாம் என்றால் ஒழுங்காக ஒரு கல்லைக்கூடக் காணோம்! இவ்வளவு தூரம் வந்து என்ன பலனைக் கண்டோம்! நான் அப்போதே சொன்னேனே, இப்படித்தாண்டா இருக்கும் என்று! சாயங் கால வேளையாயிற்றே! நிம்மதியாக வேறு பக்கம் உலாவப் போயிருக்கலாமோ இல்லையோ? இந்த மொட்டைக் குன்றிலே அப்படி மனசைக் கவரும்படி என்ன விசேஷம் இருக்கிறதோ தெரியவில்லையே!" என்று கேட்டான்.

"இப்படி வெறிச்சென்று இருப்பதுதான் விசேஷம்!" என்று அசுவத்தன் பேச ஆரம்பித்தான்.

அவனுக்கு வயசு கிட்டத்தட்ட நாற்பத்தைந்துக்கு இருக்கும்.

"ஒவ்வொருவர் வாழ்நாளிலும் ஒரு சமயம் வரும்; அப்போதுதான் மேல்வாரியாகக் கவனிக்காமல் எல்லாவற்றையும் களைந்து அததை உள்ளூற ஆராய்ந்து பார்க்கத் தோன்றும்" என்றான் அவன்.

"இப்போது எதற்காக இங்கே வந்தாய்? இந்த மலையை ஆராய்ந்து பார்ப்பதற்காக வரவில்லையே? அப்படியென்றால் இவ்வளவு சிரமப்பட்டிருக்கவே வேண்டாமே! ஒரு மைல் தூரத்திலிருந்து பார்த்தால்கூட மேலே ஒன்றும் இராமல் மொட்டையாகத்தானே தெரிகிறது!" என்று கேட்டான் ரத்னம்.

"இதைப்பற்றி நான் ஒன்றும் ஆராய வரவில்லை. இதன் அருகில் வந்து பார்த்தால் என் வாழ்நாளைப்பற்றி யெல்லாம் — அது வியர்த்தமாய்ப் போனதைப்பற்றியெல்லாம் — கவனம் வருகிறது. இதுவும் அப்படித்தானே வெறிச்சென்று இருக்கிறது? ஒரு புல் இருக்கிறதா, கல்லாவது ஒழுங்காக இருக்

கிறதா; ஒன்றுமில்லை. என் வாழ்க்கையைப்போல் சூன்யமாக அதன்பாட்டிற்கு நிற்கிறது" என்னும்போது அசுவத்தன் குரல் சோகத்தால் நடுக்கமுற்றது.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? அசுவத்தா! எனக்கு இது தெரியவே தெரியாதே, இதுவரைக்கும்."

"தெரியாது. வாஸ்தவந்தான். அதைப்போலவே இந்தக் குன்றின் அருகில் வந்து பார்த்தால்தான் அது ஒன்றுக்கும் உதவாதது என்று புரியும்" என்றான் அசுவத்தன்.

"சரி. இப்போதுதான் தெரிந்துகொள்கிறேனே; சொல்லேன், எல்லாவற்றையும் விவரமாக" என்றான் ரத்னம்.

"எதற்கும் லாயக்கில்லாமல் நான் இருக்கிற லக்ஷணத்தை வேறு கேட்க வேண்டுமா? சரி; கேள்; நானே யோசனை பண்ணிப் பண்ணிக் குன்றிப்போவதைவிட மனசில் இருக்கிற பாரத்தை மற்றவர்களோடு சொல்லிக்கொண்டாலாவது கொஞ்சம் ஆறுதல் ஏற்படுமோ இல்லையோ?" என்றான் அசுவத்தன்.

"சரி. சொல்லு. கேட்கிறேன்" என்றான் அசுவத்தன்.

அசுவத்தன் சொல்லத் தொடங்கினான்:

* * * * *

உனக்கு ஏற்கனவே தெரிந்திருக்கலாம். கௌரவமான ஒரு மிராசுதார் குடும்பத்தில் பிறந்தவன் நான். என் தகப்பனார் நல்ல புத்திசாலி; ஆனாலும் ஒரு வேலைக்காரியின் மோக வலையில் சிக்கவேண்டும் என்று இருக்கிறதே; அதை யாரால் தடுக்கமுடியும்? அவளைத் தம் வைப்பாட்டியாகக் கொண்டு விட்டார். என் தாயார் என்னதான் சொல்லியும் அந்த வேலைக்காரப் பெண்ணை அவர் விட்டபாடில்லை.

என் தாயார் நல்ல பதிவிரதை; அவள் பாவம், தினமும் அழுது அழுது மாய்ந்து போவாள். ரொம்ப நாள் வரைக்கும் அவளுக்குக் குழந்தையே பிறக்கவில்லை. கடைசியாக, என்னை உண்டானதும், 'அப்பாடா! இனிமேலாவது நமக்கு நல்ல காலம் ஏற்படலாம்; நம்மாலேதான் முடியவில்லை; குழந்தை பேரில் அவருக்கு அன்பு ஏற்பட்டு அதனாலாவது வீட்டிலே தங்கமாட்டாரா?' என்று எண்ணினாள். ஆனால் அதிர்ஷ்டம் ஒன்று இருக்கிறதே; அந்த வைப்பாட்டியும் அதே சமயத்தில் கர்ப்பமானாள். என் தகப்பனார் தம் சொந்த மனைவியை அறவே மறந்துவிட்டு வைப்பாட்டிக்கு சுசுருஷை பண்ணிக்கொண்டு அவள் வீட்டிலேயே கிடந்தார். இதனால்

'உண்டானேமே!' என்று ஸந்தோஷப்படுவதற்குப் பதிலாக விசனப்பட்டுக்கொண்டே காலந் தள்ளி வந்தாள் என் தாய். ஆனாலும், 'பிறக்கப் போகிற குழந்தையாவது பொழுது போக ஒரு துணையாக இராதா?' என்ற நம்பிக்கை மட்டும் இருந்தது; அந்த எண்ணமே அவள் மனசுக்குச் சற்று ஆறுதலை அளித்தது. விதி அப்படி நேரவேண்டும் என்று இருந்ததே; ஒரே நாளில் இரண்டு பேரும் பிரசவித்தார்கள்! குழந்தை பிறக்கிற அன்றைக்காவது தன் புருஷன் வந்து சற்று ஆதரவாய் இராமல் போகிறுனு என்று எண்ணியிருந்தாள். ஆனல் நடந்தது என்ன? அவர் தம் வைப்பாட்டி வீட்டுக்கு, ஒரு டாக்டரையும் இரண்டு மருத்துவச்சிகளையும் அழைத்துப் போயிருந்தார். என் தாயாரைக் கவனிக்க அண்டை வீட்டு ஏழை ஸ்திரீ ஒருத்தியைத் தவிர வேறு யாருமே இல்லை. அவள், பாவம், தயா தாக்ஷிண்யத்துக்குப் பார்த்துக் கூடவே இருந்தாள். என் தாயார் ரொம்ப நேரம் சிரமப்பட்டுக் கடைசியில் என்னைப் பெற்றெடுத்தாள்.

குழந்தை அழவே இல்லையாம். தாயார் வயிற்றிலே குமுறின வருத்தம் தாளாது ஒருவேளை அழமுடியாமல் திணறிப் போய் விட்டிருக்கலாம்! அல்லது, ஏற்கனவே கர்ப்பத்தில் தான் அநுபவித்த துன்பம் இதனுல் நேர்ந்ததுதானே என்று இந்தக் குரூர உலகத்தைப் பார்த்ததும் மூர்ச்சையாகிவிட்டிருக்கலாம்! அண்டை வீட்டுக்காரி ஒரு பெரிய தப்புப் பண்ணினுள்! குழந்தையை அப்படியே சாக விட்டிருக்கக்கூடாதா, அவள்? இந்தமாதிரி வியர்த்த வாழ்வு வாழாமல் இருந்திருக்கலாமோ இல்லையோ? — அதற்கு மூச்சு வரும்படி பண்ணிப் பிழைப்பு மூட்டிவிட்டாள்; அவள் அந்தத் தரித்திரத்தைக் கிள்ளித் தொலைத்தாள்! அது அழ ஆரம்பித்ததும் சோர்வடைந்த தாயாருக்குச் சற்றுத் தெம்பு வந்தது. எனக்கு அசுவத்தன் என்று பெயர் வைத்தார்கள். நானும் அந்த மரத்தைப்போலவே என் தகப்பனுருடைய ஆதரவின்றிப் பகவானே கதி என்று வளர்ந்துவந்தேன். பிறந்தது முதல், ஐந்து வயசு முடிய நான் ஸதா என் தாயாரிடமே இருந்து வந்தேன்; அவள் என்னையே நம்பி இருந்தாள், பாவம்; நான் கூடவே இருந்தால்தான் அவளுக்கு நிம்மதி; அவளுக்குப் பிரபஞ்சமே நான்தான். என் தகப்பனுரை எப்போதாவது பார்ப்பேன். அவர் எப்போதும் தம் வைப்பாட்டி வீட்டிலேயே இருந்துவந்தார்; சாப்பாடுகூட அங்கேயேதான். அவளுக்கு ஏதாவது வேண்டியிருக்கும்போது இங்கே வருவார். பரம்பரையாக வந்த பொன், வெள்ளி நகைகள், பழைய மோஸ்தர் பித்தளை, வெண்கலச் சாமான்கள் எல்லாம் அவருடைய

வைப்பாட்டி வீட்டில் போய்ச்சேர்ந்தன. என் தாயார் ஸதா அழுதவண்ணம் இருப்பாள். என்னைக் கொஞ்சி முத்தமிடும் போதுகூட அவள் முகத்தில் சிரிப்பு இராது. "என் வயிற்றில் ஏண்டாப்பா பிறந்தாய்? அவள் வயிற்றில் பிறந்திருந் தால் சுகப்பட்டிருப்பாயே?" என்பாள் என்னைப் பார்த்து. அடிக்கடி அந்த வைப்பாட்டிமேல் ஆத்திரம் ஆத்திரமாக வரும் என் தாயாருக்கு; அவளைக் கண்டபடி திட்டிக்கொண் டிருப்பாள். திட்டினதுதான் மிச்சம்! அதனுல் ஒரு பலனும் ஏற்படவில்லை.

உலகத்தில் அன்பு ஒன்று இருந்தால்மட்டும் ஆனந்தம் ஏற்பட்டுவிடுமா? எப்போதும் அழுதுகொண்டே இருந்தால் சலிப்புத்தானே தட்டும்! வரவர என் தாயாரையோ, அவள் அழுவதையோ கண்டால் எனக்குப் பிடிக்கவே இல்லை. சிறு பிள்ளைதானே நான்; என் தகப்பனுருடைய வைப்பாட்டி வீட்டுக்குப் போய்ப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் மூண்டது. அவள் நன்ருகத்தான் இருந்தாள்; ஸந்தோஷமாகவும் காணப் பட்டாள். என் தகப்பனுர் அவளிடம், "இந்தப் பயல்தான்" என்ருர். "ஐயைய! நம் குழந்தையைப் பார்த்துவிட்டு இவனை யும் பார்த்தால் எவ்வளவு கோரமாய் இருக்கிறது!" என்ருள் அவள். நிஜந்தான்; வெல்வெட்டும் பொன் மோதிரமும், கெம் புக் கடுக்கனும் போட்டுக்கொண்டிருக்கும் அந்தப் பையனைப் பார்த்துவிட்டு என்னைப் பார்த்தால் ஏதோ அதம ஜந்து மாதிரி தான் இருக்கும்! அந்தப் பையனைப் பார்த்துப் பார்த்து ரொம்ப நேரம் அவனைப்போல நமக்குக் கிடைக்காதா என்று ஏங்காமல் இருக்க முடியவில்லை. அந்த வைப்பாட்டி என்னை வெளியே போகச் சொன்னுள். என்னைப் பார்த்ததும் என் தகப்பனுருக்கு ஒருவேளை இரக்கம் வந்துவிடுமோ என்று அவள் எண்ணியிருக்கலாம்; நாள் ஆக ஆக எப்பேர்ப்பட்ட துஷ்டனுக்கும் மனசு இளகத்தான் இளகும்! — நான் போக மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தேன். உடனே ஒரு வேலைக்காரன் வந்து என்னைக் கழுத்தைப் பிடித்து நெட்டித்தள்ளினுன் வெளியே!

நான் அழுதுகொண்டே என் தாயாரிடம் போய், நடந் ததையெல்லாம் சொன்னேன். 'ஐயோ பாவம்' என்று ஆறுதல் சொல்வதற்குப் பதிலாக என் தாயார் என்ன செய் தாள் தெரியுமா? ஆத்திரம் தாளாமல் என் தலையில் மொத்து மொத்து என்று அடித்துவிட்டுத் துடையிலும் சூடுபோட்டு விட்டாள். அன்பு முறிந்து, அதோடு அவமானமும் திகிலும் வேறு சேர்ந்தால் கேட்பானேன்? அந்த வைப்பாட்டி

வீட்டுக்குப் போய் என் கௌரவத்தைக் குறைத்துக்கொண்டு விட்டேனல்லவா?

அதனால் என் தாயாருக்கு ஒரே ஆத்திரம் என்மேல். அடிக்கடி அங்கே போய்க்கொண்டிருந்தால் பின்னால் என்னைக் கெடுத்துவிடுவார்களோ, தன்னை விட்டுப் பிரிந்துவிடுவேனோ என்ற திகில் வேறே. அவள் ஒரு கரண்டியை எடுத்துப் பழுக்கக் காய்ச்சித் துடையில் சூடு போட்டுவிட்டாள்! மேல் சதை கொப்புளித்துவிட்டது; வலி தாளாமல் அலறித் துடித்தேன்; சட்டென்று அவள் மனசு இளகிவிட்டது. தன்னைத் தானே, "அடி பாவி ராக்ஷஸி!" என்று திட்டிக் கொண்டே, தன்மேலும் மூன்று தடவை சூடு போட்டுக் கொண்டாள். ஆனால் அழவே இல்லை; அப்போதுதான் அவளுக்கு நிம்மதியாக இருந்தது. அவள் ரொம்ப ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டு வரவே என் புண் சில நாட்களில் நன்றாக ஆறிவிட்டது. அந்தப் பயங்கரத்தை நினைவூட்ட அதன் வடுமட்டும் அப்படியே இருந்தது. தன்னுடைய புண்ணை அவள் சட்டை செய்யவே இல்லை; அதுவும் தானாகவே ஆறிவிட்டது. அதிலிருந்து நான் அந்த வைப்பாட்டி வீட்டுக்குப் போவதில்லை. பத்தாவது வயசில் என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். இதற்குள் முக்கால்வாசிச் சொத்தையும் என் தகப்பனார் வைப்பாட்டிக்குக் கொடுத்தே தொலைத்துவிட்டார். 'எப்படியடா இவனைப் படிக்கவைப்பது?' என்று என் தாயார் தவித்தாள். ஆனாலும் எப்படியோ கறிகாய் பயிரிட்டு அதை விற்றுப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டி வந்தாள்; பழைய புஸ்தகங்களும் ஓட்டை உடைசல் பலகைகளும் வாங்கித் தந்தாள். அந்தப் பள்ளிக்கூடத்திலே, நான் படிக்கும் வகுப்பிலேயே, புத்தம் புதுப் புஸ்தகமும் பலகையும் வைத்துக்கொண்டு ராஜா வீட்டுப் பிள்ளைமாதிரி உடுப்புப் போட்டுக்கொண்டு வாசித்துவந்தான் அந்த வைப்பாட்டி மகன்! அவன் என்னையும், என் கந்தல் துணியையும் புஸ்தகத்தையும் அருவருப்போடு பார்த்து ஏளனம் செய்வான். ஒரு நாள் தன் புதுப் பலகையை என்னிடம் கொடுத்து, "நீ எனக்கு ஒன்று விட்ட தம்பி என்று எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. இப்படி நீ ஓட்டைப் பலகை வைத்துக்கொண்டிருந்தால் எனக்கு அவமானமாய் இருக்கிறது. இதை எடுத்துக்கொள்" என்றான். நானும் அதை வாங்கிக்கொண்டு என் தாயாரிடம் போனேன். அவளுக்கு மறுபடியும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; "எதை வேணுமானாலும் செய்! இப்படிப் பிச்சை மட்டும் எடுக்காதே! அப்படி எடுத்தாலும் மரியாதையாகத் தரும் மனுஷ்யர்களிடம் எடுத்துப் பிழை! இப்படி அசூயைப்

பட்டுக்கொண்டு எரிந்து விழுபவர்களிடம் எடுக்காதே!" என்றாள்.

அந்தப் பலகையின்மேல் எனக்கு ஆசைதான்; இருந்தாலும் வேறு விதி இல்லாமல் அதைத் திருப்பித் தரவேண்டியதாயிற்று. "ஏண்டா திருப்பிக் கொடுக்கிறாய்? எனக்குப் புதுப்பலகை இருக்கிறதடா!" என்றான். அந்தப் பையனிடம் அம்மாவைக் காட்டிக் கொடுக்க இஷ்டமில்லை எனக்கு. அதனால், "பழைய பலகையே போதும், அப்பா, எனக்கு; நல்ல வழியில் ஸம்பாதித்து வாங்கின சொத்தே எனக்குப் போதும்" என்றேன்.

கோபத்தோடு என்னைப் பார்த்து அவன், "தரித்திரம் பிடித்த கழுதை! எங்கள் சொத்து கெட்ட வழியில் சேர்த்தது என்றுதானே குத்திக் காட்டுகிறாய்?" என்று என்னைத் தாக்கினான். கால் வயிற்றுக்குக்கூட இல்லாமல் திண்டாடுகிறவனாயிற்றே நான். அவனுக்கு நான் எந்த மூலை? நிமிஷத்தில் என்னை அடக்கி அழுத்திக்கொண்டே, "இப்போது கன்னத்தில் போட்டுக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறாயா இல்லையா? பலகையையும் எடுத்துக்கொண்டு போகிறாயா இல்லையா?" என்றான்.

"ஊஹூம். செத்தாலும் சாகிறேன்; மாட்டேன்" என்றேன்.

அருவருப்போடு என்னை எட்டி ஓர் உதை கொடுத்துவிட்டு, "இன்னும் கஷ்டப்படவேண்டாமா நீ! உன்னைக் கொன்று வீணாக அந்தப் பாவத்தைக் கட்டிக்கொள்வானேன் நான்? நீ என்ன பண்ணுவாய்? உன் அம்மா சொல்லிக் கொடுத்ததை ஒப்பிக்கிறாய்! என்னிடமிருந்து பலகை வாங்கிக் கொள்ள வேண்டாம் என்று அவ்வளவு கௌரவதையாகப் பேசுகிறாளே; மறைவாக எங்களுக்குக் கறிகாய் விற்று அந்தப் பணத்தைமட்டும் வாங்கிக் கொள்ளலாமோ? அவள் கறிகாய் விற்கிறாளே; அந்தப் பெண்பிள்ளையிடமிருந்து நாங்கள்தான் வாங்குகிறோம். நேரே எங்களுக்கு விற்றால்தான் காசு நிறையக் கிடைக்கும் என்று உன் அம்மாவுக்கு நன்றாகத் தெரியும்! இப்படியாவது திருட்டுப்பேரம் பண்ணுவானேன்? சீச்சீ! சுத்த மோசம்!" என்றான். தன் தாய் சொன்னதையே அவனும் கிளிப்பிள்ளைபோல் சொல்லிக்கொண்டிருந்தான்.

எனக்கோ அவமானம் பொறுக்க முடியவில்லை; உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. சாயங்காலம் என் தாயாரிடம் போய், "அம்மா, உனக்குத் தெரிந்துதான் நம் கறிகாய்க்காரி

அந்த வைப்பாட்டிக்கு விற்கிருளாமே? வாஸ்தவமா?" என்று கேட்டேன்.

"ஆமாம். அதற்கு என்ன வந்தது இப்போது?" என்ருள் என் தாயார்.

நான் நடந்த விஷயத்தை அவளிடம் கூறினேன்.

"கண்ணே! அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? கறிகாய் விற்காமல் சும்மா இருந்தால் பள்ளிக்கூடத்துக்குப் பணம் கட்ட முடியுமா? கௌரவத்தையும் பெருமையையும்விட உன் படிப்புத்தான் இப்போது முக்கியம்!" என்ருள் அவள்.

"அம்மா! அப்படியானுல் பலகையை வாங்கிக்கொண்டால்தான் என்ன முழுகிப் போய்விட்டது?" என்று கேட்டேன்.

"தூ! அது அவள் எறிந்த பிச்சை! இது அப்படி அல்ல; நாம் சிரமப்பட்டுப் பயிரிட்ட கறிகாய்க்குப் பதிலாகக் கிடைப்பது. கறிகாய்க்காரி யாருக்கு வேணுமோ விற்றுக் கொண்டு போகிருள்; நமக்கென்ன வந்தது?" என்ருள்.

அவள் சொன்ன சமாதானம் சரி என்று படவில்லை எனக்கு. ஆனுலும் கம்மென்று இருந்துவிட்டேன். கொஞ்ச நாள் கழித்து அந்தக் கறிகாய்க்காரி என் தாயாரிடம் வந்து, "தனக்கு நீ வேலைக்காரி; தன் சொத்தைத்தான் நீ தின்கிருய் என்று அவள் சொல்கிருளே, அம்மா" என்ருள்.

என் தாயாருக்குத் துக்கம் துக்கமாக வந்தது; அவள் தன் முகத்தை மூடிக்கொண்டு, "அவள் பண்ணுவதையெல்லாம் என் குழந்தைக்காகச் சகித்துக்கொண்டு போகிறேன், தெரியுமா?" என்ருள்.

ஒரு மாசம் ஆயிற்று; அந்த வைப்பாட்டி கறிகாய் வாங்குவதை நிறுத்திவிடவே, கறிகாய்க்காரி குறைந்த விலைக்குத்தான் எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்லிவிட்டாள்.

என் தாயார் ஒரு காரியம் செய்தாள்; நேராக அந்த வைப்பாட்டி வீட்டுக்குப் போனுள். அப்பாவைக் கூப்பிட்டு, "உன் பிள்ளைக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டப் பணம் இல்லை. நீதான் கொடுத்தாகவேண்டும்" என்ருள்.

"போடி! போடி! நீயுமாயிற்று உன் பிள்ளையுமாயிற்று! எக்கேடு வேண்டுமானுலும் கெட்டுப் போங்களேன்? எனக்கென்ன வந்தது?" என்ருர் அவர்.

"எனக்கு வேலை செய்யேனடி; நான் உன் பிள்ளைக்குச் சம்பளம் கட்டுகிறேன்" என்று ஆரம்பித்தாள் அவருடைய வைப்பாட்டி. ஆனால் என் தாயார் அவளைப் பார்த்த பார்வையில் அவள் திமிரெல்லாம் அடங்கிவிட்டது; கம்பீரமாக, "மேலே இருக்கிறான் ஒருத்தன்; அவன் உனக்குக் கூலிகொடுப்பானடி! அடி பேயே! என்றைக்கு இருந்தாலும் நியாயம் வெல்லும்!" என்றாள் என் தாயார்.

வைப்பாட்டி அவளைப் பார்த்து நகைத்து, "நியாய அநியாயம் உனக்கு; எனக்கென்னடி வந்தது, அதைப்பற்றி யெல்லாம்? ஏண்டி! உத்தமபத்தினியாய் இருந்து என்ன வாரிக் கொண்டுவிட்டாய்? என்னைப் பார். கெட்டுப்போனவள்தான்; இருந்தாலும் பணத்திலேயே மிதக்கிறேனே! தரித்திரம் பிடுங்கித் தின்று உன் அழகெல்லாம் என்றைக்கோ நாலாசீலை யாகப் போய்விட்டதேடி! நெற்றியைப் பார்: எத்தனை கோடு! என் நெற்றி பட்டுப்போல் இருக்கிறது பார். அழகு, ஆரோக் கியம், ஐசுவரியம், அன்பு, ஓய்வு எல்லாம் இருக்கும்போது எனக்கு என்ன குறை?" என்றாள்.

"இதற்கெல்லாம் சேர்ந்து நரகத்தில் அவதிப்படப் போகிறாய் நீ!" என்றாள் என் தாயார்.

"இருக்கட்டுமே! நரகத்தில் அவதிப்பட்டுக்கொண்டு தான் போகிறேன். ஆயிரம் வருஷமானாலும் இருக்கத் தயார். இந்த ஒருநாள் இன்பம் வருமாடி?" என்றாள் வைப்பாட்டி.

சூடோ சொரணையோ இல்லாத இந்தப் பேமானியோடு வீணாக வாய் கொடுப்பானேன் என்று என் தாயார் உடனே வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

என் பள்ளிக்கூடச் சம்பளத்தை எப்படியடா கட்டுவது என்று இப்போது பெருத்த சங்கடமாய்ப் போய்விட்டது. 'என் தகப்பனார் என்னைக் காப்பாற்ற யோக்கியதை யற்றவர், பிதிரார்ஜித சொத்தை வீண் விரயம் செய்கிறார்!' என்று என் சார்பாக அவர்மேல் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தாள் என் தாய். வழக்கு நடந்துகொண்டிருக்கும்போது அவளுக்கு நிம்மதியே இல்லை. புருஷன்மேல் அவ்வளவு அன்பு வைத்தி ருந்தாள். என்னைச் சூடினபோது எவ்வளவு வருத்தப் பட்டாளோ அவ்வளவு வருத்தப்பட்டாள் இப்போதும்! "பிள்ளை, அப்பா இரண்டு பேர்மேலும் ஆசைதான்; என்ன பண்ணுவது? ஏதாவது ஒன்றை விட்டுக் கொடுக்கவேண்டி யதுதான். விதையைக் காப்பாற்ற வேண்டுமானால் பழத்தை விண்டுதானே ஆகவேண்டும்?" என்று அண்டை வீட்டுக்

காரியிடம் சொல்லிக்கொண்டாள். இதோடு நின்றதா? வழக்காடப் பணம் வேண்டியிருந்தது. வக்கீல் 'பீஸ்' ஜாஸ்தியாக இருந்தது. ஆனுல் அவர்களுக்குள் போட்டி பலமாய் இருக்கவே ஒரு நல்ல வக்கீல் கிடைத்தார். வழக்கை ஜயித்துக் கொடுத்தவுடன் அவருக்குப் 'பீஸ்' தருவதாக ஏற்பாடு. ஆனுல் 'ஸ்டாம்பு பீஸு'க்குப் பணம் வேண்டுமே! என்ன செய்வது? கோர்ட்டார் இதைப் 'பாப்பர் ஸூட்' டாகக் கொள்ள முடியாது என்று ஏற்க மறுத்துவிடவே அதிக வட்டிக்குக் கடன் வாங்கவேண்டியதாயிற்று. கடைசியாக, சாக்ஷிகளைப்பற்றிக் கவனிக்கவேண்டியதும் அவசியமாய் இருந்தது. என் தகப்பனுர், பெண்டாட்டி பிள்ளையைக் கவனிக்காமல் வைப்பாட்டி வீட்டிலேயே எங்கள் பணத்தை யெல்லாம் கரைத்துக்கொண்டு காலங் கழிக்கிருர் என்பது ஊர் அறிந்த விஷயந்தான். இருந்தாலும் நம்முடைய நீதி முறைப்படி, கோர்ட்டில் சாக்ஷியம் சொல்லும் விதத்தில்தான் வழக்கு ஜயிப்பதும் தோற்பதும் இருக்கிறது. என் தகப்பனுர் எழுதிக்கொடுத்த மனுவில், தாம் யாரையும் வைத்துக்கொண்டிருக்கவில்லையென்றும் யார் வீட்டிலும் வசிக்கவில்லையென்றும் ஒரேயடியாக மறுத்திருந்தார். நான், என் தாயார் எங்கள் இரண்டு பேர் சாக்ஷியமும் கோர்ட்டில் செல்லாது என்று எங்கள் வக்கீல் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டார். செல்வாக்கு இருந்தாலாவது பரவாயில்லை; அதுவும் இல்லை; எங்களைப் போல் இப்படிப்பட்ட பரம ஏழைகளுக்கு யார் ஒத்தாசை புரிய முன்வருவார்கள்? ஏதோ சில சாக்ஷிக்காரர்களைப் பிடித்துத் தலைக்கு இவ்வளவு என்று கொடுக்கவேண்டியிருந்தது; இதைத் தவிர அவர்கள் வழிச் செலவுக்கும் அபரிமிதமான சாப்பாட்டுச் செலவுக்கும் கொடுத்தாகவேண்டும்! வீட்டில் பழஞ்சோறு தின்பவர்களெல்லாங்கூட, "நாசூக்கான சாப்பாடு போட்டால்தான் வருவோம். இல்லாவிட்டால் எதிர்க் கக்ஷியில் சேர்ந்துவிடுவோம்" என்ருர்கள். விதியே என்று நாங்கள் அவர்களுக்கு அடங்கிப் போகவேண்டியதாயிற்று. என் தகப்பனுர் பக்கம் சாக்ஷி சொல்ல முன்வந்தவர்களும் இதே ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான். இருதரத்துச் சாக்ஷிக்காரர்களுக்கும் நாசூக்கான திண்டிமேல் கண்; பணம் பறிப்பதிலும் ஒருவர்க்கொருவர் பின்வாங்கவில்லை. எங்கள் கஷ்டகாலம், வழக்கு வருஷக்கணக்காக இழுத்துப் பறித்துக்கொண்டிருந்தது. மூச்சுக்கு முப்பது தடவை வழக்கை ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தார்கள், தாராளமாக. ஒரு வாய்தாவின்போது, சில முக்கியமான சாக்ஷிகளை அழைத்திருக்க மாட்டார்கள். மறு வாய்தாவில் அவசியமான

தஸ்தாவேஜு ஏதாவது வேண்டியிருக்கும். மூன்ருவது வாய்தாவின்போது வக்கீல்கள் தயாராய் இருக்கமாட்டார்கள். நாலாந்தடவை ஒரு வக்கீலுக்கு ஜுரம் கண்டுவிடும். ஐந்தாம் கெடுவின்போது மற்ருெரு வக்கீலுக்கு ஹைக்கோர்ட்டில் அவசர அலுவல் ஏதாவது இருக்கும். ஆருவது வாய்தாவின் போது 'ராஜியாகப் போய்விடலாமே' என்ற பேச்சுக் கிளம்பும். ஏழாந் தடவை கோர்ட்டாருக்கு வழக்கு எடுத்துக் கொள்ளச் சௌகரியப்படாது. இப்படியே போய்க்கொண் டிருக்கும். நாங்கள் சாக்ஷிக்காரர்களுக்குத் தகுந்தாற்போல் போகவேண்டியிருந்தது; வழிச் செலவும் திண்டிச் செலவும் ஏராளமாகப் பிடித்தன. "இப்படி ஏன் தவக்கப்படுகிறது?" என்று என் தாயார் ஒருநாள் கேட்டாள்.

சாக்ஷிக்காரர்களுள் ஒருவன், "இந்த ஒரே வழக்குத்தான் உனக்கு; அதனுல் நீ இப்படி அவசரப்படுகிருய்? கோர்ட் டாருக்கு எத்தனையோ வழக்கு வியாஜ்யங்கள்; அவர்களால் மெதுவாகத்தானே போக முடியும். நியாயமாகப் பார்த்தால் நாங்கள்தான் முணுமுணுக்க வேண்டும். இந்த வியாஜ்யத்தால் உன்னைப்போல் எங்களுக்கு ஏதாவது பலன் உண்டா? ஆனுலும் நம் கடமை ஒன்று இருக்கிறதே என்று நாங்கள் உன் பக்கமாகவே இருந்துவருகிருேம். இது இன்னும் ஏழு வருஷம் நீடித்தாலும் ஜயித்துக் கொடுத்துவிட்டே போக வேண்டும் என்று இருக்கிருேம்" என்ருன்.

என் தாயார் விஷயம் அறிந்தவளாதலால் பதில் ஒன்றும் சொல்லாமல் சற்றே சிரித்தாள். எனக்கு அவ்வளவு தெரியாது. நான், "உங்களுக்கென்ன? வியாஜ்யம் நடந்து கொண்டிருக்கிறவரை பேஷான சாப்பாடு கிடைத்துவிடு கிறது; சீக்கிரம் முடிய வேண்டுமென்று உங்களுக்கு ஏன் கவலை!" என்று உளறி வைத்தேன். என் தாயார் என்னைப் பார்த்த பார்வை அப்படியே நடுங்கிப்போய்விட்டேன்! ஆனுல், சாக்ஷிக்காரர்கள்மட்டும் சிரிக்கத்தான் சிரித்தார்கள். அவர்களுள் பெரிய ஆள் – தாடி நரைத்த கிழவன் – அவன் என்னைச் சற்றுத் தயையோடு நோக்கி, "கெட்டிக்காரப் பையனுய் இருக்கிருயே! பரவாயில்லை; நன்ருய்ப் பிழைப்பாய்" என்ருன். மற்றவர்களும், "வாஸ்தவந்தான்" என்று ஸந்தோ ஷப்பட்டார்கள். இருதரத்துச் சாக்ஷிக்காரர்களும் குறுக்கு விசாரணையின்போது சரியாக நடந்துகொண்டார்கள். நடந்ததை அவர்கள் நேரில் பார்த்திராவிட்டாலும் தங்களை ஒன்ருகத் தயார் செய்துகொண்டுதான் போனுர்கள். குறுக்கு விசாரணையின்போது சிறிதுகூடத் தயங்காமல் கல் மாதிரி

ஒரே நிலையாக இருந்தார்கள். என் தாயாரும் நானும் அப்படி இருக்க முடியவில்லை. நாங்கள் சொல்வது உண்மையாக இருந்தாலும், குயுக்தியாகக் குறுக்குக் கேள்விகள் போடும் போது எங்களால் சமாளிக்க முடியவில்லை; முன்னுக்குப்பின் முரணாகச் சொல்லி எத்தனையோ தடவை ஸங்கடப்பட்டோம். வைப்பாட்டி வீட்டுக்கு என் தகப்பனார் முதல் முதல் போன அன்று ராத்திரி நிலா காய்ந்துகொண்டிருந்ததா, இருட்டாய் இருந்ததா? என்னையும் என் தாயாரையும் பார்த்து 'எக்கேடு வேணுமானாலும் கெடுங்கள்; எனக்கென்ன வந்தது?' என்று அவர் சொல்லும்போது எங்களுக்கு எந்தப் பக்கமாக உட்கார்ந்திருந்தார். அவரும், அவர் வைப்பாட்டியும் ஒன்றாய் இருக்கும்போது நாங்கள் நேரில் பார்த்ததுண்டா? என் தகப்பனருக்குச் சொந்தமான கொஞ்சம் ரொக்கத்தை என் தாயார் எடுக்கவில்லையா? அதற்காக அவளை மிரட்டினதால்தானே இரண்டு பேருக்கும் மனஸ்தாபம் மூண்டு இந்த வியாஜ்யம் தொடுத்தாள்? நான் என் தகப்பனருடைய வெள்ளிக் கோப்பை ஒன்றைத் திருடி அண்டை வீட்டுக்காரருக்கு விற்று விடவில்லையா?—இந்த மாதிரி கேள்விகள் தான் கேட்டார்கள். நாங்கள் பரபரப்போடு அதை மறுக்க, கோர்ட்டார், "ஆத்திரப் படாதீர்கள்! ஆத்திரப்படாதீர்கள்" என்றார்கள். மூன்று வருஷம் நீடித்தது வழக்கு. கடைசியாகக் கோர்ட்டார், வீடும் வீட்டைச் சுற்றியுள்ள மனையும் பாத்திரங்களும் எங்களைச் சேரவேண்டியவை என்று தீர்ப்பளித்தார்கள். நாங்கள் வீட்டையும் மனையையும் ரூ. 3000-த்துக்கு விற்றோம். கோர்ட்டுச் செலவு தவிர, கடன்காரருக்கும் வக்கீல் 'பீஸு'க்கு மாகச் சேர்ந்து ரூ. 2000 ஆகியிருந்தது. அதைத் தீர்த்து விட்டுக் குடிக்கூலிக்கு வேறு வீடு பார்த்துக்கொண்டோம்.

என் தாயாருக்குக் கோர்ட்டுச் செலவு இவ்வளவு ஜாஸ்தி ஆகிவிட்டதே என்று ரொம்ப வருத்தம். ஆனாலும் அவளுக்கு ஒரு திருப்தி: அந்த வைப்பாட்டியும் வீடு தனக்கு வரும் என்று மனக்கோட்டை கட்டி அதே அளவுக்குப் பணம் செலவழித் திருந்தாள்! குதூகலத்தோடு, "கெட்ட வழியில் அவள் சம்பா தித்த சொத்து முக்கால்வாசியையும் தொலைத்துவிட்டாள்! இனிமேல், உன் அப்பாவினால் ஒன்றும் அவளுக்குக் கொடுக்க முடியாது; சீக்கிரத்திலேயே அவர்மேல் வெறுப்புத் தட்டி, விடுகிறது பார். இன்னும் ஒரு மாசத்தில் அவருக்குக் 'கல்தா' கொடுத்துவிடுவாள்; அப்புறம் நாம் அவரைச் சரிப்படுத்தி விடலாம்" என்றாள் என் தாய். அது அப்படியே பலித்தது. அப்படிச் சொல்லி ஒரு வாரங்கூட ஆகவில்லை; ஒரு நாள் என் தகப்பனார் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஹோட்டலின் முதலாளி

அவர் தரவேண்டிய பாக்கியைக் கேட்டான். அவர் கையிலே பணம் இல்லை. தம் வைப்பாட்டியைக் கொடுக்கச்சொல்லி, "பின்னால் எப்போதாவது நல்ல காலம் வராது போகாது. வட்டியும் முதலுமாகத் தீர்த்து விடுகிறேன் அப்போது" என்று கேட்டுக்கொண்டார். அவளும் அவள் பிள்ளைகளும், தமையனுந்தான் ஏராளமாக வாங்கிச் சாப்பிட்டவர்கள். ஆனாலும் அவள் தம்பிடிகூடக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டாள்!

"நல்ல காலம் வரப்போகிறதோ உனக்கு? எப்போது வரப்போகிறதாம்? ஒன்றுக்கும் லாயக்கில்லாத தடியன் நீ! நீயா திரும்பித் தரப்போகிறவன். உன் இழவெடுத்த பெண்சாதி கொண்டுவந்த வியாஜ்யத்தில், உன்னை நம்பி நான் நாசமானது போதும்! இன்னுங்கூட இங்கே குந்திக்கொண்டு, இருக்கிறதையும் தின்னப் பார்க்கிறாயா? இப்போதே போய்விடு, வெளியிலே!" என்று திட்டினாள்.

தம் கண்ணையும் காதையுமே அவரால் நம்ப முடியவில்லை. "இத்தனை நாள் நான் உனக்காக என் சொத்தையெல்லாம் தொலைத்தது, இந்த வார்த்தையைக் கேட்டுக்கொள்வதற்குத்தானா?" என்றார்.

"உன் சொத்து என்ன போயிற்று? என் சொத்து, சுதந்திரம் எல்லாந்தான் போயிற்று! உன் காமத்தைத் தணித்துக் கொள்ள என்னைப் பாழாக்கி, ஐந்து சனியன்களை வேறே கொடுத்துவிட்டாய்! என் பெயரையும் கெடுத்துவிட்டாய்; என் பணத்தையும் சாப்பிட்டு வீட்டையும் குட்டிச்சுவர் பண்ணியாயிற்று! போகிறாயா, இல்லையா வெளியே!" என்று திட்டினாள்.

என் தகப்பனார் அப்படியே ஸ்தம்பித்து நின்றிருந்தார். இது கனவா நனவா என்று அவருக்கே புரியவில்லை. அப்போது ஹோட்டல்காரன் நகைத்துக்கொண்டே, "சரிதான், ஐயா! நாழியாகிறது எனக்கு. கொடும், ஐயா. நான் போகவேண்டும்" என்று உரக்கக் கேட்கவே அந்தப் பிரமை நீங்கியது, அவருக்கு.

"நன்றிகெட்ட முண்டை! உன் சொரூபத்தைக் காட்டிவிட்டாயேடி! நீ இப்பேர்ப்பட்ட விஷப்பாம்பு என்று எனக்கு அப்போதே தெரியாது போயிற்றே!" என்று அவளைத் திட்டினார்.

"இப்போதாவது தெரிந்துகொண்டாயா? சீக்கிரம் வீட்டைவிட்டுக் கிளம்பு" என்றாள் அவள்.

அவர், "இதோ போய்விட்டேன்" என்று வாயிலண்டை வந்தார்.

"உன் பீடைகளையும் உன்னோடு இட்டுக்கொண்டு போய் விடு!" என்று கூவிக்கொண்டே அந்த ஐந்து பிள்ளைகளையும் அவர் பின்னால் துரத்திவிட்டாள்.

"இவர்களை வைத்துக்கொண்டு நான் என்ன பண்ணுவது? எப்படிச் சோறு போடுவேன்?" என்று கதறினார் அவர்.

"உனக்குத் தெரியாததா? என்னை ஏன் கேட்கிறாய்? நீ வட்டியும் முதலுமாக அதை அடைக்கிற வரைக்கும், ஹோட்டல்காரன் சோறு போடட்டுமே அவர்களுக்கு. யார் வேண்டாம் என்றார்கள்?" என்றாள்.

"நானா! இந்தப் பிச்சைக்காரப் பயலுக்கு இனிமேல் ஒரு கவளம் போடுவேனா?" என்று சீறினான் ஹோட்டல்காரன்.

அந்தக் குழந்தைகளுக்கு ஒன்றுமே புரியவில்லை; அவர்கள் திகைத்துப்போய்த் தாயாரைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு, "அம்மாடி! எங்களைத் துரத்தாதேயேன்!" என்று கெஞ்சினார்கள்.

"போங்களடா, உங்கள் அப்பனோடு. அவன்தானேடா வயிற்றிலே கொடுத்தான்? திரும்பி அவனிடமே போங்கள்! இனிமேல் உங்களுக்குச் சோறு போட்டுக் காப்பாற்ற என்னால் ஆகாது! நான்தான் கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போய்விட்டேனே! மறுபடியும் என் தொழிலை ஆரம்பித்தால்தான் நான் உருப்படுவேன்; உங்கள் ஐந்து பேரையும் வைத்துக்கொண்டு நான் எப்படி மாரடிப்பது? எங்கள் குலத்துக்கே நீங்கள் கோடரிக் காம்புகளாயிற்றே!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

அவளும் அவள் தமையனும் ஆளுக்கு ஒரு கழியை எடுத்துக்கொண்டு அந்தப் பிள்ளைகளை அவர்கள் தகப்பனார் பின்னால் விரட்டி அடித்தார்கள்.

"தனியாக இருக்கும்போதே பிழைக்கத் தெரியவில்லையே! இவர்களையும் வைத்துக்கொண்டு எப்படியடா கரையேறுவேன்? ஒரேயடியாக முழுகவேண்டியதுதான்" என்று ஏங்கினார் என் தகப்பனார்.

"நீ முழுகினால்தான் என்ன? எக்கேடு கெட்டால்தான் எனக்கு என்ன? நீயும் வேண்டாம்; உன் பீடைகளும் வேண்டாம் எனக்கு! தொலை! நீ எந்த அவ வேளையில் என்

வீட்டிலே கால் வைத்தாயோ? கடன்காரர், பின்னால் விரட்டட்டுமே; எனக்கென்ன? ஒழிந்து போனாயோ இல்லையோ, அந்தப் பீடைகளோடு? நிம்மதி!" என்று சொல்லி வாயிற் கதவைத் தாழிட்டுவிட்டாள் வைப்பாட்டி.

தமக்குப் பின்னாலே வரும் பிள்ளைகளையும் கடன்கார ஹோட்டல் முதலாளியையும் விட்டுவிட்டு நழுவலாம் என்று தான் பார்த்தார் என் தகப்பனார். ஆனால் அவர்கள் இவரைத் துரத்திக்கொண்டே இவரண்டை வந்துவிட்டார்கள். வைப்பாட்டி வீட்டிலேயே இருந்து இருந்து பழகிப் போய்விடவே இப்போது வேகமாக நடக்க முடியவில்லை என் தந்தையால்.

"நான் தற்கொலை பண்ணிக்கொண்டுவிடப் போகிறேன்" என்று கத்தினார்.

ஹோட்டல்காரன் இரைக்க இரைக்க, "என் பாக்கியை தீர்த்தால்தான் விடுவேன்" என்றான்.

"என்னை யார், ஐயா தடுப்பது?" என்றார் என் தகப்பனார்.

"சட்டம் இருக்கிறதே; ஐயா, நானும் தடுப்பேனே" என்றான் ஹோட்டல்காரன்.

"தற்கொலை பண்ணிக்கொண்ட பிற்பாடு எப்படி ஐயா தண்டிக்க முடியும்?" என்றார் என் தகப்பனார்.

"பண்ணிக்கொண்டு விட்டால் முடியாதே யொழியப் பண்ணிக்கொள்ளும்போதே நிறுத்த முடியுமோ இல்லையோ! நீ தற்கொலை பண்ணிக்கொள்ள முயன்றாலும் அது முடியாதபடி நான் பார்த்துக்கொள்கிறேன்; சட்டப்படி உன்னைத் தண்டிக்கவும் முடிகிறது பார். என் பாக்கியைத் தீர்த்துவிடு; அப்புறம் நீ எக்கேடு கெட்டாலும் எனக்குக் கவலை இல்லை" என்றான் ஹோட்டல்காரன்.

"உன் பாக்கியைத் தீர்த்துவிட்டால் அப்புறம் நான் ஏன் தற்கொலை பண்ணிக்கொள்ளவேண்டும்?" என்று கேட்டார் என் தகப்பனார்.

"அப்படியானால், என் கையில் அகப்படாமல் இருக்க வேண்டுமென்றுதானே தற்கொலை பண்ணிக்கொள்ளப் பார்க்கிறாய்? சரி, நான் உன்னை விடப் போகிறதில்லை பார்" என்றான் ஹோட்டல்காரன்.

"ஹோட்டலைக் கவனிக்க ஆள் வேணுமே!" என்று கேட்டார் என் தகப்பனார்.

"உனக்கென்ன அதைப்பற்றி? எனக்கு வேண்டிய மனுஷ்யர்கள் இருக்கிறார்கள்" என்றான் ஹோட்டல்காரன்.

"தனியாக இருக்கும்போதே எனக்கு என்ன பண்ணுவதென்று புரியவில்லை. நீங்கள் ஆறுபேரும் வேறே என்னைத் துரத்திக்கொண்டு வந்தால் நான் என்ன செய்வேன்?" என்றார் என் தகப்பனார்.

"சரி. உன் பெண்டாட்டியிடம் போகலாம், வா. அவள் நல்லவள்; உன்னை வீட்டிலே வைத்துக்கொண்டு பாக்கியையும் தரலாம் என்றுதான் நினைக்கிறேன்" என்றான் ஹோட்டல் காரன்.

"அப்படிச் செய்வாளா? எனக்கு எதிராக வியாஜ்யம் தொடுத்தவளா என்னை வீட்டிலே வரவிட்டுப் பாக்கியைத் தீர்ப்பாள்?" என்றார் என் தகப்பனார்.

"போய்த்தான் பார்க்கலாமே; என்ன முழுகிப்போயிற்று! எனக்கென்னவோ அவள் மனசு இளகும் என்றுதான் படுகிறது" என்றான் அவன்.

"இவ்வளவு தூரத்துக்கு வந்த பிற்பாடு அவளிடம் போவதைவிடத் தற்கொலை பண்ணிக்கொண்டு சாவதேமேல்" என்றார் என் தகப்பனார்.

"அது சரி; ஆனால், இப்போது தற்கொலை பண்ணிக் கொள்வதென்னவோ ஸாத்யமில்லை. இதையுந்தான் பார்ப்போமே?" என்றான் அவன்.

"இந்தப் பயல்கள் போகிற கதி? என் பெண்டாட்டி இவர்களைப் பார்த்தால் சீறி விழுவாளே!" என்றார் என் தகப்பனார்.

"அவர்களுடைய தாயாரும் மாமனும் கழியெடுத்துத் துரத்தினாற்போல் நாமும் விரட்டி அடித்தால் தீர்ந்தது!" என்றான் அவன்.

என் தகப்பனாரும் அவனும் கைத்தடியை ஓங்கினார்கள். அந்தப் பயல்கள், "எங்கள் அம்மாதான் தடி எடுத்து எங்களைத் துரத்தினாள்; நீங்களும் இப்படி விரட்டினால் நாங்கள் என்ன செய்வோம்?" என்று கேட்டார்கள்.

"பிச்சை எடுங்கள்; இல்லாவிட்டால் தூக்குப் போட்டுக் கொண்டு சாவுங்களேன்! நீங்கள்தான் எனக்கு ஒன்றும் பாக்கி தர வேண்டியதில்லை. தாராளமாகத் தூக்குப் போட்டுக் கொண்டு செத்துப் போங்களேன்; நான் தடுக்கவேயில்லை!" என்றான் ஹோட்டல்காரன்.

என்னோடு வாசிக்கும் பையன் மற்றப் பயல்களைப் பார்த்து, "வாங்களடா! ஏன் அடிபட்டுச் சாகவேண்டும்? ஹோட்டலில் வேலைசெய்து நம் வயிற்றைக் கழுவிக்கொள்ளலாமடா! நம்மைப் பெற்றெடுத்த அம்மாவாம்! அவள் நாசமாய்ப் போக! இந்தப் படுபாவி இருக்கிறானே அப்பன்காரன், இவனும் நாசமாய்ப் போகட்டும்! வருத்தப்படாதீர்களடா. சாவு வருகிற வரைக்கும் ஏதோ உழைத்துக்கொண்டு இருக்கலாமடா" என்றான்.

"சரி. என் ஹோட்டலுக்குப் போய் இருங்கள். உங்கள் தாய் தகப்பனைப்போல் நான் அவ்வளவு மோசமானவன் அல்ல. நீங்கள் பிழைத்துப் போக வழியாவது காட்டுவேன்" என்றான் ஹோட்டல்காரன்.

"உனக்கு உழைக்கவேண்டும் என்கிறாய்! எங்கள் தலையைத் தடவி வேலை வாங்கப் போகிறாய்! அதுதானே? இருந்தாலும் வேறு வழி இல்லையே! இத்தனை நாள் கவலை இல்லாமல் வாழ்ந்தோம்! இனிமேல் பள்ளிக்கூடம், புஸ்தகம், விளையாட்டு எல்லாவற்றுக்கும் ஒரு முழுக்குப் போடவேண்டியதுதான்! சரி ஐயா, உன் ஹோட்டலில் காத்துக்கொண்டிருக்கிறோம். சீக்கிரம் வா" என்றான் அந்தப் பையன்.

என் தகப்பனாரும் ஹோட்டல்காரனும் அப்புறம் எங்கள் வீட்டுக்குப் புறப்பட்டு வந்தார்கள். என் தாயாரும் நானும் உள்ளே இருந்தோம். நான் அப்போதுதான் சாப்பிட உட்கார்ந்தேன். எங்கள் வாயிற் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.

"எண்ணெய்க்காரனாக இருப்பான்" என்றாள் என் தாயார்.

நான் கதவைத் திறக்க ஓடினேன். திறந்ததும் அங்கே என் தகப்பனாரும் ஹோட்டல்காரனும் நின்றிருப்பதைக் கண்டேன். எனக்கு ஆச்சரியமாய் இருந்தது; வெட்கமாகவும் இருந்தது. என் தாயார் என் பின்னாலேயே எண்ணெய் ஜாடியும் துட்டும் எடுத்துவந்தாள். இந்தமாதிரி எதிர்பாராமல் அவர் வரவே அவளுக்கும் தூக்கிவாரித்தான் போட்டது. என் தகப்பனார், "திரும்பி வந்தேன்; இதோ" என்றார்.

"வாஸ்தவமாகத்தானா?" என்று கேட்டாள் என் தாயார்.

"போனதையெல்லாம் மறந்து மன்னித்து உள்ளே வா என்று ஒரு வார்த்தை சொல்; போதும். அந்தப் படுபாவி முண்டை என்னைத் துரத்திவிட்டாள்" என்றார் அவர்.

"போனதையெல்லாம் மறந்துவிடுவதென்றால் முடிகிற காரியமா?" என்றாள் என் தாயார்.

"புருஷரை உள்ளே அழைத்துக்கொண்டு போங்களேன், அம்மா" என்றான் ஹோட்டல்காரன்.

"யார் ஐயா, நீர்? அவரோடு நீர் வந்த காரணம் என்ன?" என்று என் தாயார் வெடுவெடுப்புடன் கேட்டாள்.

"உம். அவர் எனக்குக் கொஞ்சம் பாக்கி — உம் — முப்பது ரூபாய் இரண்டணா ஒரு தம்பிடி — தரவேண்டும். அவர் நீங்கள் கொடுப்பீர்கள் என்றார் - உம்" என்று ஹோட்டல்காரன் இழுத்து இழுத்துப் பேசினான்.

"ஓஹோ! தெரிந்தது. அப்படியானால், போய் வரலாம். இங்கே என்னிடத்திலிருந்து ஒன்றும் பெயராது" என்றாள் என் தாயார்.

"என்ன! அவர் தின்ற பாக்கியைக் கொடுக்கமுடியாது என்று சொல்கிறீர்கள்?" என்றான் ஹோட்டல்காரன்.

"அவர் மட்டுமா அவ்வளவும் சாப்பிட்டுவிட்டார்? அவர் வைப்பாட்டியும் அவள் பிள்ளைகளும் தமையனும் சேர்ந்து தானே சாப்பிட்டார்கள்?" என்றாள் என் தாயார்.

"அவர்தானே அனுப்பச் சொன்னார்? அவரே கொடுக்கட்டும்" என்றான் ஹோட்டல்காரன்.

"எனக்கு ஓர் ஆக்ஷேபமும் இல்லை; கொடுக்கட்டுமே! நீங்கள் அவர்மேலே வழக்குத் தொடுத்துக்கொள்ளுங்களேன் தாராளமாக" என்றாள் என் தாய்.

"கடன்கார ஜெயிலில் போட்டுவிடும்படி பண்ணுவேன்" என்றான் ஹோட்டல்காரன்.

"சரி; செய்யுமே! மாசம் எட்டு ரூபாய் அழுமே, கோர்ட்டுக்கு அழுவது போதாதென்று! அப்படியாவது ஒருவிதமாகத் தீரட்டுமே, அவரைப் பற்றின கவலை! ரொம்ப நல்லதாய்ப் போயிற்று!" என்றாள் என் தாயார்.

"உங்கள் புருஷர் உங்களைவிட்டுப் போய்விடுகிறாரே!" என்றான் ஹோட்டல்காரன்.

"அவர் போய்த்தான் எத்தனையோ நாளாயிற்றே!" என்றாள் என் தாய்.

"போதுமே! இனிமேலும் வேறு இவனுக்காகப் பணம் செலவு பண்ணவேண்டுமா? பாதியாவது கொடுத்துவிடுங்களேன். நான் திருப்தியோடு போய்விடுகிறேன்" என்றான் ஹோட்டல்காரன்.

"தம்பிடிகூடத் தரமாட்டேன்" என்றாள் என் தாயார்.

"கால் பாகமாவது கொடுங்களேன்" என்று அழமாட்டாக் குறையாகக் கேட்டான் அவன்.

"தம்பிடிகூட முடியாது" என்றாள் என் தாயார்.

"அரைக்காலாவது - அவர்கள் எட்டுப்பேரில் அவர் சாப்பிட்ட அளவுக்குத்தான் கேட்கிறேன் - கொடுங்களேன். நீங்களேகூடச் சொன்னீர்களே, கூட ஏழுபேர் தின்றார்களே என்று?"

"தம்பிடிகூட முடியாது. அப்போது என் புருஷன் என்று சொல்லிக்கொண்டா சாப்பிட்டார்? வைப்பாட்டியை வைத்துக்கொண்டுதானே தின்றார்?"

"நான் சுத்த மடையன்! அந்தப் பசங்களைத் துரத்தியடிக்க நான் ஒத்தாசைதான் பண்ணியிருப்பானேன்! இந்தப் படுபாவியைத்தான் தடுத்திருப்பானேன், தற்கொலை பண்ணிக்கொள்ள வொட்டாமல்? ஐயோ! இந்தப் பிடாரி கொடுப்பாள் என்று நம்பிக்கொண்டுதானே இவ்வளவும் செய்தேன்!— பகவானே! இவர்கள் தலையில் இடி விழாதா?" என்று சபித்தான் ஹோட்டல்காரன்.

"பகவானை ஏன் அழைக்கிறாய்? நீ சொன்னதை அப்படியே கையைக் கட்டிக்கொண்டு செய்யக் காத்திருக்கிறார் என்று எண்ணமா?" என்று என் தாயார் சொன்னதும் அவன் திட்டிக் காரித் துப்பிக்கொண்டே போய்விட்டான்.

"நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டார் என் தகப்பனார்.

"இனிமேல் எவள் வீட்டுக்கும் போகமாட்டேன் என்று ஸத்யம் பண்ணினால்தான் விடுவேன்" என்றாள் என் தாயார்.

அவரும், "இனிமேல் போகமாட்டேன்" என்று ஸத்யம் செய்து கொடுத்தார், தண்டனையடைந்த குற்றவாளிபோல். தன்னை வைப்பாட்டி படுத்திவைத்ததை யெல்லாம் என் தாயாரிடம் சொல்லி ஆற்றிக்கொள்ளப் பார்த்தார்; ஆனால் அவள் பாதியிலேயே, "போதும்! போதும்! உங்களைவிட அவள் எவ்வளவோ மேல்! கட்டின பெண்டாட்டியை நீங்கள் தவிக்க விட்டமாதிரி புருஷனைத் திண்டாட விடவில்லையே அவள்!" என்று தடுத்துவிட்டாள்.

இப்படி, அவரைச் சட்டை செய்யாமல் இருக்கவே, பாவம், நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டே வந்தார். என் தாயாருக்கு அவரிடமிருந்த அன்பெல்லாம் மாறி ஸதா குத்திக்

காட்டிக்கொண்டே இருந்தாள். குடும்பத்தில் அவர் ஒருவர் இருப்பதாகக்கூடத் தெரியவில்லை. கயிற்றைப் பிடித்துக் கட்டி ஒரு மரத் திம்மையை அண்டை கொடுத்து நிறுத்திவைத்த மாதிரி பேருக்கு மனுஷ்யனாய் உலாவினார். முன்னே இருவருக்கும் இருந்த பற்று முறிந்துவிட்டது. அவர் சில சமயம் என்னோடு கொஞ்சி விளையாடுவார். என் தாயார் உடனே வந்து, "போதும்! தேவடியாள் வீட்டுக்குப் போகப் பழக்க வேண்டாம்! அவனாவது நல்லவனாய் முன்னுக்கு வரட்டும்" என்று வெடுக்கென்று சொல்வாள்.

என் தகப்பனார் அவளுக்கு எதிராகப் பேசுவதே இல்லை. தன் வினை தன்னைச் சுட மௌனமாக எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார். போதாக் குறைக்கு, அவர் வெளியில் காலெடுத்துவைத்தால் அவருடைய வைப்பாட்டி பிள்ளைகள் ஐந்து பேரும் கண்டபடி திட்டி வந்தார்கள். அவர்களுக்கு அஞ்சிக்கொண்டு முக்கால்வாசி நேரம் வீட்டிலேயே கிடப்பார். உடம்பு உருக்குலைந்துபோய்ப் பலஹீனப்பட்டு வந்தது. இரண்டொரு மாசங் கழித்து 'டைபாய்ட்' ஜுரம் கண்டது. பழைய அன்பு மீண்டும் சுரந்தது, என் தாயாருக்கு. இரவு பகலாகத் தூங்காமல் அவருக்குச் சுசுருஷை செய்துவந்தாள். ஆனால் எல்லாம் வியர்த்தமாய்த்தான் போயிற்று! உயிர் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசையே அவருக்கு இல்லை. ஏற்கனவே நோஞ்சலாய் இருந்தார்; வியாதியும் பிடித்துக் கொண்டது; இனிமேல் கேட்பானேன்? ஒரு மாசங் கழித்து என் தகப்பனார் இறந்துபோனார்; என் தாயார் நெஞ்சு விரியும் படி கதறிக் கண்ணீர் சிந்தினாள். கடைசிக் காலத்தில் தான் அப்படி அசட்டையாக இருந்ததை எண்ணி எண்ணித் தன்னைத் திட்டிக்கொண்டதுதான் மிச்சம்!

என் தகப்பனார் சாகும்போது, "வைப்பாட்டின்மேல் எனக்கு வாஸ்தவமாகவே ஆசை இருந்தது என்று நினைக்கிறாய்? இல்லவே இல்லை. காமந்தான் அது; இப்போது தெரிகிறது" என்றார் அவளிடம்.

சில வருஷங்கள் சென்றதும் நான் பள்ளிக்கூடப் படிப்பை முடித்துவிட்டுச் சர்க்கார் ஆபீஸில் ஒரு குமாஸ்தாவாகச் சேர்ந்தேன். என் தாயார் எனக்குக் கல்யாணம் பண்ண நிச்சயித்தாள். அம்மா என்னைப் பிரஸவித்தபோது கூட இருந்து ஒத்தாசை புரிந்த எங்கள் அண்டை வீட்டுக்காரிக்கு என்னைவிட நாலு வயசு சிறிய பெண் ஒருத்தி இருந்தாள். அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும்போது எனக்கு வயசு இருபது. உலகத்தில், மற்றவர்களைப்போலவே நானும் விவாஹத்திற்குச் சம்ம

த்தேன். எப்படி இருந்தாலும் ஒரு பெண்ணைப் பண்ணிக்கொண்டுதானே ஆக வேண்டும்; பெற்றோர்களுக்குச் சம்மதமாய் இருந்தால் நாமும் இணங்கவேண்டியதுதானே? நம்முடைய தேசாபிமானிகளில் ஒருவர், "ஐரோப்பாவில், தாங்கள் நேசித்த பெண்களையே புருஷர்கள் விவாஹம் செய்துகொள்கிறார்கள். இந்தியாவில் நாம் கல்யாணம் பண்ணிக்கொண்ட பெண்ணை நேசிக்கிறோம்!" என்று தடபுடலாகப் பேசியிருக்கிறார்.

காதல் என்பது நாம் நினைத்த மாத்திரத்தில் எதிரே வந்து நிற்கிற வஸ்துவல்ல. முதலில், எனக்கு என் மனைவிமேல் காதலே இல்லை. அவளை வெறுத்தேன் என்று சொல்வதற்கும் இல்லை; ஆனால் என்ன தான் பழகினாலும் காதல்போல் ஆகுமா? பாவம், அந்தப் பெண் எனக்குச் சலிப்பு உண்டாகும்படி என்னிடம் அன்பு செலுத்தினாள். நானும் மேலுக்கு அவளிடம் பிரியமாய் இருப்பதுபோல் காட்டிக்கொண்டேன். பழகினால் எல்லாம் சரிப்பட்டுவிடும் என்பார்கள்; அது சுத்தப் பொய். நான் இப்படி நடிக்க நடிக்க, அவள் அதை அறியாமல் என்னிடம் பின்னும் அன்பாய் நடந்துவந்தாள்; வர வர என் பாடு ஸங்கடமாய் விட்டது. எங்களுக்குக் குழந்தை குட்டி ஒன்றுமில்லை. அது அவளுக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது. என்னதான் கண்ணீர் சிந்திப் பகவானைப் பிரார்த்தித்தும் அவள் வேண்டின வரம் கிடைத்தால்தானே? வீட்டிலோ பொழுது போகவில்லை. ஒன்றுமே பிடிக்கவில்லை; எல்லாம் அபரதண்டம் என்று தோன்றிற்று. அதனால், ஸதா ஆபீஸிலேயே உழைத்துக்கொண்டு கிடப்பேன். ஆபீஸ் கட்டுகள் பேரில்தான் எப்போதும் ஞாபகம். ஒரு தவறு ஏற்பட்டது கிடையாது. நான்பாட்டிற்கு ஓயாமல் வேலை செய்துகொண்டிருந்தேன். என்பேரில் புகாரே ஏற்பட்டதில்லை; 'பைலை'த் தவறி எங்கேயாவது வைத்தேன் என்ற பெயரும் எடுக்கவில்லை. ஒரு பிழைகூட இல்லாமல் பக்கக் கணக்காகப் பார்த்து எழுதுவேன். மற்றக் குமாஸ்தாக்களுக்கெல்லாம் என்னைக் கண்டால் பொறாமைதான். ஆனால், என் மனசுக்குத் தெரியாதா? எல்லாம் அபரதண்டம் என்றுதான் எனக்குப் பட்டது. இந்த மலையில் என்னவாவது முளைக்கிறதா? இது எதற்கு லாயக்கு? அதுபோலவே, உயிருள்ள ஒரு பிண்டத்தைச் சிருஷ்டிக்க யோக்கியதையற்ற நான் எதைக்கொண்டு பெருமை அடித்துக்கொள்வது?

என் துரதிர்ஷ்டம், என் தாயார் இறந்துபோனாள். என் தகப்பனார் போன பிற்பாடே அவளுக்கு உடம்பு சரியாக

இல்லை. கடைசியில், ஜலதோஷங் கண்டு, மார்ச்சளி கட்டி அவளும் போய்விட்டாள். பிறந்ததுமுதல் என்னைவிட்டுப் பிரியாமல் இருந்தாள் அவள். அழுகை பொங்கிவந்தது எனக்கு. என் மனைவிக்குத்தான் அதிக வருத்தம்.

"அவள் போய்ச் சேர்ந்தாள்! நாமும் சீக்கிரமே போக வேண்டியதுதான், அவள் பின்னாலே. அவ்ளாவது நம்மை விட்டுவிட்டுப் போனாள்; நாம் யாரை விட்டுவிட்டுப் போகப் போகிறோம்?" என்று சலித்துக்கொண்டாள். எனக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது; "பகவானுக்கே தயை இரா திருக்கும்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" என்றேன்.

அவள் என் காலடியில் விழுந்து, "தப்பு தப்பு! மன்னித்து விடுங்கள்" என்று வேண்டிக்கொண்டாள்.

"மன்னிப்பதற்கும் மன்னிக்காததற்கும் இப்போது என்ன நேர்ந்துவிட்டது!" என்றேன்.

எனக்கு என் மனைவி ஒருத்திதான் துணையாக இருந்தாள். வரவர அவள்மேல் எனக்குப் பற்று அதிகரித்துவந்தது. மூன்று வருஷங்களுக்குமுன் அவளும் இறந்துபோய்விட்டாள்; அந்தத் துக்கம் தாளாமல் நானும் போய்விடுவேனென்றுதான் நினைத் தேன். பெரியம்மை உக்கிரமாகக் கண்டிருந்தது அவளுக்கு. "என்னருகில் வரவேண்டாம், தொத்திக்கொள்ளும்" என்று விலகியே இருக்கச் சொன்னாள்.

"சட்! உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் இல்லை; எனக்கு நான் ஒருத்தன்தான் துணை. இந்தமாதிரி சமயத்தில் உன்னோடு இருப்பதைவிட்டு வியாதிக்குப் பயந்து பிரிந்திருப் பதா? ஒருகாலும் முடியாது" என்றேன்.

"என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் என்னவோ வெளிக்கு அன்பாகக் காட்டிக்கொண்டீர்கள் என்று எண்ணி யிருந்தேன். அது தவறுதான்" என்றாள்.

ஐயோ! நான் எவ்வளவுதான் நடித்து என்ன? எல்லாம் வீணே! ஆனால் கடைசியில்மட்டும் வாஸ்தவமான அன்பு தான் செலுத்தினேன்! அவள் மெல்லிய உருவத்தையும் முகத்தில் கொப்புளித்திருக்கும் அந்த அம்மை முத்துக்களையும் நெருங்கி நோக்கினேன். அவ் வறண்ட இதழ்களில் ஆசை குமுற ஒரு முத்தம் கொடுத்தேன். உள்ளூற எழுந்த அன்பின் சின்னம் அது; வெறும் வெளிவேஷம் அல்ல. பரம திருப்தி யுடன் அபூர்வமாகப் புன்முறுவல்செய்து, "என் அன்பே!" என்று அழைத்தாள். உடனே பிராணனும் போய்விட்டது.

உண்மை அன்பு உண்டாகும்போது இப்படி எல்லாம் அவலமாக வேண்டுமா !

அதுமுதல் நான் முன்னைவிட மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்தேன். ஆனால் காரியம் ஒன்றும் இராதிருக்கும்போது என் வாழ்நாள் வியர்த்தமாகக் கழிவதைக் குறித்து ஏங்கி, எப்போது நம் அருமை மனைவியைப் பார்ப்போம் என்று எண்ணமிடுகிறேன். எங்கோ ஓர் இடத்தில், நிச்சயமாக அவள் எனக்காகக் காத்திருக்கிறாள் ; அம்மையெல்லாம் தீர்ந்து, முன்னைவிடப் பன்மடங்கு அன்போடு எதிர்கொண்டழைக்கத் தயாராய் நிற்கிறாள் !

"குடம்பை தனித்தொழியப் புள்பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

என்ற வாக்குப்படி அவள் போனபிற்பாடு நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம்? அதனால்தான் புல்பூண்டு ஒன்றும் முளைக்காத இந்தக் குன்றுக்கு அடிக்கடி வருகிறேன். பழைய நினைவுகள் மீண்டும் வருகின்றன ; எல்லாம் வியர்த்தமே என்று தெளிகிறேன்.

* * * *

அசுவத்தன் இப்படிச் சொல்லிவிட்டுச் சற்றே சிரித்தான். ரத்னம், "அதோ பார் ; பொழுது சாய்ந்துவிட்டது ; இருட்டிவிடும். சீக்கிரம் திரும்பிப் போகலாம் வா !" என்றான்.

"ஒரு நாள் கழிந்தது வியர்த்தமாக ! நாளைக்கும் அப்படித்தான். யாராவது இதை யோசனை பண்ணிப் பார்க்கிறார்களா ?" என்று சொல்லிக்கொண்டே அசுவத்தன் எழுந்து செல்லலானான்.

முற்றும்



புயல் - மகாகவி டாகுர்

மொழிபெயர்ப்பு: த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

62 - அத்தியாயங்கள்

மலிவுப் பதிப்பு ரூ. 5 :: கலிகோப் பதிப்பு ரூ. 6

புகழ்மொழிகளிற் சில

ஆனந்த விகடன் :—* டாகுர் எழுதியுள்ள நவீனங்களுள் மிகச் சிறந்ததென்று கருதப்படும் "புயல்" என்ற காதற் கதை இப்போது வெகு அழகாகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு உயர்ந்த முறையில் அச்சாகி வெளியாகி யிருக்கிறது. * மனத்தைக் கவரும் விதமாக பைண்ட் செய்யப்பட்டிருக்கும் இப்பிரசுரம் புத்தகசாலைகளிலும் ஒவ்வோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷமாகும்.

சக்தி :— * இனிமையும் தெளிவும் இயல்புமான தெள்ளிய நடையில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் குமாரஸ்வாமி. அச்சும் பதிப்பும் அருமையா யிருக்கிறது.

ஹிந்துஸ்தான் :— * அற்புதமான நவீனம் 'புயல்'. அமிர்தம் போன்ற தமிழ்நடை டாகுரின் நவீனத்தைச் சிறப்புறச் செய்கிறது, மனத்துக்குத் திருப்தியளிக்கும் ஒப்பற்ற நவீனம்.

பாரததேவி :— * ஒவ்வொரு புத்தகசாலையிலும் வீட்டிலும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம்.

நாரதர் :— * இது ஓர் அழகிய வாழ்க்கைச் சித்திரம்.

THE TRIVENI :—* Sri Kumaraswamy's ability for the task of rendering Tagore into Tamil cannot be questioned. He is a student of Bengali Literature and has a distinct advantage over others thereby. Again, *his Tamil possesses much flexibility and resonance, so-well-equipped for the purpose of retaining Tagore's rich imagery and metaphors. Lastly, a word of hearty congratulations on the admirable way the Publishers have chosen to give us this book with its neat get-up and clear print.*

THE HINDU :—* The sympathetic treatment of the characters and the symmetrical development of the plot have been carefully dwelt upon. The Tamil rendering of the Novel is marked by clearness and precision.

THE MAIL :—* A great work by a great writer, *which has been very well done* into Tamil. The dialogue is full of pen and interest. * The ending of the story is manificent.

THE EDUCATIONAL REVIEW :—* It would prove a magnificent acquisition to School and College and Public and Private Libraries. The story is told in simple and homely manner.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை